ஆன்மீக சஞ்சிகை

# சிவ ஒளி

வைகாசி- ஆனி 2020

மாதாந்த மின்னிதழ்



இராவணன் பெயர் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டும், அது இருட்டடிப்பு செய்யப்பட்டமையும்

வட இலங்கையில் சிறப்புப் பெற்ற

## பைரவ வழிபாடு

மாணிக்கவாசகர் குருபூசை 26.06.2020

சிவ ஒளி
மாதாந்த மின்னிதழ்
வைகாசி–ஆனி 2020
ஆன்மீக மின்னிதழ்– ஒளி– 5

சிவஒளி ஆலோசனை தென்கயிலை
ஆதீனம் குரு முதல்வர் அகத்தியர் அடிகளார்

தலைமை ஆசிரியர்
அனைதுலக ஒருங்கிணைப்பாளர்
தென்கயிலை ஆதினம்
தென்கயிலை சிவா (பிரான்ஸ்)

உதவி ஆசிரியர்
நாட்டியக் கலைமணி
திருமதி.பவானி குகப்பிரியா (கொழும்பு)

படைப்புரிமை

சிவஒளியில்
வெளிவரும்
கட்டுரைகள் யாவும்
படைப்பாளிகளுக்கே
உரித்துடையதாகும்.

வடிவமைப்பு
மோகன ஷாந்தி

தென்கயிலை ஆதீனம்
இல–36 சிவன் மலை பீலியடி
கன்னியா, திருகோணமலை.
இலங்கை.

குரு முதல்வர்:
தவத்திரு அகத்தியர் அடிகளார்
00 94 77 509 8157.

இளைய பட்டம்:
திருமூலர் தம்பிரான் அடிகளார்.
00 94 77 173 1728

தொடர்புகளுக்கு:
தென்கயிலை சிவா
00 33 6 13 15 93 49
thenkailaisiva@gmail.com

# ஒளியில் ஒளியாகி... உயிரில் உயிராகி

**சிவஒளியில் பிரகாசித்து சிவப்பரம் பொருள் அருளாசியுடன் இணைந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம்.**

மூன்றுமாத காலமாக பெருந்தொற்றால் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த அவலநிலை தற்பொழுது சற்றுத் தணிந்து , தளர்ந்து விட்ட நிலை. என்றாலும் மழை விட்டும் தூவானம் விட்டபாடு இல்லையென்ற நிகழ்வாக பெருந்தொற்று பெருமெடுப்புச் செய்கின்றது. அதே வேளை பெருந்தொற்றுடன் வாழ்வதைத் தவிர வேறுவழியில்லை என்கின்ற நிலைக்கு உலகம் தன்னைத் தயார்படுத்தி வருகின்றது. அத்துடன் சமூக இடைவெளியை தொடர்;ந்து கடைப்பிடிக்கும்படியும் முக மறைப்பை தொடர்ந்து பாவிக்கும் படியும் சுகாதார அமைச்சுக்கள் நாடுகளெங்கும் அறிவுறுத்தி வருகின்றது. தற்பொழுது மீண்டும் மெல்ல மெல்ல பெருந்தொற்று தலை காட்ட ஆரம்பித்துள்ளது.

ஆனால், மனித சமுதாயம் பெருந்தொற்றுக்காலத்தில் ஆடி அடங்கிப் போய், கூனிக் குறுகி வீட்டைவிட்டு வெளியே செல்லாமல் பதுங்கிக் கிடந்த காலத்ததையெல்லாம் மறந்து விட்டார்கள். நீதி நேர்மை என்பதை மறந்து, பணத்தாசை,பதிவியாசை,மண்ணாசை என அனைத்து ஆசைகளையும் அடைவதற்கு துடியாய்த் துடிக்கிறார்கள்... பெருந்தொற்றுக் காலம் பாடம் புகட்டிய காலமென்பதை மறந்து விட்டார்கள். இறை சக்தியை ஏளம் செய்து நினைத்ததை சாதிக்கத் துணிந்து விட்டார்கள். தர்மம்,புண்ணியம்,இரக்கம் என்று சொன்ன வார்த்தைகளை மறந்து விட்டார்கள்.

● தென்கயிலை சிவா

**படைப்பாளிகள்:**

- தமிழ் நிதி அருணா செல்லத்துரை - (வவுனியா)
- கலாநிதி பாலசுந்தரம் இளையதம்பி - (கனடா)
- கலாநிதி பால சிவகடாட்சம் - (கனடா)
- கலாபூசணம் நா.வை.குமரிவேந்தன் - (கிளிநொச்சி)
- சித்தமருத்துவர் தியாகராஜா சுதர்மன்- (மானிப்பாய்)
- திருமதி பவானி சற்குணசெல்வம் - (நெதர்லாந்து)
- மருத்துவதாதி சிவகுமாரி ஜெயசிம்மன் வினாசித்தம்பி (நெதர்லாந்து)
- சித்தமருத்துவர் எம்.ஏ உசைன் - (சென்னை)
- தென்கயிலை ஞானக்கவி தேசபாரதி இராஜலிங்கம் - (கனடா)
- வைத்தியக் கலாநிதி. சிவஸ்ரீ சன பிரதாபன் தேசிகர் - (இலங்கை)
- பரதசூடாமணி கௌசலா ஆனந்தராஜா - (பிரான்ஸ்)
- சிவபாலன் மயூரன் BA (Hons)
- கலாநிதி திருமதி எஸ்.கேசவன் - (கிழக்கு பல்கலைக்கழகம்)
- எழுத்தாளர் துலாஞ்சன் - உதவிப் பிரதேச செயலாளர் (வெருகல்)
- தியாக மயூரகிரிக் குருக்கள் - (யாழ்ப்பாணம்)
- சைவத்தமிழ் வித்தகர் சந்திரலிங்கம் ரமேஸ் - (மன்னார்)
- வித்தியா கலாபமணி. கிருத்திஸ்ரீ எஸ்.ரமேஸ் (குருனாகல்)
- இளங்கலைமணி சுரேந்திரா நரேந்திரா (கிழக்கு பல்கலைக்கழகம்)
- வரலாற்று ஆசிரியர் எஸ்.கே.எஸ் திருச்செல்வம் (இலங்கை)
- சைவப்புலவர் சித்தாந்தரத்தினம் கந்தையா பத்மானந்தன் (இலங்கை)

இவற்றையெல்லாம் பார்க்கும் போது, மீண்டும் பெருந்தொற்று பாடம் புகட்ட தொடங்கிவிடுமோ என்ற எண்ணம் பரவலாக அலையடிக்கத் தொடங்கிவிட்டது. அறநெறி வாழ்வும், ஆன்மீகப் பலமும் மண்ணிலும் மனதிலும் வேரூன்றி பெரு விருட்சமாக மாறவேண்டும். அறநெறி வாழ்வும் ஆன்மீகபலமும்தான் நாளை நாங்கள் எதிர் பார்க்கும், ஆனந்தமான, ஆரோக்கியமான வாழ்வும் சிறந்து விளங்கும். ஒவ்வொரு மனங்களும் தன்னிலை அறிந்து செயற்பட வேண்டிய காலம் கனிந்திருக்கிறது.

விரைவில் எமது தேசத்திலும்,உலகமெங்கும் அறநெறி வாழ்வும் ஆன்மீக பலமும் பரவும் நம்பிக்கை எல்லோர் மனதிலும் துளிர் விடவேண்டும். மாற்றம் கண்டு வரும் உலக ஒழுங்கு விதிகள்... மானுடத்தை நேசிக்கும், மானிட தர்மத்தை மதிக்கும் பாதையில் பயணிக்க வேண்டும்... இதுவே எம் எல்லோருக்கும் முன்னால் உள்ள எதிர்பார்ப்பேயாகும்.





# அன்பே சிவமாய்

ஓம் நமசிவாய.

**தெ**ன்கயிலை ஆதீனத்தின் தாய்ச்சபையான, அன்பேசிவம். சிவனருட்சபையின் திட்டங்களில் ஒன்றான நித்தியபூசை செய்ய முடியாது பூட்டப்பட்டிருக்கும் கோயில்களுக்கு செந்தமிழில் பூசை செய்யும் அருட்சுனைஞர்களைப் பயிற்றுவிக்கும் திட்டம் தற்பொழுது தென்கயிலை ஆதீனத்தின் மடாலயத்தில் ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.



## செந்தழிழ்ப் பூசைப் பயிற்சி

### வயது எல்லைகள்பால் வேறுபாடுகள் கிடையாது

தென்கயிலை ஆதீனத்தின் முதற்குரு.தவத்திரு அகத்தியர் அடிகளார், இளையபட்டம் திருமூலர் தம்பிரான் அடிகளார் ஆகியோர் மேற்பார்வையின் கீழ் பயிற்சிகள் இடம்பெறுகின்றன. அம்பாறை மாவட்டத்தை;ச் சேர்ந்த தலைமை அருட்சுனைஞர் உயிரொளி சிவம் பிரதாபனார் அவர்களும், உதவி அருட்சுனைஞர் சனுஜன் ஐயா அவர்களும் மேற்படி பூசைப்பயிற்சிக்கு தலைமையேற்று பயிற்சி அளிக்கப்படுகின்றார்கள்.

இப் பயிற்சிகளுக்கு வயது எல்லைகள் கிடையாது. பால் வேறுபாடுகள் கிடையாது. சமயப்பற்றும் ஆன்மீக தாகமும் கொண்ட விருப்புடையவர்களைத் தெரிவு செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு பயிற்சிக்குழுவிற்கும் தென்கயிலை ஆதீனத்தின் முதற்குரு.தவத்திரு அகத்தியர் அடிகளார் ஆரம்பத்தில் முறைப்படி சிவதீக்கை கொடுத்த பின்னர் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும். ஒவ்வொரு குழுவும் பத்து தொடக்கம் இருபது பேர்வரை இருப்பர்.

ஒரு வாரத்திற்கான தொடர் முதற்கட்ப்பயிற்சி பெற்றுக்கொண்ட பின்னர் ஆதீனத்தின் குருபீடத்தால் அதற்குரிய சான்றிதழ் வழங்கி மரியாதை செய்யப்படுவர். அவர்களுடைய விருப்பத்தின் பெயரில் தொடர்ந்து அடுத்தகட்ட பயிற்சிகளுக்கு முன்வரும் வேளை அடுத்த கட்டப் பயிற்சிகளையும் ஆதீனம் வழங்கும்.



## பெட்டிச் செய்தி

ஒருவர் முழுமையாக தன்னை ஆன்மீகத்தில் அர்ப்பணித்து துறவறத்திற்குரிய பயிற்களை மேற்கொள்ள விருப்பம் கொள்ளும் பட்சத்தில் அதற்குரிய வரையறைக் கட்டுப்பாடுக ளுடன் ஆதீனத்தில் தங்கியிருந்து குருகுலப் படிப்பைத் தொடர வாய்ப்புக்கள் செய்து கொடுக்கப்படும்.

பயிற்சியில் முதலாவது குழுவில் இரண்டு பெண்கள் உட் பட பதின்மூன்று பேர் தற்பொழுது தோற்றியிருக்கின்றார்கள். பயிற்சி காலை 7 00 மணி தொடக்கம் மாலை 5 00 மணிவரை நடைபெறும். காலை, மதியப் போசனம் வழங்கப்படுகின்றது. வேறு மாவட்டங்களில் இருந்து வருகை தருகின்றவர்களுக்கு தங்குமிட வசதியுடன் உணவும் வழங்கப்படும் . முதற்கட்டப்ப யிற்சி ஒரு வாரம் இடம்பெறும். பயிற்சியில் பெண்கள் கலந்து கொள்ளும் நிலையில் அவர்கள் தங்குவதற்கு வேறு பாதுகாப் பான இடத்தை ஆதீனம் அமைத்துக் கொடுக்கும்.



பிற மாவட்ட,த்திலும்,வலையத்திலும்,கோட்டத்திலும் செந் தமிழ்ப் பூசை வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்புவோ ரைத் தெரிவு செய்து ஏற்பாடு செய்யுமாறு அன்பே சிவம். சிவனருட்சபையின் மாவட்ட, வலைய இணைப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். அதற்குரிய சரியான நேரத்தையும் காலத்தையும் ஏற்பாடு செய்த பின்னர் பயிற்சி கள் தொடரப்படும். .



விரைவில் அபரக்கிரியை என்று சொல்லப்படுகின்ற இறுதிக் கிரியை பயிற்சிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.



# அனுராதபுர காட்டில் நமது கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து கிடக்கும் ஆறு சோழர்காலக் கோயில்கள்



**சி**வபூமியின் சுவடுகளைத் தேடி இலங்கையின் பண்டைய தலைநகரான அனுராதபுரத்திற்குச் சென்றேன். அனுராதபுரத்தில் 40 இந்துக் கோயில்களின் சுவடுகள் உள்ளன என அறிந்தேன். அவற்றைக் கண்டறிய அனுராதபுரத்திற்கு இரண்டு தடவைகள் சென்று ஆய்வுகளை மேற்கொண்டேன். அப்போது ஜேதவனாராம விகாரை வளாகம், அபயகிரி விகாரை வளாகம் ஆகிய பகுதிகளில் யக்ஷ, யக்ஷி தெய்வங்களின் அழகிய சிற்பங்கள் பலவற்றைக் கண்டேன். அவை மட்டுமல்லாது பலவித வடிவங்களில் நாகராஜரின் சிற்பங்களையும் ஜேதவனாராம, அபயகிரி ஆகிய விகாரை வளாகங்களில் காணக் கிடைத்தது. பேராசிரியர் சிற்றம்பலம் இவற்றில் சிலவற்றைப் பற்றித் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இவற்றைக் கண்டவுடன் ஆய்வு செய்யும் ஆர்வம் அதிகரிக்க அடுத்தடுத்து பல தடவைகள் அனுராதபுரத்திற்கு சென்று பண்டைய நகரில் இருந்த எல்லா இடங்களிலும் ஆய்வுகளை மேற்கொண்டேன்.

இக்கால கட்டத்தில் 130 வருடங்களுக்கு முன்பு எச்.சி.பி.பெல் எனும் ஆங்கிலேய ஆராய்ச்சியாளர் எழுதியிருந்த ஆய்வுக் குறிப்புகளைத் தேடி இலங்கைத் தொல்பொருள் திணைக் களத்திற்கு சென்று அவை பற்றிய விபரங்களையும் குறிப்பெடுத்தேன். அதில் அனுராதபுரத்தின் வடக்கில் இருந்த ஆறு கோயில்களைப் பற்றியும் அவர் குறிப்பிட்டிருந்தார். அவரது குறிப்பின் படி இந்த ஆறு கோயில்களும் ஒரே இடத்தில் உள்ளன. இவற்றை பெல் அவர்கள் தமிழர் இடிபாடுகள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மீண்டும் மூன்றாவது தடவையாக அனுராதபுரத்திற்கு சென்றேன். அனுராதபுரம் பௌத்த யாத்திரீகர்களாலும், சுற்றுலாப் பயணிகளாலும் எப்பொழுதும் நிரம்பி வழியும் ஓர் சுற்றுலாத்தலம். அன்றும் அப்படித்தான். கூட்டம் களை கட்டியது. இந்தத்தடவை பெல் அவர்கள் குறிப்பிட்டிருந்த கோயில்களைத் தேடி அபயகிரி விகாரையின் வடக்குப் பக்கம் உள்ள பங்குளிய, பெருமியன் குளம், அசோகாராம,



என்.கே.எஸ்.
திருச்செல்வம்
வரலாற்று ஆய்வாளர்
இலங்கை
nksthirugmail.com



விஜேராம ஆகிய இடங்களுக்குச் சென்றேன். அங்கெல்லாம் பெல் குறிப்பிட்ட கோயில்களைக் காண முடியவில்லை.அப்போதுதான் இவ்விடங்களுக்கு நடுவில் இருந்த ஓர் காட்டுப்பகுதி என் கவனத்தை

ஈர்த்தது. அக்காட்டுக்குள் சென்று பார்க்க வேண்டும் எனும் ஆவல் ஏற்பட்டது.

அப்பகுதியில் தற்செயலாக சந்தித்த இரு சிங்கள தம்பிமாரின் உதவியுடன் காட்டுப் பகுதிக்குள் நுழைந்தேன். சுற்றுலாப் பயணிகள் யாரும் செல்லாத இடம். பட்டப் பகலில் கூட ஆள் நடமாட்டம் இல்லாத இடம். பறவைகளும், காட்டு வண்டுகளும் கத்தும் ஓசை மட்டுமே காதுகளில் கேட்டுக் கொண்டிருந்தது. சூரிய வெளிச்சமே படாமல் சற்று இருட்டாக அக்காட்டுப்பகுதி காணப்பட்டது.

காட்டுக்குள் சிறிது தூரம் நடந்து சென்று கொண்டிருந்த போது காலில் ஏதோ தடுக்கி விழப் பார்த்தேன். என் காலில் தடுக்கியது என்னவென்று பார்த்தபோது தான் தெரிந்தது, அது சிற்பங்கள் செதுக்கப்பட்ட ஓர் நாகக்கல். முக்கால்வாசி மண்ணுள் புதையுண்டு அக்கல் காணப்பட்டது. ஆர்வம் மேலிட அப்பகுதியில் இருந்த பற்றைகளையும், காய்ந்த சருகுகளையும் விலக்கிப் பார்த்த போது ஆச்சரியமும், ஆனந்தமும் அடைந்தேன். அவ்விடத்திலே காட்டுப் பற்றைகளுள் மறைந்தும், மண்ணுள் புதையுண்டும் ஏராளமான கோயில்களின் இடிபாடுகளும், பரந்த அளவில் நூற்றுக்காணக்கான கற்தூண்களின் துண்டங்களும், செங்கல் அத்திவாரங்களும், கட்டிடங்களின் சிதைவுகளும், ஓர் தீர்த்தக் கேணியின் இடிபாடுகளும், தீர்த்தக் கேணியின் படிக்கட்டுகளும் காணப்பட்டன. அதுதான் எச்.சி.பி.பெல் அவர்கள் குறிப்பிட்டிருக்கும் கோயில்களின் வளாகம் என்பதைப் புரிந்து கொண்டேன்.

என்னோடு வந்த தம்பிமார் இருவரும் இதுதான் 'தமிழர்கள் அழித்த பௌத்த விகாரைகளின் சிதைவுகள்' எனக் கூறினார்கள் அந்தசிறுவர்களுக்கு இப்படித்தான்உண்மைக்குப்புறம்பாகஓர்பொய்யைக் கூறிவைத்துள்ளார்கள்என்பதுபுரிந்தது. சுமார் 400 மீற்றர் நீள, அகலம் கொண்ட இக்காட்டுக்குள் எல்லா இடத்தையும் சுற்றி வந்தேன். ஒரு மணி நேரத்தின் பின் வெளியே வந்தோம்.

இது போன்று பாதையின் அடுத்த பக்கத்தில் உள்ள காட்டிலும், விஜேராம விகாரைக்கு செல்லும் வீதியில் உள்ள காட்டிலும் அழிக்கப்பட்ட விகாரைகளின் சிதைவுகள் இருப்பதாகக் அவர்கள் கூறினர். சிங்களத் தம்பிமார்களின் உதவியோடு பாதையின் கிழக்குப் பக்கத்தில் உள்ள காட்டிற்கும் சென்று பார்த்தேன். அங்கும் கோயில்களின் சிதைவுகளைக் கண்டேன். பின்பு தம்பிமார் இருவரையும் அனுப்பிவிட்டு விஜேராம காட்டுப் பகுதிக்குச் சென்றேன். அங்கும் சிதைவுகள் பெருமளவில் காணப்பட்டன.1000 வருடங்களுக்கு முன் ஒரே கோயில் வளாகமாக இருந்த இப்பிரதேசம் இப்போது பாதைகள் அமைக்கப்பட்டு மூன்று துண்டுகளாகப் பிரிக்கப் பட்டு விட்டது.

சுமார் 700 மீற்றர் அகலமும், 1500 மீற்றர் நீளமும்



கொண்ட அந்தக் காட்டுப்பகுதி முழுவதும் கோயில்களின் சிதைவுகள் பரந்து காணப்பட்டன. மொத்தமாக இக்காட்டுப் பகுதியில் சுமார் 20 கட்டிடங்களின் இடிபாடுகள் காணப்பட்டன. குறைந்தது ஆறு கோயில்கள் இவ்விடத்தில் இருந்தன. வரலாற்று ஆய்வாளர் எச்.சி.பி.பெல் அவர்களின் ஆய்வுக் குறிப்புகளில் இவற்றை Tamil Ruins (தமிழர் இடிபாடுகள்) எனக் குறிப்பிட்டுள்ளார். 1893 ஆம் ஆண்டு பெல் அவர்கள் இவ்விடத்தில் இருந்து இரண்டு சிவலிங்கங்கள், மூன்று அம்மன் சிலைகள், மூன்று சூரிய பகவான் சிலைகள் உட்பட பல தொல்பொருள் சின்னங்களைக் கண்டெடுத்தார். அக்குறிப்புகளில் பெல் குறிப்பிட்டுள்ள அத்தனை இடங்களும் இங்கே துல்லியமாகக் காணப்பட்டமை ஆச்சரியத்தையும், பெருமகிழ்ச்சியையும் உண்டாக்கியது.

1000 வருடங்களுக்கு முன்பு அனுராதபுரத்தில் ஓர் சைவ சாம்ராஜ்யம் செழிப்புடன் விளங்கிய இடம் இன்று மனிதர்கள் உற்புகக்கூட முடியாத அளவிற்கு அடர்ந்த காடு மண்டிப்போய் கிடக்கிறது. மந்திர முழக்கமும், மணி ஓசையும் இடை விடாமல் ஒலித்துக் கொண்டிருந்த ஓர் இடம் இன்று மயான அமைதியுடன் உறங்கிக் கொண்டிருந்தது. இந்துக் கோயில்கள் காணப்படும் இக்காட்டுப் பகுதியைச் சுற்றி இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தினால் பெருமியன் குளம் ஒதுக்கப்பட்ட பிரதேசம் என பெயர் பலகை போடப் பட்டுள்ளது.

பண்டைய அனுராதபுர நகரில் உள்ள பௌத்த வழிபாட்டிடங்கள் அனைத்தும் கலாசார முக்கோணத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு பௌத்த மக்கள் வழிபடும் வகையில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.ஆனால் சைவ மக்களின் மூதாதையர்களால் வழிபடப்பட்ட இந்துக் கோயில்கள் எதுவும் புனரமைக்கப்படாமல் தேடுவாரற்று காடுகளுக்குள் மறைந்து போய்க் கிடக்கின்றன. இதன் மூலம் புராதன அனுராதபுர இராச்சியத்தில் சைவசமயம் இருக்கவில்லை எனும் தோற்றப்பாட்டை எதிர்கால சந்ததியினர் நோக்கும் நிலை உருவாகியுள்ளது. அதேசமயம் இங்கிருந்து எடுக்கப்பட்ட அழகிய இந்து தெய்வச் சிலைகள் இலங்கையின் நூதன சாலைகளையும், தொல்பொருள் காட்சிச் சாலைகளையும் அழகு படுத்திக் கொண்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் வகையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

# ஓ இளைஞனே!



திருமதி.
**பவானி சற்குணசெல்வம்**
(நெதர்லாந்து)


இளைஞனே! நீ தடுமாற்றம் இல்லாமல் போராடு வெற்றி நிச்சயம். பொதுவாக ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் வளர்ச்சிக் கூறுகளின் நிலைத்தன்மைக்கும் உந்து சக்திகளாக பல்வேறு காரணிகள் அறியப்பட்டாலும் அவற்றுள் முதன்மையானது மட்டுமல்ல தவிர்க்க முடியாத சக்தியாகவும் முன்நிற்பது அந்நாட்டின் இளைஞர்களே ஆவர். புதிய சிந்தனைகள், மேம்பட்ட திறன்கள், புதுமைகளை உள்வாங்கும் நிலை, தளராத முயற்சி, வளர்ச்சி நோக்கிய இலக்கு, நவீன உத்திகளைக் கையாளுதல் போன்ற எண்ணற்ற பரிமாணங்கள் இளைஞர்களின் தகுதியையும் தரத்தையும் உயர்த்திப் பிடிப்பதால் அவர்களை விலக்கி வைத்துவிட்டு வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வது இயலாததாகும். அறிவு, ஆற்றல், அனுபவம், துணிவு போன்றவற்றின் அடிப்படையில் வளரும் நாடுகளில் மட்டுமல்ல அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிலும் கூட இளைஞர்களின் செயல்பாடுகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுவதால் மாற்றங்களுக்கு வித்திடும் இன்றைய உலகில் இளைஞர்கள் மாற்று சக்திகளாகவும் உருவாகி நிற்கின்றனர்.



19 வயது முதல் 35 வயது வரை உள்ள அனைவருமே இளையோர் தான். அது மட்டுமல்லாமல்; துடிப்புடன், பயம் என்பதே இல்லாமல் பல எதிர்ப்புகளையும் தாண்டி முழு ஆற்றலுடன் எந்த ஒரு செயலையும் செய்து முடிப்பவன் இளைஞன். இத்தகைய மனபலத்தையும் ஆற்றலையும் படைத்த இளைஞன் இன்று தன்னை அறியாமலேயே நாகரிகம், வாழ்க்கை சூழ்நிலை போன்ற காரணங்களால் தன்னையே அழித்து, தன் வாழ்வையே கேள்விக்குறியான ஒன்றாக மாற்றி வருகின்றான்.

## இளைஞன் தடுமாறும் சூழல்:

இளம் வயது புதிய மாற்றம் ஏற்படும் காலம், பொதுவாக மன அழுத்தமும், கவலையும் நிறைந்த காலம் என ஐக்கிய நாடுகளின் ஓர் அறிக்கை விவரிக்கிறது. இளைஞர்களால் பொதுவாக மனஅழுத்தத்தையும், கவலையையும் ஆக்கபூர்வமான விதத்தில் சமாளிக்க முடிவதில்லை. அதற்கான அனுபவம் அவர்களிடம் சிறிதும் இருப்பதில்லை. இந்த நேரங்களில் சரியான வழிநடத்துதல் இல்லை என்றால் இளைஞர்கள் எளிதாக தீய வழிதனில் சென்று விடுவார்கள்.



## குடும்ப சூழ்நிலை காரணம்:

'பல குழந்தைகள் இருக்கிறார்கள் ஆனால், எல்லாக் குழந்தைகளுக்கும் நல்ல தாயும் தந்தையும் கிடைப்பதில்லை' என்று திருத்தந்தை 23-ம் அருளப்பர் கூறுகிறார். கடந்த 30 - ஆண்டுகளாகத் தோன்றியிருக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள் கூட இன்று கட்டுப்படுத்த முடியாத இளைஞர்களையே தோற்றுவிக்கிறது என்று டாக்டர் ராபர்ட் ஷா கூறுகிறார்.

தாய், தந்தையிடையே நடக்கும் சண்டைகள் கூட குழந்தைகளை, இளைஞர்களை பாதிக்கிறது. உதாரணமாக அமெரிக்க குழந்தைகளில் 3 பங்குக்கும் அதிகமானோர் 18 வயதினை எட்டுவதற்கு முன்பே பெற்றோரின் விவகாரத்தால் பாதிக்கப்படுகின்றனர் என ஜர்னல் ஆஃப் இன்ஸ்ட்ரக்னல் சைக்காலஜி என்ற பத்திரிகை அறிக்கை செய்கிறது. மேற்கத்திய நாடுகளும் இது போன்ற புள்ளி விவரங்களை வெளியிடுகின்றன. இப்படி பெற்றோரின் கண்காணிப்பு இல்லாமல் வளரும் பிள்ளைகள் பெரும்பாலும் தனிமையை அனுபவிக்கிறார்கள், பிரச்சனையை விலைகொடுத்தே வாங்குகிறார்கள்.

## வரம்புகள் இல்லாதது:

தெளிவான வரம்புகள் இல்லாதது இளம் குற்றவாளிகள் தோன்றுவதற்கு காரணமாக அமையலாம். 'தான் கஷ்டப்பட்டதைப் போன்று தன் பிள்ளையும் எந்த கஷ்டத்தையும் அனுபவிக்கக் கூடாது' என்பதற்காக 'கூடாது' என்ற வார்த்தைக்கே இடமில்லாமல் எவ்வித வரம்புகளும் வைக்காமல் அளவுக்கு அதிகமாக செல்லம் கொடுத்து இன்று வளர்க்கப்படும் பிள்ளைகள் 'மற்றவர்களுக்கும் வாழ்க்கையும், உணர்ச்சிகளும், தேவைகளும், விருப்பங்களும் உண்டு என்பதை உணர வாய்ப்பில்லை' 'மற்றவர் இடத்தில் தன்னை வைத்து பார்க்கத் தெரியாத எந்த பிள்ளையாலும் அன்பு காட்டவும் முடியாது'. அது மட்டுமல்லாமல் கண்டிப்பு இல்லாமல் வளர்க்கப்படும் பிள்ளைகள் சுயக்கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வது மிகக் கடினம் என்பதை பெற்றோர்கள் உணருவதில்லை.

## இணையமும் இளையோரும்:

பெரும்பாலான இளைஞர்கள் சமூக வலை தளங்களுக்கு அடிமையாக மாறி தன் வாழ்வையே அழித்து வருகிறார்கள். 2004-ம் ஆண்டு துவங்கப்பட்ட கயஉநடிழழம என்கிற சமூக வலை தளம் இன்று 800 மில்லியனுக்கும் அதிகமான பயனாளர்களை கொண்டு இயங்கி வருகிறது. இதன் நிறுவனர் அவர்கள் உரையாற்றுகையில் இந்த சமூக வலை தளத்தின் மூலம் இளைய சமுதாயத்தின் மறுமலர்ச்சியையும்இ எழுச்சியையும் மிக விரைவில் உலகமெங்கும் காண முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார். ஆனால்இ இது போன்ற சமூக வலைதளங்களின் வீரியவேர்கள் உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று தன் பாதையை அமைத்துக் கொள்ளும் என்று அன்றைய தினம் யாரும் அறிந்திருக்கவில்லை. நம் இளைஞர் சமுதாயம் அறிவார்ந்த விஷயங்களை பகிர்ந்து கொள்வதில் எந்த தவறும் கிடையாது. அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்பது போல எந்த ஒரு பழக்கமும் நம்மை ஆளாமல் நாம் தான் அதனை ஆள வேண்டும் என்பதை அறியாத இளைஞர்களாய் தன் வாழ்வின் பெரும்பகுதியை நண்பர்களுடன் உடயவடிபெ செய்வதிலேயே கழித்து விடுகின்றனர். இது இன்றைய இளைஞர்களின் பொழுதுபோக்காகவும் மாறியிருக்கிறது.

## ஆடம்பரத்தை நாடும் இளையோர்:

உழைத்து சேர்த்த பொருளை யாருக்கும் செலவிடாமல் சேர்த்து வைக்கத் தெரிந்த தலைமுறை அதை என்ன செய்வது என்று தெரியாது இருந்த நேரத்தில் தான் மேலை நாட்டு கலாச்சாரம் நம் இளையோர் மத்தியில் ஊடுருவ ஆரம்பித்தது. அந்த நேரத்தில் தான் 'தான் வாழ பிறரையும் வாழ விட வேண்டும் என்ற சிந்தனையை மறந்து சம்பாதித்த பொருளை நல்ல வழிதனில் செலவழிக்க



வேண்டும் என்ற மனதுடன் கூடிய மனிதாபிமானம் இல்லாத' இளைஞர்கள் உருவாக்கப்பட்டனர். ஆடம்பரமாக சுயநலத்துடன் கூடிய வாழ்க்கை வாழ்ந்த இளைஞர்கள் தங்கள் சேமிப்பை இழந்தார்கள்.

## வுசநநவ என்னும் பெயரில் மது:

மது அருந்துவோரின் சராசரி வயது 13 என்கிறது ஒரு புள்ளி விவரம்.இன்றைக்கு திருமணத்திற்கு மது, இறப்புக்கு மது என இன்றைய இளையோர்கள் தன்னுடைய வாழ்வில் நல்லது அல்லது கெட்டது என எது நடந்தாலும் தானும் மது அருந்தி தன் நண்பர்களுக்கும் வுசநநவ (மது) வைப்பது இன்றைக்கு நாகரிகமாக மாறிவிட்டது. வுசநநவ என்னும் பெயரில் சின்னதாக அன்றைய தின மகிழ்ச்சியை அனுபவிக்க அல்லது துக்கத்தை மறக்க என அவர்கள் ஆரம்பிக்கும் மது பழக்கமானது நாளை தன் வாழ்வையே அழித்து விடும் என்பதை அறியாத இளைஞர்களாய் பெரும்பாலான இளைஞர்கள் மதுவை தன் வாழ்வின் ஒரு பகுதியாக மாற்றி வருகின்றார்கள்.

உலக சுகாதார மையம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தின் படி: 2 பில்லியன் மக்கள் மது பழக்கம் உடையவர்கள் எனவும்இ 75 மில்லியனுக்கு மேற்பட்டோர் மது பழக்கத்தால் ஏற்பட்ட உடல் நோய்களால் அவதிப்படுகின்றனர். உலகம் முழுவதும் ஆண்டுதோறும் சுமார் 2.5 கோடி பேர் மது காரணமான நோய்களால் இறக்கின்றனர். 15 முதல் 29 வயதுக்கு உட்பட்டோரில் 9மு பேரின் இறப்புக்கு மதுவே காரணமாக அமைகிறது. கடந்த 30 ஆண்டுகாலமாக வளர்ந்து வரும் நாடுகளில் குறைந்து வரும் நிலையில் வளரும் நாடுகளில் அது அதிகரித்துக் கொண்டே வருகிறது.

## நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்களிப்பு

இளைஞர்களின் பங்களிப்பும் மாறுபட்ட அணுகுமுறையும் நாட்டின் வளர்ச்சிப் போக்கினைத் தீர்மானிப்பதற்குப் பேருதவியாக இருந்ததால் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கேற்ப நாட்டின் வளர்ச்சி விரைவுபடுத்தப்பட்டது. அந்த வகையில் இளைஞர்கள் நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் வளர்ச்சித் தூதுவர்களாக கருதப்பட்டனர். எதிர்காலம் மட்டுமன்றி நிகழ்காலத் தேவைகளையும் கருத்தில் கொண்டு வளர்ச்சிச் சமத்துவத்தைப் பரவலாக்குவதற்கான செயல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் வளர்ச்சிப் பங்காளிகளாகவும் செயல்பட்டு வருகின்றனர்.

அறிவுட் ஆற்றல்ட் அனுபவம்ட் துணிவு போன்றவற்றின் அடிப்படையில் வளரும் நாடுகளில் மட்டுமல்ல அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிலும் கூட இளைஞர்களின் செயல்பாடுகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுவதால் மாற்றங்களுக்கு வித்திடும் இன்றைய உலகில் இளைஞர்கள் மாற்று சக்திகளாகவும் உருவாகி நிற்கின்றனர். உலகில் சில நாடுகள் தான் மக்கள்தொகையில் கணிசமான அளவு இளைஞர்களை வரப்பிரசாதமாகப் பெற்றுள்ளது. எனவே ஒவ்வொரு நாட்டிலும் அங்கு நிலவும் சூழ்நிலைக்கேற்ப அந்நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர்களின் பங்களிப்பு இன்றியமையாததாக உள்ளது. பன்முகத் திறன் கொண்ட இவர்கள் அனைத்து துறைகளிலும் சாதித்து வருகின்றனர்.

தகவல் தொழில்நுட்பப் புரட்சியைத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிடும் நாடுகள் பின்தங்கிய நாடுகளாகவே இருக்கும் என்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. ஆனால், இன்று அந்நிலை மாறி எந்தவொரு நாடு இளைஞர்களின் ஆற்றலைப் பயன்படுத்தத் தவறுகின்றதோ அல்லது திட்டமிடாமல் தவறான வழிகளில் பயன்படுத்திட முயலுகின்றதோ அது வளர்ந்த நாடுகளின் பட்டியலை எட்டிப் பிடிக்க இயலாது என்பதும் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பயணிக்க முடியாது என்பதும் வெட்ட வெளிச்சமாகிறது.

எதிர்காலத் தலைமுறையின் தூண்களாகக் கருதப்படும் இளைஞர்கள் சமூகம், மக்கள், நாடு ஆகியவற்றின் மீது அக்கறையுடனும் ஈடுபாட்டுடனும் செயல்பட்டால் சமு



கச் சீர்கேடுகள் குறைந்து வளர்ச்சிக்கான நேர்மறைச் சூழல் உருவாகும். இளைஞர்கள் தங்களது தனித் திறன் களை தயக்கமின்றி வெளிப்படுத்தி வளர்ச்சிக்கான சூழலை உருவாக்கிடவும் அதனைத் தொடர்ந்து ஆக்கப் பூர்வமான வழிகளில் பாதுகாத்திடவும் சில மேம்பாட்டு நடவடிக்கைகள் அவசியமாகின்றன. அவை:

**✱இளைஞர்களை இலக்கு சார்ந்த செயல்பா டுகளில் ஈடுபட வைத்தல்**

**✱வளர்ச்சியை முன்னெடுக்கும் சமூக நிகழ் வுகளில் பங்கேற்கச் செய்தல்**

**✱மாற்றங்களை முன்னெடுக்கும் கல்வியை வழங்குதல்**

**✱சரியான முடிவுகளைப் பின்பற்றிட வலியு றுத்துதல்**

**✱ பாரபட்சமின்றி செயல்பட அறிவுறுத்து தல்**

**✱சுய கட்டுப்பாடு, ஒருங்கிணைந்த செயல் பாடு, புரிந்து செயல்படுதல் போன்ற திறன் களை வளர்த்தல்**

**✱சமூகம் மற்றும் வளர்ச்சியின் பரிமாணங் கள் பற்றிய புரிதலை உருவாக்குதல்**

**✱புத்தாக்க முயற்சிகளுக்குத் தேவையான களம் அமைத்துத் தருதல்**

இன்றைய இளைஞர்களைப் பண்படுத்தும் பணியை குறிப்பிட்ட சிலருக்கு ஒதுக்கிவிட்டு மற்றவர்கள் வேடி க்கை பார்க்க இயலாது. நம் பங்கிற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்பட வேண்டும். உலக நாகரிகத்தின் சிகரத்தைத் தொட்ட ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்கான கார ணங்களாக இளைஞர்கள் ஆடம்பரங்களிலும் கேளிக் கைகளிலும் மூழ்கி அறிவுசார் சிந்தனைகளையும் உழைப்பையும் இழந்ததுதான் என்று வரலாறு சுட்டு கின்றது. எனவே தற்காலச் சூழலில் இளைஞர் சக்தி எந்த நிலையில் இருக்கின்றது? எவ்வாறு பயன்படுத்தப் படுகின்றது? என்பதில் அனைவரும் கவனமாக இருக்க வேண்டும்.

நாட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இளைஞர் கள் தங்களின் தனித் திறன்களை இழந்துவிடாமலும் அல்லது தவறான வழிகளில் பயன்படுத்தி விடாமலும் இருக்கும் வகையில் திறன் மேம்பாடு மற்றும் முறையான கண்காணிப்பு தொடரும் பட்சத்தில் அவர்கள் வளர்ச்சி க்கான மாற்று சக்திகளாக அடையாளம் காணப்பட்டு திறன்மிகு சமூகத்தை உருவாக்க முடியும். அதற்கு அரசு கள்இ மக்கள்இ சமூக அமைப்புகள் மற்றும் இளைஞர் மேம்பாட்டு இயக்கங்கள் ஆகியவை ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியமாகும்.

இளைஞனே! நீ எதற்காக விளக்கில் விழும் விட்டில் பூச்சியாய் நீ உன் வாழ்வையே அழிக்கின்றாய். நீ சாதிக்க பிறந்தவன்இ உன் வாழ்க்கை உன் கையில்இ வாழ்வில் வரும் தடுமாற்றம் மாற்றத்தை விளைவிக்கும். பார்க்காது அடி வைக்க இது பூக்கள் நிறைந்த பாதை (உலகம்) அல் லஇ மாறாக முட்கள், வலிகள், சோதனைகள் அடங்கிய பாதை. இந்த பாதையை கடக்கும் சக்தி இளைஞனே உனக்கு உண்டு. இவ்வுலகில் உன் இலட்சியத்தில் தடுமாற்றம் இல்லாமல் போராடு வெற்றி நிச்சயம்.


**உசாத்துணைகள்:**

**Journal of Instructional Psychology**



# இராவணன் பெயர் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டும், அது இருட்டடிப்பு செய்யப்பட்டமையும்

**சி**ல வருடங்களுக்கு முன்பு மவ்பிமஎனும்சிங்கள பத்திரிகையில்ஓர்முக்கியமானதகவலைப்படித்தேன். ஞாயிறுற்றுக்கிழமைமவ்பிமபத்திரிகையில் இலங்கை வரலாறு மற்றும் தொல்லியல் தொடர்பான கட்டுரைகள் வரும். எனவே ஒவ்வொரு ஞாயிறும் மவ்பிம பத்திரிகையை வாங்கி வாசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன்.


அன்று நான் படித்த தகவல் இதுவரை நான் தெரிந்திராத, புதுமையான, ஆனால் முக்கியமான தகவலாக இருந்தது. அக்கட்டுரையை ஓர் சிங்கள ஆராய்ச்சியாளர் எழுதியிருந்தார். அது இராவணன் பெயர் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் பல இலங்கையில் காணப்படுவதாகவும், அவை வேண்டுமென்றே மறைக்கப்பட்டு விட்டதாகவும், அவற்றில் ஒன்றை மட்டும் பேராசிரியர் பரணவிதான தனது நூலில் பதிவு செய்துள்ளதாகவும், அதில் உள்ள இராவணனின் பெயரை மறைத்து வேறு பெயரைப் பதிவு செய்துள்ள தாகவும் குறிப்பிட்டிருந்தார். அக்கல்வெட்டு அம்பாறை மாவட்டத்தில் உள்ளதாகவும், இடத்தைக் குறிப்பிட்டால் அக்கல்வெட்டை அழித்து விடுவார்கள் எனவும் குறிப்பிட்டிருந்தார்.



**என்.கே.எஸ். திருச்செல்வம்**
வரலாற்று ஆய்வாளர்
இலங்கை
nksthirugmail.com

இந்த விடயத்தைப் படித்தவுடன் ஆச்சரியமாக இருந்தது. நம்ப முடியாமலும் இருந்தது. ஏனெனில் நான் அறிந்தவரையில் இராவணனின் பெயர் எந்த பிராமிக் கல்வெட்டிலும் இல்லை.. பேராசிரியர் பரணவிதான பதிவு செய்த அம்பாறை மாவட்ட கல்வெட்டுக்களை ஏற்கனவே ஒவ்வொன்றாக ஆராய்ந்து, அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்பை படித்துள்ளேன். எனவே இங்கு குறிப்பிட்ட அந்த கல்வெட்டின் படியெடுக்கப்பட்ட பிரதியை வாசித்துப் பார்த்து உண்மைத் தன்மையை கண்டறிய வேண்டும் என எண்ணினேன்.

பரணவிதான அம்பாறை மாவட்டத்தில் பதிவு செய்த பிராமிக் கல்வெட்டுக்களின் படியெடுக்கப்பட்ட பிரதிகளை ஒவ்வொன்றாக வாசித்து இராவணன் பெயர் உள்ளதா எனப் பார்க்க வேண்டும் என எண்ணி, ஒவ்வொன்றாக வாசிக்கத் தொடங்கினேன். அம்பாறை மாவட்டத்தில் மொத்தமாக 164 பிராமிக் கல்வெட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றை எல்லாம் வாசித்து முடிக்க இரண்டு, மூன்று நாட்களாகும். ஞாயிற்றுக் கிழமை மதிய உணவின் பின் ஒவ்வொன்றாக வாசிக்கத் தொடங்கினேன். பதிவு செய்யப்பட்ட எல்லாக்



கல்வெட்டுக்களின் படியெடுக்கப்பட்ட பிரதிகளும் நூலில் காணப்படவில்லை.சில கல்வெட்டுக்களின் பிரதி கள் விடுபட்டிருந்தன.

பிராமி எழுத்துக்களை ஒவ்வொன்றாக எழுத்துக் கூட் டித்தான் வாசிக்க முடியும். ஞாயிறு இரவு 12 மணிவரை 75 கல்வெட்டுக்களை வாசித்து முடித்தேன் ஞாயிறு ஓடி விட்டது. அடுத்த நாள் திங்கள்கிழமை அலுவலகத்திற்கு சென்றேன். அங்கே வேலை செய்ய முடியவில்லை. நினைப்பெல்லாம் இராவணன் கல்வெட்டு மீதே இருந் தது. எப்படியாவது இன்று கண்டு பிடித்து விட வேண்டும் எனும் ஆர்வத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன்.

அலுவலகத்தில் இருந்து வந்ததும் மீண்டும் கல்வெட்டு வாசிப்பைத் தொடர்ந்தேன். இடையில் குளியல், உணவு எல்லாம் முடிந்தது. இரவு இரண்டு மணி அளவில் 100 வது கல்வெட்டை வாசித்தேன். இருப்பினும் இராவண னைக் காணவில்லை. இருப்பினும் மனம் தளரவில்லை. இரண்டரை மணியளவில் கண்கள் சொக்கிக் கொண்டிருந் தன. 116 வது கல்வெட்டை வாசித்துக் கொண்டிருந்தேன். அந்த மூன்றேழுத்துக்களும் இருப்பது போல் தெரிந்தது. ரவணஎனும்எழுத்துக்கள். அதுஉண்மையா? அல்லதுதூக் கக்கலக்கத்தில்தெரிகிறதா? ஆச்சரியத்தில், மகிழ்ச்சியில் மீண்டும் மீண்டும் வாசித்தேன். முகத்தை நன்றாகக் கழுவி விட்டு வந்தேன். மீண்டும் வாசித்தேன். ஆம், என் கண்க ளையே நம்ப முடியவில்லை. கல்வெட்டிலே 5 வது, 6 வது, 7 வது எழுத்துக்கள் ர வ ண எனப் பொறிக்கப்பட் டிருந்தன. உடனே அக்கல்வெட்டின் ஆங்கில மொழிபெ யர்ப்பைப் பார்த்தேன். அதில் ரவணஎன்றமூன்றுஎழுத்துக் களுக்குப்பதிலாகதிசஹஎனக்குறிப்பிடப்பட்டிருந்தது.

இராவணனின் பெயர் பொறிக்கப்பட்ட இந்த பிரா மிக் கல்வெட்டு பம்பரகஸ்தலாவை என்னுமிடத்தில் உள்ள மலைக்குகையில் காணப்படுகிறது. பம்பரகஸ் தலாவ நாகமலை, நாகபர்வத மலை எனும் பெயர்களில் அழைக்கப் படுகிறது. குமண பறவைகள் சரணாலயத் தின் வடகிழக்கு பகுதியில் காட்டின் மத்தியில் நாகமலை அமைந்துள்ளது. பண்டைய காலத்தில் இங்கு நாகவழி பாடு நிலவியமையால் இப்பெயர் உண்டானது எனக் கூறப்படுகிறது. எனினும் இம்மலை ஓர் இராட்சத நாகம் படமெடுத்தபடி இருப்பது போன்ற அமைப்பை உடை யதால் நாகமலை எனப் பெயர்பெற்றது எனவும் கூறப் படுகிறது. பண்டைய காலத்தில் தென்கிழக்கில் இருந்த இராவணனின் முக்கிய உப நகரங்களில் ஒன்றாக நாக மலை விளங்கியிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. இங்கிருந்தே இராவணன் உகந்தை மலை சிவாலயம் அமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளான் எனத் தெரிகி றது. அம்பாறை மாவட்டத்தின் தென்பகுதியில் உள்ள உகந்தைமலை முருகன் கோயிலின் தென்மேற்கில் சுமார் 13 கி.மீ. தொலைவில் பம்பரகஸ்தலாவை எனும் நாகபர் வத மலை உள்ளது.

இங்கு செல்வதற்கு உகந்தைமலையில் இருந்து கூமு னைக்குச் செல்லும் வழியில் 5 கி.மீ பயணம் செய்து அங் கிருந்து தென்மேற்குப் பக்கமாகப் பிரிந்து செல்லும் வண் டிப் பாதையில் 8 கி.மீ கட்டுக்குள் சென்றால் நாகபர்வத மலையை அடையலாம். கதிர்காமத்திற்குப் பாதயாத்திரை செல்லும் போது இம்மலைக்குச் செல்ல முயற்சி செய் தேன். இங்கு செல்வதானால் வன இலாகாவின் அனு மதியுடன் அவர்களின் வாகனத்தில், வழிகாட்டியுடன் செல்ல வேண்டுமாம். எனவே வேறொரு நாளில் செல் வதே சிறந்தது.

இங்கு கண்டு பிடிக்கப்பட்ட 38 பிராமிக் கல்வெட்டுக்க ளில் இராவணன் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டும் ஒன்றாகும். இக்கல்வெட்டில் பருமக ராவண ஜிதி ஷோகிலி லேன சகஸஎனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது பெருமகன் இராவணனின் மகள் ஷோகிலியின் குகை எனப்பொருள் படுகிறது.

இக்கல்வெட்டு ஆங்கிலேய ஆய்வாளர்களால் கண்டு பிடிக்கப் பட்டு பிற்காலத்தில் பேராசிரியர் பரணவித்தா ரணவினால் ஆய்வு செய்யப்பட்டு ஆங்கிலமொழியில் 1970 ம் ஆண்டு Inscription of Ceylon Volume&1 எனும் நூலில் 515 வது கல்வெட்டாகப் பதிவு செய்யப் பட்டுள்ளது. அதில் பருமக வணிஜ திசஹ லேன சகஸ என குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஆங்கிலத்தில் The Cave of the chief Tissa the merchant is given to the sangha என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதில் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள இராவணன் மற்றும் ஷோகிலி ஆகிய பெயர்கள் இருட்டடிப்பு செய்யப்பட் டுள்ளன. ராவண என்பதற்குப் பதிலாக திஸ்ஸ என எழு தப்பட்டுள்ளது. எனவே இதில் இராவணன் எனும் பெயர் வெளிப்பட்டு விடக் கூடாது என நினைத்தே இவ்வாறு



இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கலாம் இக்கல்வெட்டின் மூலம் இராவணனுக்கு ஷோகிலி எனும் பெயரில் ஓர் மகள் இருந்தமை தெரிய வருகிறது. ஆனால் இராவணனுக்கு 6 ஆண் பிள்ளைகள் இருந்தது பற்றியே நூல்கள் கூறுகின்றன. எனவே ஷோகிலி எனும் மகள் இராவணனின் மனைவியர் ஒருத்தியின் மகளாக இருக்கலாம்.

இக்கல்வெட்டு மட்டுமல்லாது இராவணனின் தாய், தந்தை, சகோதரர்கள், மகன் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிட்ட கல்வெட்டுக்களும்பலாங்கொடை பகுதியில் காணப்படுவதாக மவ்பிமபத்திரிகைகட்டுரைகூறுகிறது.


பம்பரகஸ்தலாவை கல்வெட்டிலே இராவணனின் பெயர் வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்யப்பட்டது ஏன்? 7000 வருடங்களுக்கு முன்பு தீவிர சிவபக்தனாக இருந்த மாபெரும் சக்கரவர்த்தி இராவணன் இத்தனை தொன்மை வாய்ந்த இராவணனின் பெயர் ஓர் முக்கிய தொல்பொருட் சின்னம் மூலம் உலகிற்குத் தெரியவந்தால், இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட நாகரீகங்களில் வாழ்ந்தவர்களை விட இராவணன் காலத்தால் முற்பட்டவன் என்பது உறுதியாகி விடும் என்பதனாலா? அல்லது ஆங்கிலேயர்களால் கண்டுபிடிக்கப்பட்டு நூல் வடிவமாகிய மகாவம்சம் போன்ற நூல்களில் குறிப்பிடப் பட்டுள்ள விடயங்கள் நிராகரிக்கப்பட்டு விடும் என்பதனாலா? அல்லது இந்நூல்களில் இலங்கையின் முதல் மன்னன் எனக் குறிப்பிடப்பட்டுள்ள விஜயனுக்கு முன்பு இராவணன் என்பவன் இருந்தான் என்ற உண்மை தொல்லியல் ரீதியில் நிறுவப்பட்டுவிடும் என்பதனாலா? அல்லது இதுவரை உலகில் மிகத்தொன்மை வாய்ந்தவை எனக் கருதப்படும் சுமேரிய கல் வெட்டுக்களை விட இலங்கைக் கல்வெட்டுக்கள் காலத்தால் முற்பட்டவை எனக் கருதப்பட்டு விடும் என்பதனாலா? எதை உண்மையாக்க இராவணன் பெயரை மறைத்தார்கள்? அறிஞர்களும், ஆய்வாளர்களும் சிந்திக்க வேண்டிய விடயம் இது.

இலங்கையில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களின் ஆகக் கூடிய காலம் இற்றைக்கு 2300வருடங்களாகும். ஆனால் இராவணனின் காலம் இற்றைக்கு 7000 வருடங்களாகும். எனவே இறைவன் காலத்தில் இக்கல்வெட்டுக்கள் பொறிக்கப்படவில்லை. அப்படியானால் ராவண எனும் பெயர் கல்வெட்டுகளில் எப்படி இடம் பெற்றது. இராவணன் இறந்த பின்பு இராவணனின் சந்ததியினர், விசு வாசிகள், அரசபிரதானிகள் ஆகியோர் இக்குகைகளைப் பாதுகாத் ததோடு வழிவழியாகப் பயன்படுத்தியும் வந்ததாகக் கூறப்படுகிறது. இராவணன் மற்றும் அவனது குடும்பத்தினர் இவற்றைப் பயன் படுத்தியதன் நினைவாக இக்குகைகளில் இவர்கள் இராவ ணனையும், மற்றவர்களையும் தெய்வங்களாகப் போற்றி வழி பட்டிருக்க வேண்டும் என்ற ஓர் கருத்தும் உள்ளது. இப்படிப்பட்ட இராவணனின் சந்ததியினர் பொறித்த கல்வெட்டுக்களே இன்று நாம் காணும் இராவணன் பெயர் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் என கூறப்படுகிறது.

அதேசமயம் இராவணனின் பிற்கால சந்ததியினர் தமது முதாதையரான இராவணன் மற்றும் அவனின் உறவினர் ஆகி யோரின் பெயர்களை தங்களுக்கும் சூடிக்கொண்டிருக்கலாம் என வும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அப்படியானவர்கள் பொறி த்த கல்வெட்டுக்களே இவை எனவும் அவர்கள் கூறுகின்றனர். அப்படியானால் இராவணன் பற்றிய நூல்களில்காணப்படும் இராவணனின் பரம்பரை சற்றும் மாறாமல் தாய், தந்தை, அண்ணன், தம்பிமார், மகன், பணியாளர்கள் என எல்லாப் பெயர்களையும் அச்சொட்டாக இராவணனின் சந்ததியினர் பிற்காலத்தில் தங்களுக்கும் எப்படி சூடிக்கொண்டிருக்க முடியும் எனும் சந்தேகமும் எழுகிறது. எனவே இராவணனும், அவனது உறவினர்களும், பணியாளர்களும் பயன்படுத்திய குகைகளை அவனின் சந்ததியினர் வழிவழியாக பாதுகாத்து வந்ததோடு, பிற்காலத்தில் அக்குகைகளில் அவர்களது பெயர்களை கல்வெட்டுக்களாகப் பொறித்திருப்பர் என்பதே பலரும் ஏற்றுக் கொண்ட விடயமாகும்.

**(வசந்தம் தொலைக்காட்சியில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 7.30 மணிக்கு இடம்பெறும் 'வழிபாடு' நிகழ்ச்சியில் இலங்கையின் பழமை வாய்ந்த கோயில்கள் பற்றிய எனது நிகழ்ச்சியைப் பார்க்கலாம். அல்லதுvasantham.lk எனும் இணைய தளத்திற்குச் சென்று 'வழிபாடு' நிகழ்ச்சியைப் பார்க்கலாம்.)**





# இலங்கையில் சித்த மருத்துவம்

## சித்தமருத்துவமும் இராவணனும்

**இந்தியாவைச் சேர்ந்த முனைவர் இர.வாசுதேவன் என்பவர் இராவணனைப் பற்றி செய்த ஆய்வு பின்வருமாறு அமைகின்றது.**

**இ**லங்கை அரசன் இராவணன் மிச்சிறந்த வைத்தியனாக இருந்துள்ளான். சித்தமருத்துவத்தின் முழுப் பகுதியுமே அவருக்குதெரிந்திருக்கின்றது. ஏனெனில் இராவணனால் உருவாக்கப்பட்ட மருத்துவ நூல்கள் பல ஆராய்ச்சிகள் மூலம் அறியப்பட்டுள்ளன. ஆனால் அவை அறியப்படாமலும், காணாது ம் போயு ள்ளன.

இராவணனின் நாடிப் பரிட்சை (NadiPariksha), இராவணன் திராவகநீர் - (அர்க்கப் பிரகாசம் ArkaPrakashata ), ஒடிஷா சிகிட்ஷா (Uddisa Chiktsaya ), ஒடியா சிகிட்ஷா (Oddiya Chikitsa), குமார தந்த்ரயா (Kumara Tantraya ), வாடின பிரகாரனயா (Vatina Prakaranaya ) என்னும் நூல்கள் சிங்கள மொழியில் இயற்றப்பட்டு பின்னர் சமஸ்கிருத மொழியில் மொழிமாற்றம் செய்யப்பட்டன என்று (சிங்) கள எனும் இயக்கத்தைத் தோற்றுவித்த முனிதாச குமாரதுங்க கூறியுள்ளார்.

தாஸிஸ் இராவணன் என்னும் பெயருடையவன் அரசனாகவும், இராவணன் 'அங்கவெட்டு' எனப்படும் வர்மக்கலை, மருத்துவக்கலை, இசைக்கலை போன்ற பல கலைகளில் சிறந்து விளங்கியவனாக விளங்கினான் என்று சிங்கள மொழியின் தொன்மை நூலாகிய இராஜவலியா மற்றும் இராவண வலியா என்னும் நூல்கள் புகழ்ந்துரைக்கின்றன.

இராவணன் என்று பதினோரு பேர் இருந்துள்ளனர். அவர்களில் நள இராவணன், மனு இராவணன், புனு இராவணன், தாஸிஸ் இராவணன் என்பவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களில் தாஸிஸ் இராவணன் என்பவனுக்குப் பத்துவகையான ஆற்றல்களுடன் பத்து நாடுகளை ஆண்டான். அதனால் அவன் பத்து தலை இராவணன் என்று அழைக்கப்பட்டான் என்று குறிப்பிடுகிறது.

மன்னன் தாஸிஸ் இராவணன் கி.மு. 2554 - 2517 என்னும் காலத்துக்கு உரியவன்.அவனே மண்டோதரியின் கணவன் என்றும் வரலாறு கூறுகிறது.

ஆரியர்களும் சிங்களர்களும் இலங்கைக்குச் செல்லு முன்பே ஆயுர்வேதம் இலங்கைக்கு எப்படி வந்



**சித்தமருத்துவர்**
**தியாகராஜா சுதர்மன்**
**BSMS, Dip. in Counseling PG. Dip. in Food Nutrition**
**மானிப்பாய்.**



தது? 5000 ஆண்டுகளுக்கு முன்பே இலங்கையில் இருந்த மருத்துவம் ஆயுள்வேதம். அதுவே தமிழ் மருத்துவத்தைக் குறிக்கும் பழஞ்சொல் என்பதற்குச் சிலப்பதிகாரம் சான் றாகிறது.

15 ஆம் நூற்றாண்டளவில் சிங்களத்தில் ஆக்கப்பட்ட வைத்தியசிந்தாமணிபைசாஜ்ஜசங்கிரகம் (Vaidya Cintamani Bhaisadya Sangrahava) என்னும் சிங்கள மருத்துவநூல், இராவணன் வைத்திய சிந்தாமணி என் னும் தமிழ்மருத்துவ நூலைத் தழுவி எழுதப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

இராவணன் நூல்களில் ஒன்றான இராவணன்திராவ கதீநீர் என்னும்நூல், அர்க்கபிரகாசம் என்னும் பெயரில் மலையாளத்தில், சுமார் 180 ஆண்டுகளுக்கு முன் வெளி யாகியிருக்கிறது.

இந்தியாவின் வடக்கிலுள்ள நாலந்தா பல்கலைக்கழகம், ஆயுர்வேத பல்கலைக்கழகம், சமஸ்கிருத கல்லூரிகள், கேரளாவில் வழங்கிவருகின்ற ஆயுர்வேதகல்லூரி ஆகிய வற்றில் வழங்கிவருகின்ற மருத்துவ நூல்களில் செம்பாதி தமிழ்நூல்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வடமொழியி லுள்ள இரசசாஸ்திரம், இராவணன் நூலகத்திலிருந்து கொண்டுவரப்பெற்ற நூலைப் பார்த்து எழுதியதாகத் தெரிவிக்கிறது.

கி.பி.10 ஆம்நூற்றாண்டளவில்குமரி, திருவனந்தபு ரம்பகுதியில்வழங்கிவந்துள்ள 'சிந்தாமணிமருத்துவம்' என்னும் 'இராவணன்மருத்துவநூல்கள்' அனைத்தும் திருவிதாங்கூர் மன்னரின் தூண்டுதலினால் திரட்டப்பட் டுள்ளன. அவை, நெய்யாற்றங்கரை என்னும் ஊரில் நிறுவப்பட்டிருந்த 'தமிழ்மருத்துவ ஆய்வுமையம்' என் னும் அமைப்பின் மருத்துவர்களும் வர்மஆசான்களும் அகத்தியர் பெயரில் மலையாள மொழியில்மொழிமாற்றம் செய்துள்ளனர். அந்நூல்களின் உதவியினால் உருவாக் கப்பட்டதே ஆயுர்வேத மருத்துவம்' ஆகும்.

இந்தியில் இராவணசம்ஹிதா என்னும் மருத்துவ நூல் இராவணன் படத்துடன், மனோஷ் பப்ளிகேஷன், புது தில்லி - 110084 விருந்துவெளிவந்துள்ளது. அது, சுமார் 830 பக்கங்களைக் கொண்டதாக இருக்கிறது.

இராவணன்இயற்றியநூல்கள்எனஅறியப்பட்டுள்ள நூல்கள்விபரம்வருமாறு:-

1. உடற்கூறுநூல்
2. மலைவாகடம்
3. மாதர்மருத்துவம்
4. இராவணன் - 12000
5. நாடி, எண்வகைபரிசோதனைநூல்
6. இராவணன்வைத்தியசிந்தாமணி
7. இராவணன்மருந்துகள் - 12000
8. இராவணன்நோய்நிதானம் - 72 000
9. இராவணன் - கியாழங்கள் - 7000
10. இராவணன்வாலைவாகடம் - 40000
11. இராவணன்வர்மஆதிநூல்
12. வர்மதிறவுகோல்நூல்கள்
13. யாழ்பாணம் - மூலிகைஅகராதி
14. யாழ்பாணன் - பொதுஅகராதி
15. பெரியமாட்டுவாகடம்
16. நச்சுமருத்துவம்
17. அகாலமரணநூல்
18. உடல்தொழில்நூல்
19. தத்துவவிளக்கநூல்
20. இராவணன்பொதுமருத்துவம்
21. இராவணன்சுகாதாரமருத்துவம்
22. இராவணன்திராவகதீநீர்நூல் - அர்க்கபிரகாசம்
23. இராவணன்அறுவைமருத்துவம் - 6000
24. இராவணன்பொருட்பண்புநூல்
25. பாண்டபுதையல்முறைகள் - 600
26. இராவணன்வில்லைவாகடம்
27. இராவணன்மெழுகுவாகடம்

மேற்காணும் நூல்களில் பல, சங்கரன்கோயில் அருகி லுள்ள 'கரிவலம்வந்தநல்லூர்' என்னும் ஊரில் அமைந் துள்ள 'பால்வண்ணநாதன்' திருக்கோயிலில் கருவூல மாக இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவை ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவையாகக் காணப் படுகின்றன என ஆய்வுக்கட்டுரை ஆசிரியர்கூறுகின்றார்.

தொடரும்....




## தேடலின் திரவியம்

# அடுத்தவர்களைப் பற்றி புறம் பேசாதீர்...!

**கா**ட்டுப்பகுதியில் ஆழ்ந்த தவத்தில் இருந்தார் அந்த மகரிஷி. அவர் தவத்தின் போதே கண் திறக்காமல், தினமும் ஒருமுறை கையை நீட்டுவார். கையில் யாராவது எதையாவது வைத்தால், அது என்ன ஏதென்று பார்க்காமல் அப்படியே விழுங்கி விடுவார். முனிவர் கையை நீட்டும் நேரம் பார்த்து, பக்தர்கள் நறுக்கிய கனிகள், அப்பம் முதலியவற்றை வைப்பார்கள். இதனால் தங்களுக்கு புண்ணியம் சேரும் என்று அவர்கள் கருதினர்.

ஒருநாள் அந்த நாட்டின் அரசன் வேட்டைக்கு வந்தான். அன்று பக்தர்கள் யாரும் வரவில்லை. அந்நேரம் பார்த்து, மகரிஷி கையை நீட்டினார். மன்னன் மகரிஷியைப் பரிகாசம் செய்யும் நோக்கத்தில், தான் வந்த குதிரை போட்ட சாணத்தில் சிறிது எடுத்து மகரிஷியின் கையில் வைத்தான். மகரிஷியும் அதை வாயில் போட்டு விட்டார். மன்னன் கலகலவென சிரித்தபடியே அங்கிருந்து போய்விட்டான்.



மறுநாள் மன்னனின் நலம் விரும்பியாக உள்ள வேறு ஒரு முனிவர் அரசவைக்கு வந்தார். முக்காலமும் உணர்ந்த அவர், 'மன்னா! நேற்று நீ காட்டில் தவமிருக்கும் மகரிஷிக்கு, குதிரைச்சாணம் கொடுத்தாய் அல்லவா?. அது நரகத்தில் மலை போல் வளர்ந்து கொண்டிருக்கிறது. நீ நரகம் வந்ததும், அதை உண்ண வைப்பார்கள். அதற்கு தயாராக இரு!' என்று கூறி விட்டு போய்விட்டார்.

மன்னன் நடுங்கி விட்டான். தான் விளையாட்டாக செய்த தவறை எண்ணி வருந்தினான்.

தான தர்மங்கள் செய்து, தன் பாவங்களைக் குறைக்க முடிவெடுத்தான். அரண்மனை நந்தவனத்தில் ஒரு குடில் அமைத்து அங்கேயே தங்கினான். அரண்மனை ஆடம்பர சுகத்தை மறந்தான். தன் நாட்டிலுள்ள இளம்பெண்களை குடிலுக்கு வரவழைத்து, அவர்களது திருமணத்துக்கு தேவையான நகை, பணம் கொடுத்து, பாவம் செய்வதின் கெடுதல் பற்றி எடுத்துக்கூறி அனுப்பிவைத்தான். இது நாள்தோறும் நடைபெறும் ஒரு நிகழ்வாக மாறிவிட்டது.

அரசனின் இந்த தினசரி வழக்கத்தை, அந்த நாட்டில் சிலர்வேறுமாதிரியாககதைகட்டிவிட்டனர். 'மன்னன், இளம்பெண்களை தவறான நோக்கில் குடிலுக்கு வரச் சொல்கிறான். தவறுக்கு கூலியாக நகை, பணம் தருகிறான்' என்று திரித்துக் கூறினர். இப்படியாக பல விமர்சனங்கள் வந்தவண்ணமிருந்தன. ஒருநாள் கற்புக்கரசியான பெண் ஒருத்தி, பார்வையற்ற தன்



கணவருடன், அரசனின் குடில் முன்பாக நின்று யாசகம் கேட்டாள். அந்த கணவன், 'நீ யார் வீட்டு முன்பு இப்போது நிற்கிறாய்?' எனக் கேட்டான்.

'அரசன் அமைத்திருக்கும் குடில் முன்பு' என்று பதிலளித்தாள் அந்தப் பெண்.

அதற்கு அவளது கணவன், 'ஓ! தானம் கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டு, பெண்களின் கற்பைச் சூறையாடுகிறானே, அவன் வீட்டு முன்பா?' என்றான். அந்தப் பெண் பதறிப்போய் உடனடியாக அவனது வாயைப் பொத்தினாள்.

பின் மெதுவாக தன் கணவனிடம் கூறத்தொடங்கினாள். 'சுவாமி! என் கற்பின் சக்தியால், நான் முக்காலத்தையும் உணர்ந்து செயல்வேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த மன்னன், ஒரு மகரிஷிக்கு குதிரைச் சாணத்தை கொடுத்தான். அது நரகத்தில் மலையளவாக குவிந்து, இவன் உண்பதற்காக தயாரானது. அவ்விஷயம் மன்னனுக்குத் தெரிய வரவே, அந்த பாவ மலையை கரைக்கும் பொருட்டு, கன்னியருக்கு தானதர்மம் செய்து நற்போதனைகளைச் செய்து வருகிறான்.

ஆனால் சிலர் மன்னனைப் பற்றி தவறாகப் பேசி, அவனுக்காக குவிக்கப்பட்டிருந்த சாண மலையில், ஒவ்வொரு கவளமாக ஒவ்வொருவரும் பங்கிட்டுக் கொண்டனர். கடைசி கவளம் மட்டும் பாக்கியிருந்தது. தற்போது மன்னனைப் பற்றி தவறாகப் பேசியதன் காரணமாக, அந்த கடைசி கவளத்தை தாங்கள் எடுத்துக் கொண்டீர்கள். மேலும் அடுத்தப் பிறவியிலும் கூட தாங்கள் பார்வையற்றவராகவே பிறப்பீர்கள்' என்று கூறினாள். அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போனான் அவளது கணவன்.

தவறு செய்தவர்கள் திருந்த எடுக்கும் முயற்சியை விமர்சிக்கக் கூடாது. அவர்களை தவறாக விமர்சித்தால், அவர் செய்த பாவங்களைப் பங்கு போட்டுக் கொள்ளும் நிலைமைக்கு ஆளாக வேண்டி வரும்.

உண்மை என்னவென்று அறிந்து கொள்ளாமல், காலத்துக்கும் வம்பு பேசிக்கொண்டு மற்றவர்களின் பாவத்தை சிலர் பங்கிட்டுக்கொள்கிறார்கள். அந்த தவறை நாம் ஒரு போதும் செய்யக்கூடாது.

நாம் செய்த பாவத்தை சுமக்கவே, நமக்கு இந்த ஒரு பிறவி போதுமா என்பது தெரியாத நிலையில், தேவையில்லாமல் புறம்பேசி அடுத்தவரின் பாவத்தையும் சேர்த்து சுமக்க வேண்டுமா என்ன ?

**-படித்து மறக்காதிருக்க வேண்டிய கதை!**



# வட இலங்கையில் சிறப்புப் பெற்ற பைரவ வழிபாடு

வட இலங்கையில் ஊர்கள் தோறும், தெருக்கள் தோறும் பரவியுள்ள சிறப்பான வழிபாடு பைரவ வழிபாடாகும்.

பைரவ (வைரவ) வழிபாடு மிக எளிமையாக சூலம், மரம், கல், தண்டம், போன்றவற்றில் பைரவரை வரவழைத்து நிறைவேற்றப்படுவதை காணலாம்.

இது தவிர, வட இலங்கையில் ஊர்கள் தோறும் பைரவருக்கு தனியான சிறப்பான ஆலயங்கள் உள்ளன.

இங்கெல்லாம் கிராமிய பாரம்பரியங்களுடன் சித்திரை, வைகாசி மாதங்களில் ஒரு செவ்வாய்/ திங்கள்/ வெள்ளி விளக்கு வைத்து மறு வாரம் பொங்கல் மடை பரவி சிறப்பு வழிபாடு செய்வதை காணலாம்.

வளந்துப் பானை என்று சிறப்பாக புனித நீரெடுத்த பானையை கோயிலை சுற்றி வந்து அடுப்பில் ஏற்றி பொங்கி வழிபட காணலாம். ( இம்மரபுகள் தனியே விரிவாக பதிவு செய்தற்குரியன.)

பைரவ மூர்த்திக்கான ஆலயங்கள் பலவற்றில் தேரேறும் கடவுளாக, திருவூஞ்சலாடும் பிரானாக, சப்பறப்பவனி காணும் தெய்வமாக பைரவர் அருளுகிறார்.

தவிர, பூதவராஜர், அண்ணமார், சட்டைநாதர், என்று பல பெயர்களிலும் வடிவங்களிலும் இங்கு பைரவர் வழிபாடு பரவி உள்ளது.

ஞான மூர்த்தியாகவும், கால பயம் அகற்றும் கால பைரவராகவும், நோயகற்றும் இறைவனாகவும் இவர் திகழ்கிறார்.

சிவ வடிவம் கொண்ட மகாபைரவரை கபால சமர்ப்பணமாக வடை நெய்வேதித்து வடை மாலை சாற்றி வழிபடுவர்.

பைரவர் அருளால் பிறந்த குழந்தைகளுக்கு க்ஷேத்திரபாலன் என்றும் ஆபதோத்தாரணன் என்றும் வைரவநாதன் என்றும் பெயரிட்டு மகிழ்ந்த மரபை கூட யாழ்ப்பாணத்தில் காணலாம். குருமார் பலரின் பெயர்கள் இவ்வாறிருப்பதையும் அவதானிக்கலாம்.

பரணி நாளிலும், அஷ்டமி திதியிலும், வெள்ளி, செவ்வாய் கிழமைகளிலும் பைரவ வழிபாடு சிறப்பாக செய்யப்படுகிறது.

தவிர, பைரவரை நரசிம்ம மூர்த்தியோடு இணைத்து ந்ருசிம்ம பைரவராக வழிபடும் மரபும் வட இலங்கையில் உள்ளது.

காவல் தெய்வமான பைரவர் ஆலயம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைச் சூழலிலும், புகழ் பூத்த யாழ்ப்பாணம்

இந்துக்கல்லூரி வளாக மத்தியிலும் இன்னும் இவ்வாறான பல இடங்களிலும் பல்லாண்டுகளாக இருக்க காணலாம்..

நல்லூர் கந்தசுவாமி கோயில் போன்ற முக்கிய ஆலயங்களில் முதன்மையான மூர்த்திகளுள் ஒருவரான திரிசூல பைரவர் இருக்க காணலாம்.

எனினும் புலம்பெயர் தமிழர்கள் தாங்கள் புலம்பெயர்ந்த தேசங்களில் உருவாக்கிய ஆலயங்களில் பைரவ மூர்த்திக்காகவே சிறப்பாக ஆலயம் உருவாக்கியதாக தெரியவில்லை.

புதிய புதிய வழிபாட்டு முறைமைகள் தோன்றிப் பரவும் இக்காலத்தில் நம் பாரம்பரியமான பைரவ வழிபாடு பற்றி கவனம் செலுத்துதல் அவசியமாகும்.

போர்த்துக்கேயர் காலத்தில் சைவ வழிபாடுகள் முற்றாக தடை செய்யப்பட்டு, கத்தோலிக்க மத பரப்புகை செய்யப்பட்ட போது பைரவ வழிபாடே சைவத்தை காத்து நின்றது.

பைரவரை குறிக்கும் திரிசூலம் போர்த்துக்கேயரின் கண்களுக்கு சிலுவையாக காட்சி தரும் வகையில் காணப்பட்டதால் இம்மரபு பலராலும் பேணப்பட இலகுவாக இருந்ததாகச் செல்லுவர்.

சைவத்தின் அகச்சமயங்கள் சிலவற்றுக்கு முதன்மைத்தெய்வமாக விளங்கிய பைரவி நாயகர் பைரவரின் தனி ஆலயங்கள் தமிழகத்தில் ஒரு சிலவே உள்ளன. அவை வைரவன் பட்டி போன்றன.


காசி போன்ற வட தேச தலங்கள் பலவற்றில் கால பைரவருக்கு முதன்மையும் சிறப்பும் உண்டு. சீர்காழியில் உள்ள சட்டநாத பைரவரின் சிறப்பு பெரிதும் பேசப்படுகிறது.

தருமை ஆதீன குருமரபில் வந்த ஒரு மகா சன்னிதானம் இச் சட்டைநாதருக்கான (ஆபதோத்தாரண) பதிகம் ஒன்றை பாடி போற்றியுள்ளார்.

எனினும், பைரவரையே மூலவராக கொண்ட ஆலயங்களையும் சிறப்பு விழாக்களையும் ஏற்படுத்தி பைரவரை வழிபடும் வட இலங்கை மரபு தனிச்சிறப்புடையதாகும்.

பகை, நோய், துயர் அகல பைரவரைப் போற்றுவோம்.





# சுவாமி விபுலாநந்தரின் தேசியம் நோக்கிய சாதனைகள்

பாகம் 2

சுவாமிவிபுலாநந்தர் வாழ்ந்தகாலச் சூழலில் ஆங்கிலேயஆதிக்கம் இந்தியாவிலும் இலங்கையிலும் நிலைபெற்றிருந்தது. அப்போதுமக்கள் ஆங்கிலேயரின் அடிவருடிகளாகவாழ்ந்தனர். தமிழர் தமதுவரலாற்றுப் பாரம்பரியம்,பண்பாட்டுப் பெருமைகள் என்பவற்றைப் பெரிதும் அறியாதிருந்தனர். அதனால் தமிழ் மக்கள் ஆங்கிலேயரின் கல்வி,கலாசாரம்,பழக்கவழக்கங்கள்,நடையுடைபாவனைகள் முதலியவற்றில் மோகம் கொண்டிருந்தமைவியப்புக்;குஉரியதன்று. மக்களிடம் தேசப்பற்று,மொழிப்பற்று,சமயப்பற்றுஎன்பனமங்கிக்கிடந்தன. இத்தகையதொருசமூகப் பின்னணிகாணப்பட்ட சூழலில் வாழ்ந்தசுவாமிகள் தமிழ் மக்களைச் சுதேசியநீரோட்டத்தில் திசைதிருப்பும் மிகப்பெரியபணியில் ஈடுபடவேண்டியதேவையைநன்குஉணர்ந்திருந்தார் எனலாம்.

சுவாமிகளின் காலத்தில் இந்தியசுதந்திரப் போராட்டமும் தேசிய இயக்கமும் உச்சநிலைஅடைந்திருந்தன. தேசியம் மேலோ ங்கியபோது இனம்,மொழி,சார்ந்தஉணர்வுகளும் தலைதூக்கின. இதன் பயனாகத் தமிழ் நாட்டில் தனித்தமிழ் இயக்கம் தோற்றம் பெற்றது. வேதாசலம் என்னும் தமிழ்க்கடல் தனதுபெயரைமறைமலையடிகள்என்றுதனித்தமிழாக்கித்,தனித்தமிழ்; இயக்கத்திற்குத் தலைமைதாங்கிநடத்திவந்தார். வடஇந்தியாவிலேகாங்கிரஸ் கட்;சி இந்தியதேசியத்தைவளர்க்க,தமிழகத்தில் ஈ.வெ.ராமசாமிப் பெரியார் திராவிடக்கழகத்தைத் தோற்றுவித்துஅதனூடாகத் தமிழ்த் தேசியத்தைவளர்த்தார். சுவாமிவிபுலாநந்தரும்தன்னையும் இவ்வியக்கத்தில் ஆத்மார்த்த ரீதியாக இணைத்துக் கொண்டமையால்தான் அவர் தமிழினமேம்பாட்டுக்காகத் தன்னைஅர்ப்பணிக்கத் தூண்டுதலாயிற்றுஎனலாம்.




**கலாநிதி.**
**பாலசுந்தரம் இளையதம்பி**
**தமிழ்த்துறைத் தலைவர்**
**அண்ணாமலை கனடா வளாகம்.**
**றொறன்ரோ.**


பெற்றதாயும் பிறந்தபொன்னாடும் நற்றவவானிலும் நனிசிறந்தனவேஎன்பதைநன்குஉணர்வோம். தேசியஉணர்வுஒருவருக்குஅவரதுகுடும்பத்திலிருந்தேதோன்றுகிறது. தோன்றவும் வேண்டும். குடும்பம் என்னும்போதுதாய் முதலிடம் பெறுகிறாள். தாயைநினைந்துருகாதபிள்ளை இல்லை. தாயிற் சிறந்ததொருகோயிலுமில்லை . தாய்க்குமதிப்பளிக்கப் பழகியஒருவரே,தான் பிறந்தநாட்டிற்கும் விசுவாசமாகவும் பற்றுடையவராகவும் இருப்பார். விபுலாநந்தர்

தம் பெற்றோரைத் தெய்வமாகப் போற்றியவர். எனவே தாய்நாட்டுப் பற்றுஅவரிடம் இயல்பாகவேஅமைவதாயிற்று. முதலாம் உலகமகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதுதாய் நாட்டுக்குஆபத்துஎன்றறிந்ததும் தானும் தாய்நாட்டைக் காப்பதற்காகமயில்வாகனனார் சாரணர் (Cadet)அணியிற் சேர்ந்துபயிற்சிபெற்றவர்.உலகப் போரிற்காயமுற்றபோர்வீரர்களுக்கு இரத்ததானம் செய்யவும் முன்வந்தவர். தமிழ்த்தாயின் அருளினால் முதலாம் உலகப்போர் முடிவுக்குவந்தமையால்,மயில்வாகனனார்

தமிழ் அன்னையின் வாசல் தேடிச் சென்றுதமிழ் அமுதம் பருகத்தொடங்கினார்.

கல்விஅறிவும்,வீரமும் செறிந்தகிராமமாககாரைதீவுதிகழ்ந்துவந்துள்ளது. சுவாமிகள் வாழ்ந்தகாலத்தில் இக்கிராமம் தனிச்சைவத்தமிழ்மக்கள் வாழ்ந்தபதியாகவிளங்கிற்று. அத்தகையமண்ணில் பிறந்தமயில்வாகனன் என்ற இயற்பெயர் கொண்டசுவாமிகளிடம் தன்மானம்,நாட்டுப்பற்றுஎன்பன கூடவேபிறந்திருந்தன. தன்னினத்திற்கும் தன்னாட்டுக்கும் நல்லனசெய்யவேண்டும்,கல்வியின்மையாலும் சமூகஅடக்குமுறைகளாலும் தாழ்ந்துபோயிருக்கும் மக்களைஉயர்நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்றஉயர் எண்ணத்துடிப்புக்கள் அவரிடம் எப்போதும் காணப்பட்டன.

சுவாமிகள் இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்ததும் (1922),வீரத்துறவிவிவேகானந்தரின் போதனைகளில் அதீதநாட்டம்கொள்வாராயினார். வீரவிவேகானந்தரைப்;போற்றியசுவாமிவிபுலாநந்தரிடம் இயல்பாகமனஉறுதியும்,எடுத்தகாரியத்தைச் செய்துமுடிக்கும் துணிபும்,அஞ்சாமையும்,கருணைபடிந்தஉள்ளமும்,பரிவும் நிறைந்திருந்தன. தேசியவிடுதலைஉணர்வுஅவரிடம் நிறைந்தேகாணப்பட்டது. இதற்குச் சான்றாகஒருநிகழ்வைக் குறிப்பிடலாம்.

1933இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேநடைபெற்றபட்டமளிப்புவிழாவுக்கு இந்தியமாண்புமிகுஆளுநர் சேர். ஜோர்ஜ் பிரடெரிக் ஸ்டான்லிவருகைதந்திருந்தார். ஆங்கிலேயஆதிக்கஆட்சிக்கொடி (Union Jack) இந்தியரின் அடிமைச் சின்னமாகஎங்கும் பறக்கவிடப்பட்டிருந்தன. ஆனால் இந்தியதேசியத்தையும் இந்தியவிடுதலையையும் வேண்டிநின்றசுவாமிவிபுலாநந்தர்,தாம் தங்கியிருந்தவீட்டிலே இந்தியதேசிக்கொடியைப் பறக்கவிட்டிருந்தார். பல்கலைக்கழகஅதிகாரிகள் அதனைஅகற்றும்படிகேட்டபோதிலும் சுவாமிகள் தன்சுதேசியக் கோட்பாட்டிலும் அதுசார்ந்தசெயலிலும் மிக்கஉறுதியாகவேஇருந்தார். இச்செயல் சுவாமிகளின் துணிச்சலையும் அஞ்சாமையையும் அவரதுதேசியஉணர்வின் ஆழத்தையும் காட்டுவதாகும்.

சுவாமிவிபுலாநந்தர் தாம் முழுநேரமும் தேசியப் பணியில் ஈடுபடவேண்டும் என்பதற்காகவேஅவர் துறவுவாழ்க்கையைவரித்துக்கொண்டார். அவரதுதுறவுக்கோலம் தேசியநோக்கைஅடிப்படையாகக் கொண்டது.சமயம் என்றவரையறைக்குள் கல்வியைமுடக்கிவிடஅவர் விரும்பவில்லை. பொதுமக்கள் அனைவருக்கும் சமமானகல்வியைப் புகட்டுவதற்குரியதீவிரநடவடிக்கைகளில் சுவாமிகள் ஈடுபட்டார்கள்.அத்துடன் சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் ஆசிரியராகக் கடமையாற்றியகாலத்தில் (1917-1922)சாதியமும்,வறியோர் - செல்வந்தர் என்றஏற்றத் தாழ்வுகளும் உயர்கல்விக்குத் தடைக்கல்லாக இருந்தமையைச் சுவாமிகள் நன்குஅவதானித்திருந்தார். அதனாலேயேஎல்லோரும் விரும்பும் பொதுக்கோட்பாடுடையதும்,சமயசமரசம் பேசுவதும்,சமயப்பொறைகொண்டதுமானஇராமகிருஷ்ண சங்கத்தின் கொள்கைகளேதனக்குமிகப் பொருத்தமானவைஎன்றமுடிபுக்குவந்து,அம்மடத்திற் சேர்ந்து,துறவியாகித்தமிழ்த்தேசியநலன்கருதியகல்விப்பணியில் ஈடுபடலானார்.

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் மலையகப் பகுதிகளிலும் இராமகிருஷ்ண சங்கத்தின் சார்பிற் பாடசாலைகளைநிறுவினார். அப்பாடசாலைகளிலேதேசியக் கல்விக்குமுக்கியத்துவம் அளித்தார். தாய்மொழிக்



கல்விமிகவும் இன்றியமையாததுஎன்பதைஉணர்ந்த சுவாமிகள் அதனைத் தாம் அமைத்தபாடசாலைகளில் முதன்மைப்படுத்தினார். தாய்மொழிக் கல்வியினூடாக மாணவர்களிடம் தேசியஉணர்வுவளரவழிவகுத்தார்.

மகாகவிசுப்பிரமணியபாரதியார்,நாட்டுப்பற்றற்றுத் தூங்கிக் கிடந்ததமிழகத்துமக்களைத்,தனதுபாட்டுத்திறத்தால் தட்டிஎழுப்பிஅவர்களிடையேதேசியஉணர்வையும் சுதந்திரதாகத்தையும் சுடர்விட்டெரியச் செய்தார். பாரதியாரின் பாட்டுத் திறன்களைப் பாரறியச் செய்தசுவாமிவிபுலாநந்தர் தமதுமுகாமைத்துவத்தின் கீழிருந்தபாடசாலைகளிற் பயிலும் மாணவர்களும் பாரதியார் பாடல்களில் ஈடுபாடுகொள்ளச் செய்தார். தமது இலக்கியச் சொற்பொழிவுகளில்:

எந்தையும் தாயும் மகிழ்ந்துகுலாவி
இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்தும் இந்நாடேஅவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்த்து
சிறந்ததும் இந்நாடே - இதை
வந்தனை கூறி மனதில் இருத்திஎன்
வாயுறவாழ்த்தேனோ? இதை
வந்தேமாதரம் வந்தேமாதரம்
என்றுவணங்கேனோ?.
(பாரதியார்:நாட்டுவணக்கம்)

என்றநாட்டுவணக்கப் பாடலையும்,மற்றும் நடிப்புச் சுதேசிகள் பாடலையும் பயன்படுத்துவதுஅவரதுவழக்கமாகும். அத்துடன் பாடசாலையின் அனைத்துவகுப்புக்களுக்கும் உரியபாடப்புத்தகங்களிற் பாரதியார் பாடல்களையும் தேர்ந்தெடுத்துக் கொடுத்தார். சுவாமிவிபுலாநந்தர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் தமிழ்ப் பேராசிரியராகப்



பணிபுரிந்தகாலத்தில் (1931-1933) பாரதியார் கழகத்தைத் தோற்றுவித்துப் பாரதியாருக்குமுதன்மைஅளித்ததோடு,பல் கலைக்கழகபட்டதாரிமாணவரிடையேதேசியஉணர்ச்சிமே லோங்கவும் செய்தமுதல் தமிழ்ப் பேராசிரியரும் ஆவார்.

சுவாமிகள் காந்தியக் கோட்பாடு,தீண்டாமை,பெண்ணடி மை,எல்லோருக்கும் கல்விஎன்றவிடயங்களுக்குமுன்னுரி மைஅளித்துச் செயற்பட்டார். அக்காலத்திலேதமிழ் நாட்டில் திராவிட இயக்கத்தினர் தீண்டாமைஒழிப்பு,சாதிஒழிப்புஎன்ப வற்றைமுன்னின்றுநடத்தியதுபோன்றே,ஈழத்தில்; அப்பணி களைமுன்னெடுத்துச் செல்வதில் சுவாமிகள் மும்முரமாகஉ ழைத்தார்.சுவாமிகள் கடவுள் நம்பிக்கையற்றசுயமரியாதை இயக்கத்தாருடனும் தொடர்புகொண்டிருந்தமைஅவரதுதீ விரப் போக்கைக்குறிப்பதாகும். சுயமரியாதை இயக்கத்தின் விடுதலை என்ற இதழிலும் சுவாமிகள் சிலகட்டுரைகள் எழு தியுள்ளார். சுயமரியாதை இயக்கத்தில் அதீதஈடுபாடுகொண் டிருந்தபுரட்சிக்கவிஞர் பாரதிதாசன் போன்றவர்களாலும் சுவாமிநன்குமதிக்கப்பட்டார்.ஈழத்தில் 'மறுமலர்ச்சிக் கழ கம்'தொடங்கப்பட்டபோது,அதன் தொடக்கக் கூட்டத்திற் பங்குபற்றிசுவாமிகள் உரையாற்றியுள்ளார். சுவாமிகள் புதியசிந்தனைகளையும் சமூகமறுமலர்ச்சியையும் ஊக்கப் படுத்தியதோடு,மறுமலர்ச்சிஎழுத்தாளர்களின் ஈழகேசரிபத் திரிகையிலேதாமும் பலகட்டுரைகள் எழுதி,மறுமலர்ச்சிச் சிந்தனைகளைமக்களுக்கு ஊட்டுவதிலும் முயற்சிஎடுத்துவந் துள்ளார்.

அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மைபூண்டொழுகலான். (குறள்: 30)

என்றகுறள்மொழிசுவாமிகளைமிகவும் கவர்ந்திருந்தது. துறவுவாழ்க்கைவேதாந்தம்,சித்தாந்தம்,அத்துவைதம் முதலா னதத்துவஅறிவிலும் சுவாமிகள் கைதேர்ந்திருந்தார். மனித நேயத்தை - மானுடத்தைஅவர் நன்குஉணர்ந்துகொண்டு மானுடசேவையில் தன்னைமுழுமையாகஅர்ப்பணித்தார். திருவள்ளுவர் கூறும் அந்தணரல்லாதபிராமணீயத்தைச் சுவாமிகள் மிகக் கடுமையாகஎதிர்த்துச் செயற்பட்டார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சுவாமிகள் பேராசி ரியராகக் கடமையாற்றியபோது,திருவேட்களத்திற் சேரி யில் வாழ்ந்தமக்களுக்காகஅவர் மேற்கொண்டசமூகசீர்திருத் தப்பணிகளையும் பௌராணிகத்திற்குஎதிரானபுரட்சிகரச் செயற்பாடுகளையும் கண்டுபல்கலைக்கழகப் பிராமணியஅ திகாரிகள் அவர்மீதுசீற்றம் கொண்டு,அவருக்கெதிரானநடவ டிக்கைகளில் ஈடுபட்டமைஅறியப்படுகின்றன. அதனாலே யேசுவாமிகள் பேராசிரியர் பதவியிலிருந்துதானாகவேநீ ங்கி,முழுநேரசமூகத் தொண்டராக இராமகிருஷ்ண சங்கப் பணிகளில் ஈடுபடலானார்.

சுவாமிவிவேகானந்தர் பாரதநாட்டிலேதேசியஉணர்வை சமயத்தினூடாகவேபோதித்தார். அவரதுசொற்பொழிவுகள் மக்களைஉற்சாகப்படுத்திநல்வழிப்படுத்துவனவாகஅமைந் தன. பாரதநாட்டின்தேசியஎழுச்சிக்குசுவாமிவிவேகானந்தர்; ஆற்றியசேவைகளைஅவரதுசொற்பொழிவுகளைப் படிப் போர் அறிந்துகொள்வர். சுவாமிவிவேகானந்தரின் சொற் பொழிவுகள் மக்களைவீறுகொண்டெழச் செய்தன. வீரதீர மேமெய்ந்நெறிக்குஅறிகுறி; வீரமில்லாதவனிடத்துஞானம் உதிப்பதில்லை.என்பனசுவாமிவிவேகானந்தரின்பொன் மொழிகளிற் சிலவாகும். தேசியம் போற்றியசுவாமிவிபுலா நந்தர் தமிழ் மக்கள் உரம்பெற்றவர்களாட்க,உறுதியுடை யவர்களாகவாழ்ந்தால்தான் தேசியத்தைப் பேணுவார்கள் என்றெண்ணினார். அதனாலேயேவிவேகானந்தரின் சொற் பொழிவுகளிலிருந்துமேற்கோள்கள்காட்டுவதுஅவதுவழக்க மாக இருந்தது. சான்றாகசுவாமிகள் தனதுகட்டுரைஒன்றில் சுவாமிவிவேகானந்தரின் சொற்பொழிவிலிருந்துஎடுத்தாண் டஒருபந்தியைநோக்கலாம்:

எழுந்திருங்கள். சோம்பலையும் மூடத்தனத்தையும் வீசியெ றிந்துவிட்டுவெளியேஉலாவிஉலகத்தின் ஏனைய பாகங் களிலுள்ளமாந்தர்கள் முன்னேற்றம் அடைந்துகொண்டு போவதைப் பாருங்கள். எத்தனைநாளைக்கு மூலையில் ஒதுங்கிக்கிடக்கப் போகிறீர்கள். நீங்கள் சுத்தவீரர்களின் வழிப் பிறந்தவர்கள் என்பதைமறந்துவிட்டீர்களா? சூரனுக் குஉயிர்துரும்பு. தேசமுன்னேற்றத்துக்காகஉயிரையுங் கொடுக்கத் தயாராயிருக்கும் வாலிபர்கள் ஆயிரக்கணக்கா னபேர் முன்வரவேண்டும். மேனிலைஅடைவதற்குமுயல் வோம். அந்தமுயற்சியில் உயிர்போனாலும் போகட்டும். (சு.வி.ஆ.தொகுதி:1:பக்.8)

மேலேதரப்பட்டசுவாமிவிவேகானந்தரின் கூற்றில் அமைந் தஎண்ணக்கருத்தைச் சுவாமிவிபுலாநந்தர் தமிழாக்கம் செய்துதமிழ் மக்களுக்குப் பரப்புரைசெய்தார்.சுவாமிகள் வாழ்ந்தகாலத்திலே (1892-1947)தேசியம், இனத்துவம்,சு தந்திரஉணர்வுஎன்பனஆங்கிலேயஆட்சியாளரால் நசுக்கப் பட்டிருந்தன. அக்காலக்கட்டத்திலேதமிழ் மக்களுக்குத் தேசி யம் சார்ந்தஉணர்வுகள் ஏற்படும் வகையிற் பரப்புரைப் பாங்கிலானஎழுத்துக்களால் மக்களைத் தட்டியெழுப்பியஒ ருதேசியவீரனாகச்; சுவாமிவிபுலாநந்தர்திகழ்ந்துள்ளார்.

சுவாமிவிவேகானந்தர் பல நூறு மைல்கள் கால்நடை யாக இந்தியாவின்;பல்வேறுகிராமங்களுக்குச் சென்று பணிபுரிந்தவராவர். சுவாமிவிபுலாநந்தரும் தமதுகல்விப் பணியைவிரிவுபடுத்தும் பொருட்டுக் கிழக்கிலங்கையிற் கல் வியிற் பின்தங்கியபல்வேறுகிராமங்களுக்குக் கால்நடையாக வும்,மட்டக்களப்புவாவியின் மேற்குக்கரையிலுள்ளபின்தங் கியபகுதிகளுக்குத் தோணியிற் சென்றும்கல்வியில் தூங்கிக் கிடந்தகிராமத்தினருக்குப் புத்துணர்ச்சிஅளித்தார். அத்தகை



யோர் வாழ்ந்தகிராமங்களில் இராமகிருஷ்ணசங்கப் பாடசாலைகளைஉருவாக்கினார்.அத்துடன்வறியமாணவருக்கும்,பெற்றோரை இழந்தமாணவர்களுக்கும் மட்டக்களப்புக் கல்லடிஉப்போடையிலேதாம்; உருவாக்கியசிவானந்தாவித்தியாலயத்தில் கல்விகற்கும் வாய்ப்பைவழங்கினார்.அக்கல்லூரியின்அருகேசிறுவர்இல்லம்அமைத்துஉணவும்உடையும் தங்கியிருந்துகற்கும் வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுத்தார். சுவாமிகள் மேற்கொண்டஇத்தகுகல்விமற்றும் சமூகப் பணிகளைநேரில் அறிந்தமுதியவர்கள் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். சாதிப் பிரிவினைகள்மற்றும்சமூகஏற்றத்தாழ்வுகள் இல்லாததமிழ்ச் சமூகம்; உருவாகவேண்டும்;; ;அப்போதுதான் உலகஅரங்கில் தமிழர் சமநிலையும் சமவாய்ப்பும் பெறமுடியும் என்றதொலைநோக்குடன் சுவாமிகள் செயற்பட்டார். ஒருதேசம் மேம்பாடடையவேண்டுமெனில் அங்குபெண் கல்வியும்,பெண்களின் முன்னேற்றமும் மிகஅவசியம் என்பதைச் சுவாமிகள் எழுத்திலும் பேச்சிலும் வெளியிட்டதோடு,அவற்றுக்குச் செயல்வடிவமும் கொடுத்தார். பெண்கள் கல்விகற்பதற்குரியபாடசாலைகளைஅமைத்தார். ஆண்களைப் போன்றுபெண்களும் பாடசாலைவிடுதியிலிருந்துகல்விகற்றுசமூகமுன்னேற்றத்திற்குஉழைக்கவேண்டும் என்பதுசுவாமிகளின் விருப்பமாகும்.மட்டக்களப்புகாரைதீவில் பெண்களுக்காகவிடுதியுடன் சுவாமிகள் அமைத்தசாரதாவித்தியாலயம் இதற்குஒருசிறந்தஎடுத்துக்காட்டாகும்.சுவாமிகள் சர்வதேசநல்லுறவுபற்றிக் குறிப்பிடும்போது,ஆண்களோடு பெண்களையும் சமமாகவைத்துநோக்;கினார். பெண்கள் உயர்கல்விகற்றுஉள்நாட்டுஅலுவல்கள் மட்டுமன்றிவெளிநாட்டுஅலுவல்களிலும் பங்குகொள்ளவேண்டும் என்றகருத்தைஎழுபத்தைந்துஆண்டுகளுக்குமுன்பாகவே கூறியுள்ளமைசிந்திக்கத்தக்கதாகும்.



சுவாமிகள் தமிழகத்திலும் ஈழத்திலும் சமூகசீர்திருத்தம்,தேசியம்,பண்பாடுஎன்றவிடயங்கள் பற்றிச் சொற்பொழிவுகள்நிகழ்த்தினார்;ஆய்வுக்கட்டுரைகள் இதழ்களிலும் பத்திரிகைகளிலும் எழுதினார்;தாம் பத்திரிகைஆசிரியராக இருந்ததமிழ்,ஆங்கிலப் பத்திரிகைகளில் ஆசிரியர் தலைப்புக் கட்டுரைகள் எழுதினார். இவற்றின் மூலமாகத்தமிழ்த் தேசியத்தைஉருவாக்குவதிற்; சுவாமிகள் பெரிதும் அக்கறை காட்டிவந்துள்ளார். தேசியஉணர்வைமாணவரிடையே வளர்த்தெடுப்பதற்குப் பாரதியாரதுதேசியப் பாடல்களையும்,விவேகானந்தரின் சொற்பொழிவுகளையும் சுவாமிகள் நன்குபயன்படுத்தியுள்ளார். மக்கள் அனைவருக்கும் தாம் வாழும் நாட்டின் மீதானதேசியஉணர்வுஏற்படவேண்டும். அத்தகையஎண்ணம் இளமையிலிருந்தேதோன்றவேண்டும். எனவேஅதற்குரிய இடமும் வழியும் பாடசாலைக்கல்விமுறையேஎன்பதைநன்குணர்ந்துகொண்டகல்விஉளவியல் அறிந்தசுவாமிவிபுலாநந்தர் அதற்குரியவழிமுறைகளைப்பாடத்திட்டத்திலும் கல்விமுறையிலும் சேர்த்துக்கொண்டார்.

இலங்கையில் சட்டபூர்வமாகத் தாய் மொழிக்கல்வியைகலாநிதி. று.று.கன்னங்கரா 1944 இல் அறிமுகப்படுத்தினார். ஆனால் அதற்குமுன்பாகச் சுவாமிவிபுலாநந்தர் 1924 இல் ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் என்றபத்திரிகையிலேதாய்மொழிக் கல்வியின் அவசியம்,அதன் தேசியமுக்கியத்துவம் என்றவிடயங்கள் பற்றித் தொலைநோக்குடன் எழுதிவந்தார்;. தாய்மொழிகற்றல் மானுடஉரிமையாகும். சென்னைப் பல்கலைக்கழகத்திலேதமிழ்மொழிபுறக்கணிக்கப்படுவதைஎதிர்த்து முதன்முதலாகச்; சுவாமிவிபுலாநந்தரர்குரல்கொடுத்தார் என்பதற்குச் சுவாமிகளின்; எழுத்தேசான்றாகின்றது:

சென்னைசருவகலாசாலைசுதேசபாஷைகளைப் புறக்கணித்துவருகிறதென்பதுமறுக்கொணாஉண்மையே. சருவகலாசாலைஏற்பட்டிருப்பதுஎதற்கோ? ஏழைச் சனங்களிடமிருந்துபெறுகிறவரிப் பணத்திலிருந்துகோடிக்கணக்கானரூபாக்களைசருவகலாசாலைக்குக் கொடுத்துவருவதுஎன்னகாரணத்திற்காகவோ? ......... இன்னோரன்னகுறைகளைஆராய்ந்து நோக்குவதுதேசாபிமான முடைய பெரியார் மேற்பொறுத்தகடனாகும். (சு.வி. ஆ. தொகுதி1. பக். 60)

தமிழகத்திலே,தேசியம் பேசப்பட்ட காலத்திலேதேசியமொழிகளில் ஒன்றாகியதமிழ்மொழிபல்கலைக்கழகத்தில் புறக்கணிக்கப்படுதல் என்பதுதேசத்துரோகமாகும்எனச்சுவாமிகள்துணிந்துஎழுதியதன் மூலம்,அவரதுதாய்மொழிப் பற்றும்,அவரதுதேசியநோக்கும் அவற்றுக்கானசெயற்பாடுகளும் புலப்படுகின்றன. துறவுநெறி நின்றுதமிழ்த்தேசியமும்,தமிழர் பண்பாடும் மேன்மைஅடையப் பாடுபட்டசுவாமிவிபுலாநந்தரின் போதனைகளும் காட்டியநல்வழிகளும் தமிழினம் மேம்பாடுஅடைவதற்குரியவழிமுறைகளாகவேஅமைந்தன.

சுவாமிகள் வாழ்ந்தகாலத்தில்; ஈழத்திலும் இந்தியாவிலும் நாகரிகவரலாறு,பண்பாட்;டு வரலாறு,அரசியல் வரலாறு என்றவிடயங்கள் பற்றியவிளிப்புணர்வுஏற்படத் தொடங்கின. தேசியம், இறைமைஎன்றஉணர்வுகள் கற்றவர்களிடம் ஏற்படத் தொடங்கின. இனம்,மொழி,நாடுஎன்றவிடயங்கள் கற்றோரால்முனைப்புடன்; பேசப்பட்டன. தமிழகத்திற் காந்தீயம்,சுதந்திரப்போராட்டம்,தனித்தமிழ் இயக்கம்,திராவிட இயக்கம் என்பனவேகம்பெற்றிருந்தகாலத்தில் அங்குவாழ்ந்தசுவாமிகளுக்குஈழத்தமிழர்களின் வரலாறுபற்றியசிந்;தனையும் பெரிதும் ஏற்;படுவதாயிற்று. அதனால்

ஈழத்தமிழர் வரலாறுஎழுதப்படவேண்டும் என்பதுபற்றிக் கல்விமான்களிடம்சுவாமிவிபுலாநந்தர் எடுத்தியம்பிவந்த தோடு,அவற்றைத்தமதுஎழுத்துக்களிலும் வெளியிட்டுவந் துள்ளார்.

சுவாமிகள் தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பிறநாட்டினரும் அறிந்துகொள்ளும்; வகையில் ஆங்கி லத்திலும் நூல்கள்,ஆய்வுக்கட்டுரைகள் வெளிவரவேண்டும் என்பதில் மிக்கஅக்கறையுடையவராகச் செயற்பட்டார்.பண் டையசுமேரியம்,பாபிலோனியம்,கிரேக்கம் முதலானநாக ரிகங்கள் பற்றிஆராய்ந்தசுவாமிகள் தமிழ் அறிஞர்களிடம் விடுத்துள்ளவேண்டுகோள் வருமாறு:

எமதுதாய் நாடாகியபாரதகண்டத்தின் நாகரிகமோ இவை எல்லாவற்றுக்கும் முற்பட்டதுஎனச் சான்றுகள் நிறுவினர். செல்வச் செருக்கினால் அறிவு மூடுண்டுகிடக்கின்றமேற் றிசைப் பிரபுக்கள் இதனைஅறிந்தாலும் வெளியிடுவதில்லை. எனவேநம்நாட்டுப் பெருமைகளைநாமேகண்டறிந்துவெ ளிப்படுத்தமுன்வரவேண்டும். அதற்குஉடல்,பொருள்,ஆவி மூன்றையும் தேசசேவைக்கேஒப்புக்கொடுத்து,நமதுதேசத் தையும் மொழியையும் பெருமையடையச் செய்யவேண்டும். என்றார்.

ஈழத் தமிழரதுஅரசியல் வரலாற்றில் எத்தகையசிக்கல் கள் தோன்றும் என்பதைச்சுவாமிகள் தொலைநோக்கில் உணர்ந்திருந்தார். அதனாலேயேஅவர் ஈழத்தமிழர் வரலா றுஎழுதப்படவேண்டும் எனவும்,பாடசாலைமாணவரும் மற்றவரும் தம் வரலாற்றைத் தெளிவாகஅறிந்துகொள்ளத் தக்கவகையில் வரலாற்று நூல்கள் எழுதப்படவேண்டும் எனவும்,அவைபாடசாலைகளிற் படிப்பிக்கப்படவேண்டும் என்றும் எழுதினார்.(இ. பா. 2004: பக்.10)ஈழத்தமிழரின் வரலாறுபற்றியபிரச்சினைகள் இன்றுஉலகஅரசியல் அரங் கில் தெளிவின்றிப் பேசப்படுவதற்குரியமுக்கியகாரணிகளில் ஒன்றுஈழத் தமிழர் வரலாறு இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்பாகத் தெளிவாகஎழுதப்படாமையும்,அவ்வுண்மைவ ரலாறுஉலகநாடுகளால் அறியப்படாமல் இருந்தமையுமே யாகும். இலங்கையில் வாழும் இளையதலைமுறையினரின் பாடத்திட்டங்களில் ஈழத்தமிழர் பற்றியவரலாறு இடம்பெற வில்லைஎன்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சுவாமிகள் பல்லாண்டுகள் ஆராய்ந்துஎழுதியயாழ் நூல்,தமிழர் பண்பாட்டுவரலாறுசார்ந்தஆய்வுக் கட்டுரை கள் அனைத்தும் தமிழர்பண்பாடு,வரலாறுபற்றிமக்களுக்கு விளிப்புணர்ச்சிஏற்படுத்தும் தகையனவாகும். சுவாமிகள் இசைத்தமிழ் ஆய்வில் கால்பதியாது,ஈழத்தமிழர் வரலாற் றில் ஈடுபட்டுஆய்வுசெய்திருந்தால்,பேராசிரியர் பரணவி தானதொட்டுக் காட்டியபூர்வீகஈழத்;தமிழர் வரலாற்றை இற்றைக்கு 75 ஆண்டுக்குமுன்பாகவேமுழுமையாகஎழுதித் தந்திருப்பார்; என்பதைப்பதிவுசெய்தல் தகும். சுவாமிகள் தனது இறுதிக் காலத்தில் நோயாற் பீடிக்கப்படாமல் இருந் திருந்தால்,இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்; பேராசிரிய ராக இருந்துகொண்டேஈழத்தமிழர் வரலாற்றைமுழுமையாக எழுதியிருப்பார் எனலாம்.

ஐரோப்பியநாடுகளில் ஏற்பட்டகைத்தொழிற் புரட்சியின் பயனாகஅரசியல் வரலாற்றுச் சிந்தனைகளும் சித்தாந்தங் களும் விரிவாகவளர்ச்சியடைந்தன. அதனால் அந்நாட் டினர் உலகநாடுகள் பலவற்றைஉள்ளடக்கியபேரரசுக ளைஅமைத்தனர். அவர்களதுநாடுகளிற் சிறந்தஅரசியல் நிலவியதால் பொருண்மியத்திலும் அவர்கள் மேம்பட்டனர். சாதனைகள் பலபுரிந்தார்கள். ஆனால்,இவர்களுக்குப் பல நூற்றாண்டுகளுக்குமுன்பே,திருவள்ளுவர் சிறந்தஅரசியல் சி த்தாந்தங்களைக் கூறியிருந்தார். தமிழர் மத்தியில் திருவள்ளு வர் கூறியஅரசியல் சித்தாந்தங்கள்கூட சரியானமுறையில் கைக்கொள்ளப்படாததன் காரணமாவேபிற்காலத்திலேதமி ழர்களின் அரசுகள் அந்நியர்களுக்குஅடிமைப்பட்டுத்தமிழர் தேசியமும் சீரழிந்தனஎனலாம்.

சுவாமிவிபுலாநந்தர் வாழ்ந்தகாலத்தில் ஈழத்தில் கோல்புறுக் ஆணைக்குழுவினர்,டொனமூர் அரசியல் ஆணைக்குழுவினர் ஆகியோரின் அரசியல் கோட்பாடுகள் நடைமுறைப்படுத் தப்பட்டன.தமிழினஉணர்வுமிக்கசுவாமிகளுக்குஅவர்களின் அரசியல் கோட்பாடுகளும் நடைமுறைகளும் திருப்தி இல்லா திருந்திருக்கலாம். அந்நிலையிலேதான் சுவாமிகள் சிறந்தஅர சியல் நூல்கள் எழுதப்படவேண்டும் என்று கூறினார். அவர் துறவியாக இருந்ததன் காரணமாகஅரசியல் துறையில் நாட் டமுள்ளஅறிஞர்களைஎழுதத் தூண்டும் வகையிலும்,அர சியல் நூல்கள் தமிழில் எழுதப்படவேண்டிதன் அவசியத் தையும் அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

தமிழர் வரலாற்றையும் பண்பாட்டையும் எடுத்துக்கூறும் ஆவணங்களாகத் தமிழ் இலக்கியங்கள்,கல்வெட்டுக் கள்,கோயில்கள்,சிற்பங்கள்,ஓவியங்கள்,பிறநாட்டார் குறிப்புக்கள்,மற்றும் சித்தமருத்துவம் முதலானவற்றைக் குறிப்பிடலாம். ஆயினும் தமிழ்ப் பண்பாட்டுவரலாற்றி னைமுழுமையாகஅறிந்துகொள்ளத்தமிழர் அனைவரும் முயற்சிசெய்யவேண்டும். சுவாமிவிபுலாநந்தர் எழுதிய மேற்றிசைச் செல்வம்,விஞ்ஞானதீபம் முதலானபல்வேறு ஆய்வுக் கட்டுரைகளும்,யாழ் நூலும் தமிழ்ப் பண்பாட்டுவ ரலாறுபற்றியனவேயாகும். மேலும்,தமிழர் பண்பாட்டுப் பெருமையைவெளிப்படுத்தும் பல்வேறுபட்டசான்றுகளை விரிவாகஆராய்ந்துதமிழிலும் ஆங்கிலத்திலும் அவர் எழுதி யகட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை. அத்துடன்;அனைத்துத் துறைசார்ந்த நூல்களைப் புதுக்கியும் பதிப்பித்தும் புதுநூல் ஆக்கியும் தருதல் என்பனதமிழர் கடனாகும் என்பதுசுவாமிக ளின் வேண்டுகோள்களாகும்.

**அடிக்குறிப்புகள்:**


**1.சுவாமிவிபுலாநந்தரின் ஆக்கங்கள்,தொகுதி - 1, மட்டக்களப்புசுவாமிவிபுலாநந்தர் நூற்றாண்டுவிழாச் சபை, 1995.**

**2.சுவாமிவிபுலாநந்தர், யாழ். நூல்,கரந்தைத் தமிழ்ச் சங்கம், 1947**

**3.இளையதம்பிபாலசுந்தரம்,விபுலாநந்தம்,தமிழின மேம்பாடுநோக்கியசிந்தனைகள், சி.வை.தாமோதரம்பிள்ளைஒன்றியவெளியீடு,கனடா, 2004.**

**4.விபுலம் - சுவாமிவிபுலாநந்தர் நினைவுவிழாச் சிறப்பு மலர்-2003,சுவாமிவிபுலாநந்தர் கலைமன்றம்,கனடா,விவேகாஅச்சகம். ரொறன்ரோ.**




# சைவசித்தாந்தம் கற்றதும் பெற்றதும்



**வைத்தியக் கலாநிதி**
**சிவஸ்ரீசான பிரதாபன் தேசிகர்**
**தலைவர் இலங்கை சைவநெறிக் கழகம்**

**சி**வபெருமான் அருவம்,உருவம்,அருவுருவம் ஆகிய வடிவங்களைக் கடந்தவன் என்றும், அருவம்,உருவம்,அருவுருவம் ஆகிய வடிவங்களை ஏன் பூணுகின்றார் என்றும் கடந்த பகுதியில் பார்த்திருந்தோம். ஐந்தொழில்கள் பற்றி அறிந்து கொள்வதற்கு முன்னர், இறைவனின் வடிவங்கள்பற்றி இன்னும் கொஞ்சம் தெரிந்து கொள்வது நல்லது என்று கருதுகிறேன். பூரணமான தெளிவை ஏற்படுத்த அவை உதவும்.

உருவத்திருவடிவங்கள் மூன்றுவகையாக கருதப்படுகின்றன.

**1.போக வடிவம்:**

உயிர்களுக்கு உலக இன்பத்தை வழங்கும் பொருட்டு, மணக்கோலம் பூண்டிருப்பது.உயிர்களின் பொருட்டு கல்யாண சுந்தரவடிவம் தாங்கினும் சிவபெருமான் போகம் நுகருபவதில்லை.

**உ+ம் - கல்யாண சுந்தர மூர்த்தி வடிவம்**



2.யோக வடிவம் - உயிர்களுக்கு ஞானத்தை வழங்கும் பொருட்டு, குரு வடிவம் கொண்டிருப்பது.

**உ+ம் :- தென்முகக்கடவுள் வடிவம்**



3. வேக வடிவம் - இறைவனை நினைத்து வழிபடும் அன்பர்களின் துன்பத்தைப் போக்கும் பொருட்டு வேகம் கொண்டவராக போர்க் கோலம் பூண்டிருப்பது. உயிர்களின் வினையைப் போக்குவதற்கு தாங்கும் வடிவம் இதுவாகும்.

அட்ட வீரட்டச் செயல்கள் ஆற்றியபோது எடுத்த வடிவங்கள் இவற்றுக்கு உதாரணங்களாகும்.காலனை உதைத்தது,சலந்திரனைத் தண்டித்தது,திரிபுரம் எரித்தது என்பன உதாரணங்களாகும்.

**உ+ம் - காலசம்கார மூர்த்தி**



இறைவன் பூணுகின்ற தாதான்மிய சம்பந்தத்தில் மூவகை வடிவங்களாகிய அருவம், அருவுருவம், உருவம் தாங்குதலையும்; உருவவடிவத்தின் மூவகைத்தன்மைகளையும் பார்த்தோம். இனி தாதான்மிய சம்பந்தத்தினால் இறைவன் ஆற்றும் ஐந்தொழில் பற்றி பார்ப்போம்.

சிவபெருமானின் ஐந்தொழிலை சிவபெருமானின் திருநடனத்தினூடு காண்பது சைவசமயமாகும்.எனவே; இறைவனின் ஐந்தொழில்களை உணர்த்தும் இறைவனின் கூத்தை வெளிநாட்டாரும் அறிஞர்களும் விஞ்ஞானிகளும் கண்டு வியப்படைந்துள்ளர். விஞ்ஞானத்தை விஞ்சிய மெஞ்ஞான திருநடனத்தைக் கண்டு எமது பண்பாட்டுச்சிறப்பை பாராட்டாதோர் எவரும் இலர்.

முதலில் இறைவனின் ஐந்தொழில் ஆற்றும் கூத்தினைக் கண்டு விஞ்ஞானிகளும் அறிஞர்களும் கூறிய கருத்தைக் காண்போம்.

FRITJOF CAPRA எனும் மேலைத்தேய இயற்பியல் வல்லுனர்; நவீன இயற்பியலையும் நடராசப் பெருமானின் திருநடனத்தையும் அழகாக தொடர்புபடுத்தி ''every subatomic particle not only performs an energy dance, but also is an energy dance; a pulsating process of creation and destructionwithout endFor the modern physicists, then Shiva's dance is the dance of subatomic matter. As in Hindu mythology, it is a continual dance of creation and destruction involving the whole cosmos; the basis of all existence and of all natural phenomena.'' என்கிறார்.

பண்டைய கால இந்திய மக்கள் ஆக்கல்,காத்தல்,அழித்தல் அடங்கிய தாண்டவத்தை இறைவடிவாகக் கண்டு சிலைகளாய் வடித்ததாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர் CARL SAGAN குறிப்பிடுகின்றார்.

சைவநெறி கூறும் ஐந்தொழில்களாவன படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல்,அருளல் என்பனவாகும். முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் தானே இவையனைத்தையும் செய்வதும் உண்டு. பிரம்மா திருமால் உருத்திரனைக் கொண்டு செய்விப்பதும் உண்டு. இவர்கள் தமது புண்ணிய விசேடத்தால் முழுமுதற்பொருளாகிய சிவப்பரம்பொருளிடம் அதிகாரசக்தியை அவருடைய ஏவலால் பெற்று படைத்தல்,காத்தல்,அருளல் ஆகியவற்றை ஆற்றுவர்.

மறைத்தலை மகேசுவரனும் அருளலை சதாசிவனும் ஆற்றுவர்.

இறைவனாகிய சிவப்பரம்பொருள் எந்தவொரு கருவி காரணங்களும் இன்றி நினைத்த மாத்திரத்தில் ஐந்தொழில்களை மேற்கொள்வார்.

வேதமரபுப்படி படைத்தல்,காத்தல்,அழித்தல் ஆகிய மூன்று தொழில்களே பேசப்படும். ஆனால் சிவாகம மரபுப்படி ஐந்தொழில்கள் சொல்லப்படுகின்றன.



காக்கும்போது மறைந்து நிற்றலால் மறைத்தல் காத்தலிலும் உயிர்கள் இளைப்பாறும் பொருட்டு அழித்தல் நடைபெறுவதால் அருளல் அழித்தலிலும் அடங்கும்.

படைத்தல் - உள்ளதைத் தோற்றுவித்தல் (இல்லாததை தோற்றுவித்தல் எனப்பொருள் படமாட்டாது. உதாரணமாக பனிக்கட்டியைத் தோற்றுவித்தனர் என்றால் அங்கு நீர் பனிக்கட்டியாக மாறியுள்ளது என்றுதான் பொருள்படும். அதுபோலவே சூக்குமநிலையில் இருந்ததை( மாயையில் இருந்து) தூலநிலைக்கு கொண்டு வருதலே படைத்தல் எனப்படும்.அதாவது காரணநிலை(சூக்கும நிலை)யில் இருந்து காரியநிலைக்கு



(தூலநிலைக்கு) கொண்டு வருதல். மாயையில் இருந்து தனு,கரண,புவன போகங்களைப் படைத்தல்.

காத்தல் - தூலநிலைக்கு கொணர்ந்த வற்றை அந்தநிலையில் தொடர்ந்தும் நிலைபெறச்செய்தல். அதாவது தனு,கரண,புவன போகங்களை உயிர்களின் வினைப்பயனுக்கு ஏற்ப அனுபவிக்கும் வரை நிலை பெறச் செய்தல் அழித்தல் - தூலநிலையில் இருந்து சூட்சும்ச் நிலைக்கு வருதல், அழித்தல் என்பது முற்றாக இல்லா மல் செய்தல் என்று பொருள் அன்று.

பிறவிச்சுழற்சியால் உயிர்களுக்கு ஏற்படும் களைப்பு நீங்கும் பொருட்டு படைத்தவகைகளை மீளவும் மாயை யில் ஒடுக்குதல்.

மறைத்தல் - பற்றுக் கொண்ட உயிர்கள் பக்குவம் பெறுவதற்காக இறைவன் தன்னை மறைத்து உல கத்தையே அவ்வுயிர்கள் காணுமாறு காட்டுதல்.

ஆணவம் காரணமாக இறைவனே உயிர்களுக்கு கன்மம்,மாயை ஆகிய வற்றை கூட்டுவித்தான். அதாவது ஆணவ நோய்க்கு மருந்தாக ஏனைய



இருமலங்களை கூட்டுவித்தான். மும் மலங்களும் சடப்பொருட்கள். தாமா கத் தொழிற்படாது. இறைவன் அவற் றைத் தொழிற்பட வைத்து அவற்றின் சக்தியை குறைவடையச் செய்கின் றான். சடப்பொருள் தொழிற்பட அதன் சக்தி தேயும் என்பது பௌதீக விஞ்ஞானம்! அதை இங்கு பொருத்தி உணர்க.

அருளல் - பக்குவம் பெற்று தன்னை நோக்கும் உயிர்களுக்கு தன்னைக் காட்டித் தன்னுடைய திருவடியில் சேர்த்தல்.

எனவே படைத்தல், காத்தல்,அழித் தல் என்பன மாயையிலும் மறைத் தல்,அருளல் உயிர்களிடத்திலும் நிகழ் கின்றன.

சிவபெருமான் ஐந்தொழில்களை தனது திருநடனத்தின் வாயிலாக வெளிப்படுத்துகின்றார்.சிவப்பரம் பொருளின் திருநடனத்தை மூன்று வகையாக நோக்கலாம்.

**1.ஊன நடனம்**


**2.ஞான நடனம்**

**3.ஆனந்த நடனம்**



## ஊன நடனம்

ஊன நடனத்தினூடாக உயிர்க ளுக்கு கட்டுண்ட உலகவாழ்வை அளிக்கின்றார். அதாவது உயிர்க ளுக்கு பிறப்பை வழங்குவது. இவ்நட னத்தின் வழியாக உயிர்கள் உலகச்சி ற்றின்பத்தை துய்க்கின்றன. ஊன நடனத்தை குறை கூத்து என்றும் வழங்குவர். குறைவான கால அளவு டைய இன்பங்களை(உலகியல் சி ற்றின்பங்கள்) தருவதால் குறை கூத்து என்பர்.




**தூல ஐந்தொழில் -** உலகத்தை படைத்து காத்து அழித்து மறைத்து அருளுகின்ற ஐந்தொழில்.

சூக்கும ஐந்தொழில் - சர்வ சங்கார காலத்தில் உலகம் முழுவதையும் அழித்த பின்னர் மீண்டும் தோற்று விக்க ஆற்றும் ஐந்தொழில்.

அதிசூக்கும ஐந்தொழில் - உயிர்க ளின் அறிவுக்கு அறிவாய் இருந்து அறிவைத் தோற்றுவித்தல் ஒடுக்கு தல் செய்தல். இறைவன் உயிருக்கு உயிராக உள்நின்று உணர்த்துவத னாலேயே உயிருக்கு அறிவு நிகழு கின்றது.

## ஞான நடனம்

உயிர்களுக்கு வீட்டைத் தருவது.

ஊன நடனத்தால் உலக இன்பங் களை உயிர்கள் அனுபவிக்கின்ற ன.படிப்படியாக உலக இன்பம் நிலையற்றது என்பதை உணர்ந்து பக்குவப்பட்டு; சிவபெருமானை அடைய நாடிநிற்கும்போது அவ்வு யிர்களின் மலங்களை நீக்கும்பொ ருட்டு ஆற்றும் ஐந்தொழில்.

**ஞான நடனத்தில் இறைவனின் ஐந்தொழில்கள்**

படைத்தல் - மாயையை உதறுதல்
காத்தல் - வல்வினையைச் சுடுதல்
அழித்தல் - மலம் சாய அமுக்கல்
மறைத்தல் - உலகத்தை மறைத்தல்
அருளல் - உயிர்களை ஆனந்த ஒளி யில் அழுத்துதல்

## ஆனந்த நடனம்

ஞான நடனத்தால் பேரின்பத்தை நுகர தலைப்பட்ட சுத்த ஆன்மாக் கள் தொடர்ந்து பேரின்பத்தை நுக ரும் பொருட்டு, அவர்களின் அறிவு இச்சை செயல்களைத் தன்னையே பொருளாகப்பற்றி அழுந்தி இன் பத்தை நுகருமாறு செய்தற்கு ஆற் றும் ஐந்தொழில்.




**ஆனந்த நடனத்தில் இறைவனின் ஐந்தொழில்கள்**

**படைத்தல்- சிவானந்த அனுபவத்தை தோற்றுவித்தல்**
**காத்தல் - அந்த அனுபவத்தை காத்தல்**
**அழித்தல் - தற்போதத்தை அழித்தல்**
**மறைத்தல் - உயிர்,சிவம் இரண்டு என்பதை மறைத்தல்**
**அருளல் - பேரின்பத்தை அழுந்தி அனுபவித்தல்**

*சிவபெருமான் ஆடுகின்ற நடனம் ஒன்றுதான். ஆனால் உயிர்களின் பக்குவத்தன்மைக்கு ஏற்ப அது ஊன,ஞான,ஆனந்த நடனமாக அவ்வுயிர்களுக்கு தோன்றுகின்றது.*

*பிரபஞ்சம் படைக்கப்பட்டபோது முதற்சில கணங்களில் நடந்த நிகழ்வுகளை ஆராயும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள ஜெனிவாவில் உள்ள ஐரோப்பிய அணு இயற்பியல் ஆராய்ச்சிக்கூடத்தின் (*EUROPEAN CENTER FOR PARTICLE PHYSICS RESEARCH&CERN*) முகப்பில் ஆறு அடி உயரமுள்ள நடராசர் சிலை நிறுவப்பட்டிருக்கின்றது. இது தமிழர் பண்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ள மகுடம் என்றால் மிகையில்லை. இச்சிலையடியில் ஆங்கில மொழி*



*பெயர்ப்புடன் கூடிய நடராசரின் சமசுகிரத துதியுடன்* ''Hundreds of years ago, Indian artists created visual images of dancing Shivas in a beautiful series of bronzes. In our time, physicists have used the most advanced technology to portray the patterns of the cosmic dance. The metaphor of the cosmic dance thus unifies ancient mythology, religious art and modern physics.'' *எனும்* CAPRA *இன் வசனம் பொறிக்கப்பட்டிருக்கின்றது.*

*இப்போது சொல்லுங்கள் பகுத்தறிவுள்ளோர் சைவசித்தாந்திகளா? அன்றி கொளுத்துகிற கடும் வெய்யிலும் கருப்புச்சட்டை போட்டு விஞ்ஞான அறிவுக்கு முரணாக திரிகின்றவர்களா?*

# தென்கயிலை ஆதீனக் கவிச்சோலை

கண்ணாம் அரனேயெம் கற்பகமே
தென்கயிலைத் திருவந்தாதி
காப்பு (வெண்பா)

காலக் கருவாய்க் கனிந்தே யருள்கூரச்
சீலந் தருவாய்; சிவன்மகனே - சோலைவளர்
பொன்னாரும்; தென்கயிலைப் பூக்கள் வனமாக்கிக்
கண்தாராய் அந்தாதி காப்பு !

தென்கயிலை அந்தாதி
கட்டளைக் கலித்துறை

உச்;சியெனுங் கைலாய ஈசனார் இல்லத் திறைபாடி
மெச்சியவர் இல்லம் மிதந்தாடிப் பார்வதி
மின்னாகிப் பச்சையுல காளும் பரம்பொருள்
தன்னோடும் பற்றாகித்
துச்சங்கள் போக் கித் தினமருளும்
வள்ளல் துணையாமே !
துணையாரும் வையச் சிவனாருந்
தொண்டனாய்த் தினம்பாடி
கணையாரும் தெய்வக் கனியமுதம்
விள்ளும் கனம்பாடி
இணையாகிச் சித்தர் இறையோதும் வண்ணம்
இருந்தமிழிற் றணையான முத்தித் தலமான
நெஞ்சொடும் தாங்கியதே !

தாங்கி மறையார் தனங்கள் நிறையம்மை தந்தகுடில்
பாங்கில் உறையாரும் பங்கன் சிவனார் பரந்தமலை
தாங்கி மறையோதும் தங்கத் திருநடனம்
தானாகி நீங்கி முகில்பாடும் நேர்கோட்டுச்
சாரல் நிலைத்ததுவே !

நிலைபெருங் கைலை நிதர்சனத் துள்ளே
நெடுந்தொலைவின்
அலையார் சிவனின் அடித்தளத்
தோடுறும் அற்புதங்கள்
மலையும் குகையுமாய் மானச
ரோவர்என் மாசுனையும்
தொலைவில் உயரத் தொடும்வரை
கின்றார் சிவபுரமே !


சிவபுரத் தின்மலை சிந்தும் கதிரலைத்
தென்கயிலைத்
தவபுரத் தின்னடி தாங்கிச் சமைத்ததோர்
தண்பொதிகை
கவர்ந்திடுங் குன்றம் ககனமுற்
றோங்கும் கருப்பொருளாய்
நவமிடுந் திபெத்து நாண்புரி
யென்கவே நாட்டியதே !

நாட்டியதும் தெய்வ நரம் புமின் சாரம் நயக்குமோர்
மேட்டிமை யோடுயர் வேதச் சராசர வித்தகமும்
காட்டிடும் வன்மக் கனிப்பொருள்
நீரார் கரைசலினால் மீட்டிடும் மர்மம் விளைந்தது
கைலை வியன்அழகே !

வியன்அழ கானது உச்சியின் மானசரோ வர்ஏரி
சுயம்இனிப் பாகநல் நீரென வாகவும் மற்றொன்று
பயமுறப் பேய்க்குளம் பாங்கினில்
உண்டாகிப் பக்கமொடும்
அயலினில் உப்பு அடர்ஏரி யாகவும் ஆனதுவே!

ஆனதோர் சிந்துகங்கை யாகும்; பிரமபுத்
ரம்மாகித்
தேனொடும் பூவெனத் தோட்டமாய்
ஆக்கிடும் தண்மலையார்
தானமர் கொன்றையும் சண்பகக் காவொடும்
தண்புலத்தின்மோனமர் ஈசனும் பார்வதி யீர்ப்பதே
தென்கயிலை!
தென்கயிலைத் தெய்வம் திருவார்
மலையிசைத் தேபாடி
அன்பாக்கி வைத்தேன் அருந்தாயு
மானவர் அர்ப்பணமே
முன்பாகி நின்ற முருகனார் தந்தையென
மேவாரும்
தென்;றலாய் ஆர்த்தார் தினமும்
அடியவர் சேவையதே !
சேவையை நல்கித் திருநிலத்துப் பேரிடர்
தீர்ந்தோடத்
தேவையைக் கோர்த்து திருநாளு மாக்கித்
தினஞ்செருகி
ஆவலில் ஆக்கியிணை ஆதீனம்
என்க அருள்காட்டும்
காவலைப் போற்றிடும் கண்ணாம்
அரனேயெம் கற்பகமே !

தென்கயிலை ஆதீன ஞானக்கவி





# இறையும் இசையும்

## சங்க கால இசைக் கருவிகள்

**முன்னுரை**

**ச**ங்கம் அமைத்து மொழி வளர்த்த மூத்த மொழியே எம் தமிழ்மொழி. இது பல ஆண்டுகளுக்கு முன்னரே தோற்றம் பெற்றது. கல்தோன்றா, மண் தோன்றா காலத்தில் தோன்றிய மூத்த மொழியும் தமிழ் மொழியே. சங்ககாலத்தில் பழந்தமிழர்கள் இசையிலும், ஆடலிலும் சிறந்து விளங்கினர். இவ்வாறாக இசையின் தோற்றத்தின் பின்னர் துணை இசைக்கருவிகளின் தோற்றம் மிளிர்ந்தது. நாதம் எனும் தத்துவம் எல்லாப் பொருட்களிலும் இரண்டறக் கலந்த அருவமாக அமைந்துள்ளது. இந் நிலையில் பொருட்களின் அசைவினால் காற்றில் ஏற்படும் அதிர்ச்சியே ஒலிக்குக் காரணம் என அறிவியல் நமக்கு தெரிவிக்கின்றது. இயற்கை தரும் இன்னொலிகளைக் கேட்டு மனிதன் சிந்திக்கின்றான். இது போன்ற இன்னொலிகளைக் கருவிகளில் இசைப்பதற்கு அவன் முயன்றான் என எண்ணுவதற்கு பழங்காலத்தைச் சேர்ந்த சங்கப் பாடல்கள் ஆதாரங்களாக விளங்குகின்றன.

மூங்கில் வண்டுகள் துளையிட்டு அந்தத் துளைகளில் காற்றுப் புகுந்து வெளியேறும் போது இனிய ஒலி பிறந்தது. அருவி நீரின் இனிய இசை முழவு போல் ஒலித்தது. வண்டின் இமிரொலி யாழின் இசையைப் போல் ரீங்காரம் செய்தது. நுண் அறிவின் திறத்தால் மனிதன் பல இசைக் கருவிகளைக் கண்டுபிடிப்பதற்கு மேற்கூறிய இயற்கை தந்த இன்னொலிகள் முன்னோடிகளாக விளங்கின என கவிஞர் ஊகிக்கிறார். சங்க காலத்திலே எவ்வகைய கலை இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டது பற்றி அறிவது முக்கியமானதாகும். சங்க கால இலக்கியங்களில் இசை பற்றி அறிவதற்கு அக் கால இசைக் கருவிகள் ஆதாரமாக உள்ளன. வில்லின் நாணொலி போன்றவை நரம்புக் கருவியின் தோற்றத்திற்கும் வெற்றிப் பெருமிதத்தில் மதுக் குடத்தையும் கேடயம் போன்றவற்றையும் தட்டி ஆரவரித்து தாள வாத்தியங்களின் தோற்றத்திற்கும் தூண்டுதலாக அமைந்திருக்கலாம் என்று கருத இடம் உள்ளது.

**திறவுச் சொற்கள்: மிளிர்ந்தது, நாதம், ரீங்காரம், ஊகிக்கிறார், நாணொலி**

**சங்ககால இசைக் கருவிகள்**

சங்ககால இசைக் கருவிகளை இரு கூறாகப் பிரிக்கலாம். பண்களை இசைக்கத்தக்கவற்றை பண்ணிசைக் கருவிகள் எனவும் தாளத்தை பெருமிதமாகக் குறித்து

"இளங்கலைமணி" சுரேந்திரா– நரேந்திரா
போதனாசிரியர் (வாய்ப்பாட்டு)
நடன, நாடகத்துறை,
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
மின்னஞ்சல்:– msnarendra1288@gmail.com
Contact No: 0094764624990 / 0094754340220





சுவையுடன் ஒலிக்கும் கருவிகளை தாளக் கருவிகள் எனவும் குறிப்பிடப்படும் மேலும் இசை எழுப்பும் வாயில்களைக் கொண்டு அவற்றை நரம்புக் கருவி, தோற்கருவி, துளைக் கருவி, கஞ்சக் கருவி எனப் பிரிக்கலாம். சங்க கால தமிழ் மக்கள் பல விதமான தமிழ் பண்களை தங்கள் இசையறிவு நுட்பத்தால் உருவாக்கி அவற்றை வாயால் பாடுவதுடன் இசைக் கருவிகள் வாயிலாகவும் இசைத்து மகிழ்ந்துள்ளனர். சங்க காலத்தில் இருந்த பல விதமான இசைக்கருவிகள் ஒவ்வொன்றும் பற்றி சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. சங்க கால இசை உலகில் யாழுக்கு மிகச் சிறப்பான இடம் தரப்பட்டுள்ளதை அக் காலப் பாடல்கள் வழியாக நன்கு அறியலாம். யாழ் எனும் கருவி தொல்காப்பிய காலத்திற்கு முன்பே தமிழகத்தில் வழக்கில் இருந்ததாக கூறப்படுகிறது.

**தீந் தொகை நரம்பின் யாழ்.**

**(பதிற்றுப்பத்து,உ.வே.சாமிநாதையர் ப . 89)**

இந்தச் சங்கத் தொகை நூற் குறிப்புக்கள் யாழின் இனிய இசையைப் பழந்தமிழர் சுவைத்து உணர்ந்த அருமைப் பாட்டை உணர்த்துகிறது. இசை பாடும் பாணர்களாலும், ஆடல் புரியம் விறலியர்களாலும் இசைக்கருவி இசைக்கப்பட்டு மன்னர்களுக்கும் மக்களுக்கும் பெரும் இன்பம் அளித்த செய்திகளை சங்க நூல்களில் கண்டு கொள்ளலாம். பழந்தமிழகத்தில் குறிஞ்சி யாழ், முல்லை யாழ் என நிலப் பெயர்கள் கொண்டும் வில் யாழ், சீறி யாழ், பேரியாழ் என அவற்றின் வடிவினைப் பெயராகக் கொண்டும் பல்வேறு கருவி வகைகள் பயிலப் பெற்றிருத்தலைக் காண முடிகின்றது. இவற்றில் காலத்தால் முந்தியது வில் யாழ் ஆகும்.அடுத்து சங்க காலத்தில் காணப்பட்ட இசைக்கருவிகளில் சங்கு என்ற இசைக்கருவியும் காணப்பட்டது. பண்டைத் தமிழர் சங்கைஒரு மங்களமான கருவியாக கருதி இருக்க வேண்டும். ஆகையினால் இறைவணக்க கருவிகளில் ஒன்றாக அதனைக் கொண்டுள்ளனர். திருமுருகாற்றுப்படையில் முருகனை வணங்கும் நிலையில் சங்கொலி எழுப்பப்பட்டதாகவும் பின்வரும் பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது.

**அந்தரப் பல்லியம் கறங்க**

**(திருமுருகாற்றுப் படை, ஜகந் நாதன் ப . 84)**

மேலும் சங்க காலத்தில் பறை என்ற தாள இசைக் கருவி மிகவும் அதிகமாகவும் பழக்கத்தில் இருந்துள்ளதாகவும் தெரிகிறது. வாயிலில் இசை வினைஞர் ஓர் பறையடித்து இசை கூட்டுவது உண்டு. இது துன்பத்தின் நிலையாகவும் மங்கள இசையாகவும் கருதலாம். இதனை ஐங்குறுநூறு இவ்வாறு கூறுகிறது.

**அரிப்பறை வினைஞர் அல்கு மிசைக் கூட்டும்..**

**(ஐங்குறுநூறு -உ.வே.சாமிநாதையர் ப . 79)**

அரிப் பொலியுடைய பறையானத்தினால் அரிப்பறை என்று கூறப்படுகிறது. கிணை, துடி, நடாரி போன்ற தாள இசைக் கருவிகளும் இருந்ததாக அக்கால இலக்கியங்கள் கூறுகின்றன. அதாவது போர்க்களத்திலும் தடாரி ஒலிக்கப்படுகின்றது. போர் வெற்றி பெற அதனைத் தட்டி வாழ்த்தியதாக பாடல் உணர்த்தும் செய்தியாக காணப்படுகிறது.

இதனை விட சங்க காலத்தில் தூம்பு என்ற ஓர் இசைக் கருவியும் சிறப்பிடம் பெற்றுள்ளது. மூங்கிலை அறுத்து குழல் போன்று செய்யப்பட்ட கருவியாகும். இதனை வாக்கியம் என்றும், நெடு வாக்கியம் என்றும் அழைக்கப்படுகின்றது. தூம்பு எனும் கருவி களிற்றின் துதிக்கை போன்று நீண்டு நடுத்துளை உடையதாகவும் அமையப் பெற்றிருக்கிறது என்பதை பின்வரும் பாடலடி விளக்குகிறது.

**கண்ணிடை வகுத்த களிற்றுயிர்த் சாம்பின்**

**இளிப் கயிர் கிமிரும் குறும்பரத் தூம்பொடு**

**(மலைபடுகடாம் . உ.வே.சாமிநாதையர் ப . 84)**

**என்று கூறப்படுகிறது.**

சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட இசைக் கருவிகளில் வயிர் போன்ற துளைக் கருவிகள் போர்க் களங்களில் பயன்பட்டிருக்க வேண்டும் என்று குறிப்படப்பட்டிருக் கின்றது. இது விலங்குகளின் கொம்பினால் செய்யப் படும். திருமுருகாற்றுப் படையில் திண்காழ் வயிரெழுந் திசைப்ப (திருமுருகாற்றுப்படை ஐகன்நாதன் ப . 90) என்று கூறப்படுகின்றது.காழ்ப் பேறிய மர வயிரத்தால் ஆன மரக் கொம்பினால் செய்யப்பட்ட கருவியாகும். மின்னிரும் பீலி யணித் தளைக் கோட்டோடு (மலைபடுக டாம்,உ.வே.சாமிநாதையர் ப . 81)என்று கோடு என்ற



கருவி பற்றி மலைபடு கடாம் சிறப்பாகக் கூறுகின்றது. இது விளங்குகின்ற கரிய பீலியாகிய அழகினை உடைய தழையைக் கட்டிய கொம்புடன் என்று பொருள்படு கின்றது. கோடு என்ற இக் கருவியை வளைந்த கொம்பு என்றும் குறிப்பிடுவர். கொம்பாலான இக் கருவி கொப்பு போன்று வளைந்ததாகக் காணப்படும்.

**தண்ணுமை**

சங்க காலத்தில் வழக்கில் இருந்த தாள இசைக் கருவி களில் தண்ணுமை முதன்மையானதாகும். தண்ணுமை இனிய ஓசை உடையதாகவும் அதனைப் போர்க் களத்திலும் இசைக்துள்ளனர்.இவ்வோசையைக் கேட்டு போர் வீரர்கள் வீறு கொண்டு வெற்றி வேட்கையுடன் போராடியுள்ளனர். அரித்த குரலையுடைய தண்ணு மையை பாணர்களும் முழக்கியுள்ளனர். போரிற்கு மாத் திரமன்றி வாழ்வியல் இன்பத்திற்கும் தண்ணுமை இசைக் கப்பட்டதை அறியலாம். உழவர்களாலும் தண்ணுமை வாசிக்கப்பட்டது என்பதைப் பதிற்றுப்பத்து பாடல் பின்வருமாறு கூறுகின்றது.

**.. மாக்கண் தண்ணுமை**

**கைவல் இளையர் கையலை அழுங்க**

**(பதிற்றுப்பத்து உ.வே.சாமிநாதையர் ப . 89)**

**என்று கூறுகிறது. மேலும்**

**வெண்ணெ லரிநர் தண்ணுமை வெரீ இச்**

**செங்கண் எருமை யினம் பிரியொருத்தல்**

**(மலைபடுகடாம்,உ.வே.சாமிநாதையர் ப . 81)**

என்று தண்ணுமை பற்றி கூறப்படுகிறது. தண்ணுமை பண்டைக் காலத்தில் போர் ஓய்வு நேரம் மற்றைய இசைக் கருவிகளுடன் இணைத்து எனப் பல சந்தர்ப்பங் களில் பயன்படுத்தப்பட்டது. இதன் ஒலி இனிமையும் வேக உணர்வையும் அச்ச உணர்வையும் எழுப்பி இருக் கிறது.சங்க காலத்தில் தோற்றம் பெற்ற தாள இசைக் கரு விகளில் முழவும் குறிப்பிடத்தக்கதாகும். இதுவும் தண்மை போன்ற ஒரு கருவியாகும். தோற் கருவிகளில் தலையா யது முழவாகம். வயிரியர் முழவை அடித்து இயக்கியதாக பாடல்களில் கூறப்பட்டுள்ளது.

**மண்ணமை முழவின் வயிரியர்**

**(மலைபடுகடாம்,உ.வே.சாமிநாதையர் ப . 511)**

என்று கூறப்படுகின்றது. இவ்வாறு பலவாறாக முழவு பற்றியும் அதன் தோற்றம் பற்றியும் கூறப்படுகின்றது. சங்க காலத்து தாள இசைக் கருவியில் பறையும் கூறத் தக்கதாகும். ஆடல், பாடல் இசை விழாக்களில் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. சங்க கால தமிழர்களிடையே பறை எனும் தாள இசைக் கருவி அதிக புழக்கத்தில் இருந் துள்ளது. அரசு அறிவிப்புக்களைத் தெரியப்படுத்த பறை அடிக்கும் வழக்கம் முற்காலத்தில் இருந்துள்ளது. குறிஞ்சி நிலப் பெண்கள் பறையொலிக்கேற்ப ஆடிக் களித்தனர். குறிஞ்சி நிலத்தில் தொண்டகப் பறையே பயன்படுத்தப் பட்டது. குரவை ஆடும் போது தொண்டகப் பறை முழக் கம் செய்தியை பின்வரும் பாடலில் காணலாம்.

**குன்றகச் சிறு குடிகிளையுடன் மகிழ்ந்து**

**தொண்டகர் சிமு பறைக் குரவை யயர**

இவற்றை விட சிறு முழா, கிணை, துடி, தடாரி, பதலை, ஆகுளி, மந்தரி, சில்லரி, பம்பை பாண்டில் போன்ற கரு விகள் சங்க காலத்தில் பெரிதும் பயன்படுத்தப்பட்டதைக் காணலாம். முற்காலத்தில் இசைக் கருவிகள் பண்ணி சைக் கருவிகள், தாள இசைக் கருவிகள் என இரு பிரி வாக பிரிக்கப்பட்டன. ஆனால் இன்று இசைக் கருவிகள் நாதம், ஸ்தாயி, எல்லை என பிரிக்கப்பட்டிருப்பதை காணலாம். இவ்வாறான சங்க கால இலக்கியத்தில் இசைக் கருவிகள் பெரிதும் பயன்படுத்தப்பட்டிருப்ப தைக் காணலாம்.

தாள வாத்தியக் கருவிகள் கீதானுகம், நிருத்தானுகம், உபயானுகம் என்று மூன்று வகைகளாக வாசிக்கப்பட் டன. கீதம் அல்லது பாடலுக்கு வாசிக்கும் முறை கீதா னுகம் என்றும் நிருத்தம் அல்லது நடனத்திற்கு உதவும் முறையில் வாசிப்பதை நிருத்தானுகம் என்றும் இரண் டிற்கும் தக்கவாறு வாசிப்பதை உபயானுகம் என்றும் கூறுவர். சிலப்பதிகாரத்திற்கு அரும்பத உரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் உரை எழுதியுள்ளனர். இவ்வி ருவரும் வட்டப்பாலை பற்றி விரிவாக எழுதியுள்ளார்.



மற்றும் சிலப்பதிகாரத்தில் முப்பது வரையான தோற் கருவிகளைப் பற்றியும் விபரம் தரப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் தண்ணும்மைக்கு (மிருதங்கம்) முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. இசை அரங்கில் வாய்ப்பாட்டிற்கு அடுத்தாற் போல் இசைக்கு ஒருதூண் போல் உள்ளது என விவரிக்கிறார். கூத்துக்கள், பாடல்கள், இசை பற்றிய கூறுபாடுகளைத் தண்ணும்மை ஆசிரியன் தெரிந்திருக்க வேண்டும் என்று கூறுகிறார். சிலப்பதிகாரத்தில் பண்ணிசைக் கருவிகளில் யாழ் முதன்மையானதாகக் காணப்படுகின்றது. காணல் வரிப்பகுதியில் வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், நெருட்டல், வள்ஊல், பட்டடை என எட்டு வகையானவை.

யாழ் மீட்டும் திறன்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆய்ச்சியர் குரவையில் ஏழு மகளீர் ஏழு இசையின் பெயர் தாங்கி இசை இலக்கணத்தை விளக்கும் வகையில் நின்று ஆடும் முறை அருமையாக வர்ணிக்கப்பட்டுள்ளது. இவ் ஏழு பண்களும் ஏழிசையான குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பெயர் இட்டுள்ளனர். பண்ணிசைக் கருவிகளில் யாழ் மிக சிறப்பாகக் கூறப்படும் வாத்தியமாகும். இளங்கோவடிகளின் காலத்தில் யாழ் மிக சிறந்த இசைக்கருவியாக மதிக்கப்பட்டுள்ளது. யாழ் இசைப்பவன் இசையறிவு மிக்கவனாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

**வீணை**

சங்கப் பாடல்களில் வீணை என்ற இசைக்கருவி பற்றிய குறிப்பு எங்கும் இல்லை ஆனால் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது.

**நாரதன் வீணை நயந்தெரி பாடலும்.**

**(திருமுருகாற்றுப்படை ஜகந்நாதன் ப . 196 - 197)**

இவ்வாறு சிலப்பதிகாரம் கூறுகின்றது. இங்கு யாழ், வீணை ஒரே கருவியாக கருதப்படுகின்றது. வீணைக்கருவி பெயரளவில் யாழுக்கு பயன்படுத்தி இருக்கலாம். சிலப்பதிகாரத்தில் யாழை அடுத்து சிறப்பாகக் கூறப்பட்டது குழலாகும். ஆய்ச்சியர் குரவைக் கூத்து ஆடிப் பாடும் போது ஆயர்களின் குழல் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. அதை கொன்றையர் தீங்குழல், ஆம்பலர் தீங்குழல்,முல்லையர் தீங்குழல் என ஆய்ச்சியர் குறிப்பிட்டுப் பாடுகின்றனர். சிலப்பதிகார காலத்தில் தமிழரின் இசைப் புலமை மிகவும் உன்னத நிலையில் காணப்பட்டது.

**குழல் வழி நின்ற தியாழே யாழ் வழித்**

**தண்ணுமை நின்றது ..**

(சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் ப . 139) என்று சிலப்பதிகாரம் குழல் பற்றி கூறுகின்றது. குழல் காட்டும் சுருதியே கூட்டு நிகழ்ச்சிகளில் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதென்பதை உணரக் கூடியதாய் உள்ளது.

ஆடற் கலை வேந்தியல் நிலையில் ஆடப்பட்ட காலம் முதல் குறிப்பிட்ட தகைமைகள் கொண்ட இசைக் கருவிகள் ஆடலரங்குகளிற்குரிய செவ்விய கருவிகளாக ஏற்கப்பட்டதாக தெரிகிறது. சான்றோர் அவையில் மாதவி நல்லாள் ஆடியபதினோராடல்களும் அவ் ஆடல்களுக்குரிய பாடல்களும் அவ்வாடல்களில் வேறுபாடுகளிற்குரிய கருவி இசை வகைகளும் இலக்கண நூல்களின் விதி முறைக்கு ஏற்ப அமைந்ததை சிலப்பதிகாரம் பின்வருமாறுகூறுகின்றது.

**பதினோராடலும் பாட்டுங் கொட்டும்**

**விதி மாண் கொள்கையின் விளங்க..**

**(சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் ப . 26)**

சங்க காலத்தை அடுத்து சங்க மருவிய காலமும் அதனைத் தொடர்ந்து வந்த காலப் பகுதியே பல்லவர் காலப் பகுதியாகும். இக் காலப் பகுதியும் இசையும் ஆடலும் இடம் பெற்றதாகவேகாணப்படுகின்றது. பல்லவர் காலத்தில் எழுந்த இலக்கியங்களில் இசையினையும்,இசைக் கருவிகளையும் பலவாறாக கூறப்படுகின்றது.

**முடிவுரை**

இசைக் கருவிகளின் இசை நயத்தையும், தாள நயத்தையும் தனித்தனி உணர்ந்து சுவைத்த பழந்தமிழ் மக்கள் இசைக்கலையிலும்,ஆடற் கலையிலும் அவற்றின் சுவைகளை இசைக்கேற்பவும்,ஆடல் வகையின் தன்மைகளிற் கேற்பவும் பாகுபடுத்தி பயன் பெற தெரிந்திருந்தனர். இசையினையும்,ஆடல்களையும் அவற்றிற்கு பயன்படுத்தப்பட்ட இசைக் கருவிகளின் பயன்பாட்டையும் சிறப்பாக அறிந்து கொள்ள முடிகிறது. இந்த ஆய்வின்

மூலம் இசைக்கருவிகளின் தோற்றமும், சங்ககாலத்தில் இருந்து தோற்றம் பெற்ற இசைக்கருவிகளையும், இசைக்கருவிகளின் தோற்றப் பாடல்களையும் அறியச்செய்து அவற்றின் மகத்துவங்களையும், அவற்றின் பயன்பாடுகளையும் வருங்காலத்தவர்க்குக் கொண்டு செல்லும் நோக்கில் அமையப்பெற்றது குறிப்பிடத்தக்கது. இசை வரலாற்றில் பக்கவாத்தியங்களின் பங்களிப்பு முக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது. சங்க காலம் முதல் இசையில் பயன்படுத்தப்பட்டுள்ள பக்கவாத்தியங்கள் இசையின் வளர்ச்சிக்கும், தற்காலம் வரை நிலைத்து நிற்பதற்கும் முக்கிய காரணமாக அமைகிறது. இசை வளர்ச்சிக்குப் பக்கபலமாக, துணையாக என்றென்றும் விளங்கும் பக்கவாத்தியங்கள் எதிர்கால சந்ததியினர்க்குக் கொண்டு சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது. இதனால் வருகின்ற காலங்களில் இசைப்பயிலுனர்கள், இசையை விரும்பிக் கற்கின்ற மாணவர்கள் இசையினையும், இசைக்குப் பக்கபலமாக வாசிக்கப்படுகின்ற வாத்திய இசைக்கருவிகள் பற்றியும் அறிந்து கொள்ள இந்த ஆய்வானது பக்க பலமாக அமையும் என்பது உறுதி.

இசையினையும், இசையின் தொன்மையினையும் உலகறியச் செய்யும் நோக்கிலும் இந்த ஆய்வானது அமைந்துள்ளது என்பது எனது கருத்தாகும். எனது கருத்து உண்மையுறும் வகையில் மாணவர்கள், கலைஞர்கள் யாவரும் இதனைக் கற்றறிந்து பயனுறுவர் என்ற நம்பிக்கையுடன் இந்த ஆய்வினை நிறைவு செய்கிறேன்.

**உசாத்துணை நூல்கள்**

1.அங்கயற் கண்ணி. இ.முனைவர்,தமிழிசைத் தொன்மையும் பெருமையும்தொகுதி - இசைத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் 2006

2. இராஜலட்சுமி விரிவுரையாளர் தமிழ்த்துறை,இசையும் பிற நுண் கலைகளும் ஜவகர் அறிவியல் கல்லூரி நெய்வேலி

3.சிவானந்தராஜா - எஸ். இலக்கிய இசைச் சாரல் முதற் பதிப்பு - மே- 2000, அச்சுப் பதிப்பு - ஆனந்தா அச்சகம் 226, காங்கேசன் துறைச்சாலை, யாழ்ப்பாணம்.

4.ஞான குலேந்திரன். திருமதி. முனைவர், பழந் தமிழர் ஆடலில் இசை, முதற்பதிப்பு - மாசி - 1990, மீரா அச்சகம், புதுக்கோட்டை - 622001

5.தனபாண்டியன் -இசைத்தமிழ் வரலாறுபகுதி ஐ. தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு- 186, மார்கழி 1994

6.பெருமாள் யு.கேதமிழர் இசை, இசையும் நுண் கலைகளும்

7.கர்நாடக இசையில் பக்கவாத்திய இசைக்கருவிகளின் பங்களிப்பு பற்றிய ஆய்வு ஆய்வாளர் பெயர்: செல்வன் சுரேந்திரா நரேந்திரா தமிழப் பல்கலைக்கழகம். தமிழ் நாடு, இந்தியா.





# அம்பலத்தானும் ஆடற்கலையும்

ஆடற்கலையின் அதிபதியாம் நடராஜர் சத்சித்தானந்தருபன் ஆவர் அதாவது சத்து, சித்து, ஆனந்தம் என மூன்று தன்மைகளையும் உடையவர். அபபேர்ப்பட்ட இறைவன் ஐந்தொழிலையும் பிரதிபலிக்கும் ஆனந்த தாண்டவத்தை தில்லையில் கனகசபையிலும் காத்தற் தொழிலை ஆற்றம் சந்தியா தாண்டவத்தை மதுரையில் வெள்ளியம்பலத்திலும், மறைத்தற் தொழிலை மேற் கொள்ளும் திரிபுரத்தாண்டவத்தை திருக்குற்றாலத்தில் இரத்தினசபையிலும் அருளல் தொழிலை அருளும் ஊர்த்துவதாண்டவத்தை திருவாலங்காட்டில் இரத்தினசபையிலும் , படைத்தற் தொழிலை படைக்கும் காளிகா தாண்டவத்தை திருநெல்வேலியில் தாம்பிரசபையிலும், காத்தற் தொழிலைக் காக்கும் கௌரிதாண்டவத்தை திருப்புத்தூரில் சிற்சபையிலும், அழித்தற் தொழிலை ஆற்றும் சங்காரதாண்டவத்தை இருண்ட நள்ளிரவிலும் செய்தருளினார் என்று நூல்கள் கூறுகின்றன.

நடராஜத் திருவுருவம் காட்டும் தத்துவக் கருத்துக்கள் சிலவற்றைக் குறிப்பிடலாம். நடராஜரின் திருமுகம் எல்லையில்லா அழகினையும், இனிய தண்ணளியையும் குறிக்கிறது. அவருடைய திருமேனி தூய்மைப்படுத்தும் தன்மையைக் காட்டும். நடராஜப்பெருமானின் திருக்கரங்கள் திசைகளைக் கருதுகின்றன. இவை அவரின் எல்லையில்லா ஆற்றலையும் குறிப்பன. முக்கண்கள் சூரியன், சந்திரன், அக்கினி ஆகியோரைக் குறிக்கும். இம்மூன்று திருக்கண்களும் இறைவனின் இச்சா சக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தியாகிறவற்றையும் குறிக்கும்.

ஆன்மாக்களின் பந்தபாசங்களைக் குறிக்கும், அழிவற்ற தூய இயல்பையும் சுட்டும். அவருடைய பூணூல் வேதத்தைக் குறிக்கும். திருப்பாதங்களிலுள்ள சிலம்புகளும், வீரக்கழல்களும் ஆன்மாவின் பிறவித் துன்பத்தை நீக்கி வீடுபேறு அளிப்பதை உணர்த்துகின்றன நீலகண்டம் இறைவனின் பெருங்கருனையினையும், திருக்கரத்திலுள்ள சூலம் சத்துவம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களையும் குறிக்கும். அழித்தலைச் செய்யும் ஆரணி, படைத்தலைச் செய்யும் ஜனனி, உயிர்களைப் போகங்களிலே நிறுத்தும் இரோதயித்திரி ஆகிய முச்சக்திகளின் வடிவினதாகும். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்குபவர் என்பதையும் சூலம் காட்டும்.

திருக்கரத்திலுள்ள மழு இறைவனின் பேராற்றலைக் குறிக்கும். இடது கையிலுள்ள மான் இவர் வேதநாயகன் என்பதையும், அணிந்துள்ள புலித்தோல் கோபத்தைக் கட்டுப்படுத்துபவர் இவர் என்பதையும் காட்டும். திருக்கையிலும் திருமேனியிலும் அரையிலும் அணிந்துள்ள பாம்பு நாகசக்தியாவற்றையும் நியமிக்கும். உலகம் யாவும் தோன்றவும், ஒடுங்கவும் நிமித்த காரணர் தாமே என்பதை உணர்த்த குண்டலினி சக்தியாகியுருவகாகிய பாம்பினை அணிந்துள்ளார். வலது காதில் தோடும், இடது காதில் குழையும் கூத்தப்பெருமான் அணிந்திருக்கிறார்.




பரதசூடாமணி
**கௌசலா ஆனந்தராஜா**
பிரான்ஸ்

அதாவது ஆணோடு பெண்ணாய் அமைந்த இவ்வுலகம் தன் உரு என்பதையும் , வையகம் முழுவதும் தன் வடிவம் என்பதையும் உணர்த்தும். வலக்கரத்திலே துடி அமைந்துள்ளது. இது படைத்தற் தொழிலை விளக்குகின்றது. இதிலிருந்து தான் ஸரிகமபதநி என்ற ஸ்வரங்களும் தோன்றின என்று நூல்கள் கூறுகின்றன. இடது கையில் தீ அகலை ஏந்தி இருக்கிறார். இது அழிக்கும் செயலை அறிவிப்பது. வலக்கைகளில் ஒன்றாக பிறவிச் சுழலில் அகப்பட்ட உயிர்களுக்கு ஓடி வந்து அபயம் அளிக்கின்ற கை, காத்தல் தொழில் உடையதாகக் குறிப்பிடப்படுகிறது,

தூக்கிய திருவடி, அடிக்கீழ் இருக்கும் உயிர்களுக்கு முக்தியின்பத்தை அளிப்பது எனப்பொருள்படும். ஆணவமலத்தின் அடையாளமாக முயலகனை அடக்கி ஊன்றிய திருவடி மூலம் உணர்த்துகின்றார்.



திருவைத்தெழுத்தையே திருமேணியாகக் கொண்டு ஐந்தொழில் புரிந்து அவர்களை ஈடேற்றுகிறான். நமசிவாய என்பது தூலபஞ்சாக்ஷரம் ஆடும் பிரானுடைய திருவடி 'ந' கரமாகும்.திருவயிறு 'ம' காரமாகும் திருத்தோள் 'சி' காரமாகும். திருமுகம் 'வா' ஆகும். திருமுடி 'ய' ஆகும். இவ்வமைப்பு தூலபஞ்சாக்ஷரம் எனக் கூறப்படும். அடுத்தது 'சிவாயநம' என்பது சூக்குமபஞ்சாக்ஷரம் எனக்கூறப்படும். உடுக்கை அடிக்கும் திருக்கை 'சி' காரமாகும், வீசும் திருக்கை ஏடனமாகிய திருவருளைக்குறிக்கும் 'வா' ஆகும். அபயமளிக்கும் திருக்கரம் 'ய' ஆகும். நெருப்பினை வைத்திருக்கும் திருக்கை 'ந' காரமாகும். முயலகனை அழுத்தும் திருவடி 'ம' காரமாகும். இவ்வாறு அவரின் பிரத்யாங்கம் அமையும்.

அப்பெருமானுக்கு உபாங்கமாக உள்ள திருவாசி ஓங்காரம் ஆகும். திருவாசியின் மேல் விளங்கும் சுடர்கள் 21 ஆகும். இவை ஓங்காரத்தின் மாத்ருகாக்கரங்களாகும், அதாவது இறைவனின் ஸர்வ வியாபகத்தைக் காட்டும் திருவாசி எனும் பிரக்ருதிக்கும் இறைவனுக்கும் இடையில் நிற்பது உயிர். நடராஜ உருவத்துடன் அவருடைய சக்தியாகிய சிவகாமவல்லியைக் காணலாம். இறைவனின் திருவருளே சக்தியாகும். சக்தியின்றிச் சிவலம் இல்லை. ஆடிக்கொண்டிருக்கும் ஆடற்பெருமானின் அற்புதக்கூத்தினை அவரின் அருகே நின்று உலக அன்னையாம் அம்பாள் பார்த்துக்கொண்டே இருக்கிறாள். நடராஜத் திருவுருவம் காட்டும் தத்தவக் கருத்துக்கள் இவ்வாறு அமைகின்றன.

# இலங்கையின் சைவ, பௌத்த சமூக நல்லுறவின் அடையாளம்

## முதலாவது தமிழ் பௌத்த துறவி வண.பொகவந்தலாவை ராகுல தேரரை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு



தொடர்:– 02



டாக்டர்.(திருமதி)எஸ்.கேசவன் (PhD)
தலைவர்,
இந்து நாகரிகத் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
மட்டக்களப்பு, இலங்கை.

### அறிமுகம்

இலங்கையில் நிலவும் பிரதானமான சமய நெறிகளுள் சைவம்,பௌத்தம்,கிருத்தவம்,இசுலாம் ஆகியன குறிப்பிடத்தக்கன. பௌத்த மத வரவிற்கு முற்பட்டது சைவம் என்பதற்குப் பல வரலாற்று ஆதாரங்கள் பெருமளவில் கிடைக்கின்றன. இதனைப் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், பேராசிரியர்சி.பத்மநாதன் போன்றோர் ஆய்வுகள்ஃண்டு நோக்கத்தக்கது.இன்றைய சூழலிலே மக்களின் வறுமை, வாழ்வியல் பிரச்சினைகளைக் காரணமாக வைத்துமதமாற்றும் போக்கினையும் காணமுடிகிறது. ஒரு சமயத்தவர் மற்றைய சமயத்தைச் சாடுவதையும் வெளிப்படையாகக் காணலாம். எனவே அனைத்துச் சமயங்களுக்கிடையேயும் சமரசத்தைப் பேணுவதனூடாக சமூகநல்லுறவை மேம்படுத்தமுடியும்இவர் சைவ,பௌத்த மதங்களுக்கு உரித்துடையவர் என்பதால் அது குறித்து ஆராய்வது இவ் ஆய்வுக் கட்டுரைக்கு அரண் சேர்க்கும்.இத்தகையதோர் சூழ்நிலையிலேவண.பொகவந்தலாவை ராகுல தேரர் அவர்களது அளப்பரிய பணி பற்றி ஆய்வு செய்வதே இவ் ஆய்வுக் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.



சிவபாலன் மயூரன் BA(Hons)

### இலங்கை வரலாற்றில் சைவம், பௌத்தம்

இலங்கையின் வரலாற்று ஆரம்ப காலங்களிலே சைவமும், பௌத்தமும் ஒன்றையொன்று தழுவிய நிலையில் தம்மை வளர்த்து வந்திருந்தன. பிற்பட்ட காலங்களில் பல பூசல்கள் காரணமாக அத்தொடர்பில் பாரிய விரிசல்கள் ஏற்படலாயின. எனினும் இலங்கையிலே தற்போதும் இன,மத காழ்ப்புணர்வுகள் இழையோடிய வண்ணமுள்ளன. ஆங்காங்கே நடைபெறும் சம்பவங்கள் இதற்குச் சான்றாகின்றன. இவ் இன,மத காழ்ப்புணர்வுகளைத்

தீர்ப்பதற்கு சிங்களவருக்குத் 'தமிழ்' பரீட்சய மின்மையும், தமிழருக்குச் 'சிங்களம்' பரீட்சய மின்மையும் காரணமாகின்றனளனலாம். மொழி தெரியாத காரணத்தினால் இனங்களுக்கிடையி லான புரிதல்கள் இல்லாதுள்ளன. இந்நிலையில் வண.பொகவந்தலாவை ராகுல தேரரது பணி குறிப் பிடத்தக்க அம்சமாக விளங்குகிறது.ஏனெனில் இவர் இருமொழிகளிலும் தேர்ச்சி பெற்று விளங்குவதோடு இரு மொழிகளிலும் பிரசங்கங்கள் ஆற்றுபவர்.



**சமயநல்லுறவும்**
**வண.பொகவந்தலாவை ராகுல தேரரும்**

### 3.4. தைப்பொங்கலைக் கொண்டாடுதல்

2020ஆம் ஆண்டு வந்த தைப்பொங்கலை முன்னிட்டு இவர் ஏலவே சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களை வேறுபாடு இல்லாது தமது விகாரைக்கு பொங்கலைக் கொண்டாட வருமாறு பகிரங்கமாக அழைத்திருந்தார். மனிதாபிமான மதநல்லிணக்கத்தை விரும்பும் மக்கள் அவ் அழைப்பை ஏற்று தைப்பொங் கலை விமர்சையாகக் கொண்டாடியிருந்தமையைக் காணமுடிந்தது.

### 3.5.அறநெறி நடாத்துதல்


பௌத்த துறவறத்தின் பின்பும் அறநெறி நடாத்து தல் இவர் பணிகளில் குறிப்பிடத்தக்க பணியாகும். இலங்கையிலே சைவ ஆலயங்களிலே ஞாயிற்றுக் கிழமைகளில் அறநெறி வகுப்புக்கள் நடாத்தப்படு வது கண்கூடு. சைவ விழுமியங்கள், கலாசாரம் என் பவற்றை மாணவர் பராயத்திலேயே விதைக்க வேண் டும் என்ற நோக்கத்துடன் நடைபெறுகிறது. இதற்கு இந்து கலாசார திணைக்களமும் துணைநிற்கிறது. இவர் துறவறத்தின் பின்னர் முதன்முதலாக ஒலுகன் தோட்ட இகலமண்டாவல ஸ்ரீ சுதர்மா விகாரையில் ஆறாம் திகதி தை 2018ஆம் ஆண்டு 'சாமதீர விபாஷா அறநெறியினைத் தொடங்கினார். இன்றைக்கு தரம் ஒன்று தொடக்கம் பதின்மூன்றாம் தரம் வரை அறு பத்தைந்துதமிழ்ப் பிள்ளைகள் கற்கின்றனர்.

இந்த அறநெறியானது 'சமமாக நீண்ட தூரம் போவ தற்கு இரு மொழிகளிலும் தர்மம் போதிப்பது' என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக் கப்பட்டது. எனினும்இந்து கலாசார திணைக்களத் திடம் பதிவு செய்யக் கேட்டபோது விகாரையில் வகுப்புக்கள் நடைபெறுவதால் மறுப்புக் கிடைத்தது. எனினும் படிக்கும் பிள்ளைகளின் நலன் கருதி அவர் களுக்கான போக்குவரத்து, உணவு, உடை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.அறநெறியைப் போதிப்பதற்கு தமிழாசிரியர்கள் (பெண்ணாசிரியர்கள்) ஆறு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கட்டாயம் இந்து கலாசாரத்துடன் (சேலை அணிவதுடன், நெற்றியில் பொட்டு வைக்க வேண்டும்) என்று இறுக்கமான கட் டுப்பாடுள்ளது. தற்சமயம் ஆசிரியர்கள் வேதனமின் றிக் கற்பிக்கின்றனர். அடுத்த வருடம் புத்த சாசன அமைப்பினூடாக சம்பளம் வழங்க வண.பொகவந் தலாவை ராகுல தேரர் நடவடிக்கை எடுத்துள்ளார்.



### 3.6. கூட்டங்களில் சைவம் பற்றிப் பேசுதல்

பௌத்த துறவியாகையால் மக்களிடையே தர்ம போதனைகளை நடாத்தி வருகின்றார். இதற்குச் ச ன்றாக முதன்முறையாக தர்ம போதனைகளை தமி ழில் இறுவட்டு வடிவில் இருபத்தியோராம் திகதி ஆடி 2018இல் வெளியிட்டிருந்தமையைக் குறிப்பிட முடி யும்.(படம் - 19) சமயத்தைப் பரப்புவதை நோக்காகக் கொண்டிராத இவர் ஆன்மிகப் பாதையில் மக்களை வழிநடாத்துவதற்காக பாடசாலைகள்,கோயிலகள்;, பல்கலைக்கழகங்கள், சிறைச்சாலைகள், தேவால




யங்கள், விகாரைகள், பள்ளிவாசல்கள் எனப் பல இடங்களில் போதனைகளைச் செய்து வருகின்றார். இத்தகைய கூட்டங்களிலே சைவத்தின் தொன்மை, பெருமைகளைப் பேசிவருகின்றமையைக் காணமுடிகிறது.

### 3.7.தமிழ்ப் பாலர் பாடசாலைகளை நடாத்துதல்

அறநெறி வகுப்புக்கள் மட்டுமன்றி தமிழ்ப் பிள்ளைகளுக்கான பாலர் பாடசாலைகளையும் இவர் நடாத்துகின்றார். இவற்றின் இரண்டினதும் பெயர் 'சக்தி பாலர் பாடசாலை' ஆகும். இங்கு குறிப்பட்டுச் செல்ல வேண்டிய விடயம் யாதெனில் இவ்வலயத்தில் எழுபது பாலர் பாடசாலைகள் உள்ளன. அவற்றில் இந்த இரண்டு மட்டுமே தமிழ்ப் பாலர் பாடசாலை ஆகும். அத்துடன் இது விகாரையின் கட்டடத்திலேயே நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. மொத்தம் நாற்பத்தைந்து பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். மாதம் ஒருவரிடம் ரூபா எழுநூற்று ஐம்பது அறவிடப்படுகிறது.(படம் - 20)

### 3.8.தமிழ் இளைஞர்,யுவதிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல்

குறிப்பாக மலையக இளைஞர், யுவதிகள் தோட்ட வேலைகள் செய்வதால் அவர்களின் பொருளாதார நிலைமை குறைந்த அளவில் காணப்படுகிறது. ஆகையால் அவர்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதில் மும்முரமாக உள்ளார். அத்துடன் குடும்பத்தில் எழும் பிரச்சனைகளுக்கும் உள ஆற்றுப்படுத்தலை மேற்கொண்டு வருகின்றார்.

### 04. இன, மத ஒற்றுமைக்கு இவர் கூறும் வழிமுறைகள்

இலங்கையில் பெரும்பான்மையினர் பௌத்த சிங்களவர். எனவே இவர்களோடு பகைமையின்றி ஒத்து வாழ்வதாலேயே பிற மதத்தினர் தம்மிருப்பையும் நிலைநிறுத்த முடியும். ஆதலால்வண. பொகவந்தலாவை ராகுல தேரர்; அவர்கள் பெரும்பான்மையோடு இணைந்துதான் பயணிக்க வேண்டும் எனக்கூறுகின்றார்.

இந்நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் இரு மொழிப் புலமையாளராகத் திகழ வேண்டும் என்பது அவர் முடிபு. ஏனெனில் மொழி தெரியாதவன் வழி தெரியாதவன் ஆவான். எனவே இலங்கையில் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகள் அரச கரும மொழிகளாக உள்ளன. இவற்றை அறிந்து வைத்திருந்தால் நாட்டில் புரிந்துணர்வு அதிகரிக்கும் என்பது இன,மத ஒற்றுமைக்கு இவர் கூறும் வழிமுறைகளில் ஒன்றாகும்.

நாட்டில் வடக்கு, கிழக்கு, மலையகம், மேற்கு என எல்லாப் பாகத்திலுள்ளவர்களும் எல்லா இடங்களுக்கும் சென்று வருவதால், எல்லா நிலைப்பட்ட மக்களுடனும் கதைப்பதால் வெவ்வேறுபட்ட அவர்களது கலாசாரங்களைப் புரிந்து கொள்வதால் நல்லிணக்கம் ஏற்படும் என்பது இவர் சிந்தனை.




எல்லாப் பிரதேசத்தவர்களும் எல்லா இடங்களிலும் வியாபாரங்கள் செய்வதாலும் புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புண்டு. அத்துடன் சிறுபான்மையினர் மத்தியிலும் சிங்கள அரசு பற்றிய தவறான கண்ணோட்டம்

14 ஞாயிற்றுக்கிழமை 29.03.2020 காலைக்கதிர்

# தமிழரின் பழக்க வழக்கங்களை பின்பற்றி கொரோனா வைரஸ் பரவாமல் தடுங்கள்!

## பொகவந்தலாவ பௌத்த பிக்கு ஆலோசனை

கொழும்பு, மார்ச்.29

தற்போது உலகையே அச்சுறுத்திக் கொண்டுள்ள கொடிய கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களை பின்பற்றவேண்டுமென சிங்கள பௌத்த பிக்கு ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொகவந்தலாவ பிரதேசத்திலுள்ள பௌத்த பிக்கு ஒருவரே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் உரையாற்றும் வீடியோ சமூக வலைத்தளத்தில் வெளிவந்துள்ளது.

இதன்படி தமிழ் மக்களின் பாரம்பரிய பழக்கவழக்கங்கள் மற்றும் கலாசாரங்களைப் பின்பற்றினால் கொரோனாவை தடுக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிக்கு தமிழ் மொழியைப் பூரணமாகக் கற்றுத் தற்போது தமிழ் மொழியில் மக்களுக்கு ஆலோசனையை தெரிவித்து வருகின்றார்.

அவர்தான் தற்போது கொரோனா வைரஸ் பற்றிய தனது கருத்தை பதிவிட்டிருக்கின்றார்.



உண்டு. இதற்கு சரியான புரிந்துணர்வின்மையே காரணமாகும். அரசாங்கத்தின் மத்தியில் சிறுபான்மை, பெரும்பான்மை என்ற வேறுபாடில்லை. சான்றாக இவர் பல காரணங்களைக் கூறுகின்றார்.

- பாடசாலை மட்டங்களில் பாடசாலைச் சீருடையில் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற வேறுபாடு இல்லாமல் அனைவருக்கும் ஒரே நிற வெள்ளாடையே வழங்கப்படுகிறது.

- இலங்கையர் என்ற அடிப்படையில் எல்லா இன மக்களும் தங்களால் முடியுமான அளவு சொத்துக்களைச் சேர்த்து வைத்திருக்க முடியும். அதே போல் வங்கிகளிலும் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற வேறுபாடு இல்லாமல் அனைவரும் பணத்தை சேமித்து வைத்திருக்க முடியும்.

- இலங்கையின் சகல பாகங்களிலும் ஆலயங்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் என்பவற்றை எவ்வளவு உயரமாகவேனும், எத்தனையாக என்றாலும் கட்டமுடியும்.

இவ்வாறு பல காரணங்களைக் கூறுகிறார். இத்தகைய இவருடைய இன, மதஒற்றுமைக்கு இவர் கூறும் வழிமுறைகளையும், தர்ம போதனைகளையும்; வசந்தம் தொலைக்காட்சியில் தினமும் காலை ஆறு மணிக்கு பத்து நிமிடங்கள் இவரது உரை இடம்பெறும். நேத்ரா அலைவரிசையிலும் மாதத்தில் இரண்டுஅல்லது மூன்று முறை ஒன்று அல்லது ஒன்றரை மணித்தியாலங்கள் ஒலிபரப்பப் பட்டு வருகின்றது.

இத்தகைய சேவைகளை ஆற்ற வேண்டும் என்ற நோக்கத்தாலும், தமிழ், சிங்கள மக்களுக்கிடையே யான பாலமாக செயற்பட வேண்டும் என்ற உந்துதல் இவரை பௌத்த துறவி ஆக்கியிருக்கின்றது. பௌத்த துறவியாகியதனால் இத்தகைய பணிகளை இவரால் ஆற்ற முடிந்தது.

### 05. இவர் ஆற்றிய தர்ம உபதேசங்கள் சில

### 5.1.

அன்பார்ந்த பக்த அடியார்களே!பெற்றோர்களே!மாணவர்களே!அனைவருக்கும் வணக்கம். உங்களிடம் ஏதும் சந்தேகங்கள் இருப்பின் நீங்கள் என்னிடம் கேட்கலாம். என்னுடைய நோக்கு மனிதன் மனிதனாக வாழ வேண்டும். அதற்கு அவன் முயற்சி செய்ய வேண்டும். அப்படியானால் அதற்கு சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

#### மனஅடக்கம்

நான் தமிழில் 'தினமும் அணிவதற்கு ஓர் சிந்தனை' என்ற நூலை எழுதியுள்ளேன். அதன் பிரகாரம் முதலாவதாக மன அடக்கம் முக்கியமானது. ஏனெனில் மனமானது ஓரிடத்தில் நிற்காது. அலை போல அடித்துக் கொண்டிருக்கும். அதை ஓர் நிலையில் கொண்டு வரவேண்டும். அடுத்து பொறுமை அவசியமாகும். பொறுமையால் அமைதியும் வெற்றியும் கிட்டும். அநேகமான பிரச்சினைகள் பொறுமையின்மையாலேயே ஏற்படுகின்றன. அவசரப்பட்டோ ஆத்திரப்பட்டோ சில தீர்மானங்களை எடுக்கப்படாது. அவசரப்பட்டு எதைச் செய்தாலும் அது பிழையாக அமைந்துவிடும். தீர்மானம் எடுக்கும்முன் இருமுறைக்குமேல் சிந்திக்க வேண்டும்.



**நேரகாணல் புகைப்படங்கள்**

## பாவ,புண்ணியங்கள் தொடரும்

இந்த உலகத்தில் பாவம் புண்ணியம் என்ற இரண்டு உண்டு. பாவம் குறைக்கப்பட வேண்டும். புண்ணியம் கூட்டப்பட வேண்டும். புண்ணியம் எங்கிருந்து ஆரம்பிக்கின்றன என்றால் மனதிலிருந்து ஆகும். இதன் விளைவாக துன்பம், இன்பம் என்பன நிகழ்கின்றன. இவை வாழ்வில் மாறிமாறி வரும். துன்பம் வரும்போது துவழ்கிறோம். எம்மைச் சூழ்ந்தவரையும் எம்மையும் ஏன் கடவுளையும் கூட ஏசுகின்றோம். இன்பம் வரும்போது ஏற்றுக்கொள்வதைப் போல துன்பம் வரும் போதும் ஏற்றுக் கொள்ளுங்கள். எனினும் துன்பத்தை ஏற்க மறுக்கின்றோம். இன்பம் மட்டுமோ அல்லது துன்பம் மட்டுமோ எவருக்குமே நிரந்தரமில்லை.இந்த உலகத்திலே பாவச் செயல்களைச் செய்வதற்கு வெட்கப்பட வேண்டும். பயப்பட வேண்டும். பாவம் செய்யப்படுகின்ற முக்கியமான கருவி இந்த உலகில் வாய் ஆகும். எனவே பிறர் மனம் துன்பப்படும்படி பேசாதீர்கள்.

## இயற்கை எனும் கடவுள்

இந்தப் பிரபஞ்சத்தில் ஏதோ ஒரு சக்தி இருக்கின்றது. அந்த சக்திதான் எல்லோரையும் ஆட்டிப்படைக்கின்றது. இந்த உலகத்தில் துன்பப்பட்டோருக்கு விரைந்து உதவி செய்ய வேண்டும். ஒருவரது துன்பத்தின்போது, கவலையின் போது, அவர் உண்ண உணவோ அல்லது உடையோ இல்லாத சந்தர்ப்பத்தில் அவரைக் கேட்டு விரைந்து உதவி செய்ய வேண்டும். உதவி செய்வதனூடாக அடுத்த பிறப்பு நல்லதாக அமையும். ஒருவர் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் சமயம் இன,மத,குல,மொழி பேதமின்றி பாராபட்சம் இல்லாமல் உதவுங்கள். உங்கள் வாழ்க்கைக்கு இது ஒரு நிம்மதியைத் தரும்.

## பலன் கருதாது உதவி செய்தல்

முதலில் இந்த உலகத்தில் மனிதன் என்ற சிந்தனையை முன்வையுங்கள். மதம், இனம் போன்ற பேதங்கள் பின்னரே மனித மனத்தில் புகுத்தப்பட்டன. புதைக்கப்பட்டன. மனிதநேயம் இல்லாமல் வாழாது சமயம் காட்டும் பாதையில் பயணியுங்கள். ஒருவர் உதவி கேட்கும்போது முடிந்தவரை செய்யுங்கள். ஒருவர் உங்களிடம் பண உதவி கேட்டால் முடிந்தால் செய்யுங்கள். இல்லையெனில் அப்போதே இல்லையென்று கூறிவிடுங்கள். இருக்கிறது, தருகிறேன், பின்பு தருகிறேன் என நாட்கடத்த வேண்டாம். நண்பரிடமோ உறவினரிடமோ பண உதவி கேட்காதீர்கள். கேட்டால் நட்போ உறவோ முறிந்துவிடும்.

உங்களுக்கு உதவி செய்தவர்களுக்கும் செய்யாதவர்களுக்கும் உதவி செய்யுங்கள். உதவியைப் பெற்றபின் குறைகூறும் மனிதரைப் பற்றி மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். மனிதனை ஒருபோதும் திருப்திப்படுத்த முடியாது. மற்றவரிடம் உங்களைப் பற்றி நல்லவர் என்று புரியவைக்க முடியாது. உதவி செய்யும்போது எதிர்பார்ப்பு இல்லாமல் செய்யுங்கள். நான் ஓர் துறவி. எனக்கென்று எதுவும் கிடையாது. ஆனால் நான் எதிர்பார்ப்பது மனிதர்கள் சந்தோசமாக வாழவேண்டும் என்பதே. உதவிக்குப் பின் உபகாரம் கட்டாயமாகச் செய்ய வேண்டும். கேட்டவருக்கு உதவி செய்ய முடி;யாவிட்டால் கவலைப்படாதீர்கள்.

## மக்கள் அனைவரிலும் ஓடும் குருதி(இரத்தம்)

நான் இப்போது கூறிய வார்த்தைகளுக்கு இன,மதம் கிடையாது. யாருடைய உடலிலாவது நான் இந்து, இஸ்லாம், பௌத்தம் என எழுதப்பட்டுள்ளதா?அல்லது இரத்த நிறத்தில் வேறுபாடுள்ளதா?இல்லை. இப்பிரபஞ்சத்தில் மனிதன் மனிதனாக மனிதநேயத்துடன் வாழ வேண்டும். இப்பிரபஞ்சத்தில் இறைவன் அனைத்தையும் கொடுத்திருக்கின்றார். உங்



**நேரகாணல் புகைப்படங்கள்**

கள் வாழ்க்கையில் ஏதேனும் தேவை இருந்தால் முன்னேற வேண்டுமானால் முயற்சி செய்யுங்கள். மத வேறுபாடு தேவையில்லை. இப்பிரபஞ்சம் எல்லோருக்குமானது. ஒருவர் என்னதான் கல்வியில் முன்னேறினாலும், பட்டப்படிப்பை முடித்திருந்தாலும் அவர் நல்லெண்ணங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

## அர்ப்பணிப்புள்ள இலங்கையரும் ஒற்றுமையும்

முக்கியமான ஒன்றாக ஒற்றுமையை வலியுறுத்துகின்றேன். நான் எனது தாய்க்கு, எனது துறவறத்திற்கு என்னென்ன மரியாதை கொடுக்கின்றேனோ அதுபோல சகல மதங்களையும் மரியாதையாக நினைக்கின்றேன். மீண்டும் இதேபோன்ற வாழ்க்கை கிடைக்கப் போவதில்லை. எனவே கிடைத்ததை நன்றாக வாழ வேண்டும்.

நான் ஓர் அமைப்பை உருவாக்க எண்ணியுள்ளேன். இலங்கையின் நான்கு மதத்தைச் சேர்ந்த வாலிபர்களையும் ஒன்றிணைக்க வேண்டும். ஒற்றுமையாக வாழ வேண்டும், அமைதியாக வாழ வேண்டும், மனநிறைவாக வாழ வேண்டும், வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்த வாலிபர்களும் என்னைத் தொடர்பு கொள்ளுங்கள். அடுத்த தலைமுறை எங்களை எங்களுக்காக என்ன செய்தீர்கள்? என்று கேட்காமல் அவர்களுக்குப் பிரச்சனையைக் கையளிக்காமல் மனிதன் மனிதநேயத்துடன் மனிதனாக வாழ வழிசமைப்போம். நல்ல உள்ளத்தோடு இருப்பவர்கள் அநேகர் உள்ளனர். ஆர்வலர்களைச் சேர்த்துக் கொள்வோம்.

## பூஞ்சோலை வளர்ப்போம்

வீடுகளில் பூக்கன்றுகளை நாட்டி நீரூற்றி வளருங்கள். அவை காலையில் பூக்கும்போது அது ஒரு மன சந்தோசத்தைத் தரும்.பூக்கன்று, மரம் நாட்டியவர்கள் நூற்றிற்கு பத்து வீதமானவர்களே இருப்பர். அதுவும் ஒரு புண்ணியத்தைத் தரும். இன்னும் சில நாட்களில் மலையகம் செல்வோம்.

## பிச்சையிடுதல்

திருவோடு ஏந்திச் சென்று பிச்சையெடுத்துச் சாப்பிடுவதே ஒரு துறவி கைக்கொள்ள வேண்டும். அவ்வாறு பிச்சையெடுக்கும் போது துறவிகளின் மனதிலே கோபம்,அகங்காரம் இல்லாமற் போய்விடும். பௌத்த துறவிகளைக் கண்டால் பிச்சையிடுங்கள். ஏனெனில் அவர்கள் மனித நல்வாழ்விற்காக வாழ்பவர்கள். சாப்பிடும்போது ஒரு பிடியாவது மிருகம், பறவைகளுக்கு கொடுங்கள். மனதை ஒருநிலைப்படுத்துங்கள். வாழ்வு சிறிது. இறப்பு நிச்சயம். எதையும் கொண்டுவருவதில்லை. கொண்டுசெல்வதுமில்லை. இருக்கும்போது கிடைத்ததெல்லாம் தற்காலிகமானதே. இங்கேயே கிடைத்தது. அதனை இல்லாதவருக்கும் பகிருங்கள். அனைவரும் நோயற்று வாழ வேண்டும்.

அன்பார்ந்த அடியார்களே இனிய வணக்கங்கள். முயற்சி செய்தால் பலனுண்டு. மற்றவருக்கு பயனுடையாராய் வாழுங்கள்.வாழ்க்கையில் புன்னகை இன்றியமையாதது. ஒருநாள் இவ்வுடம்பு மண்ணுக்கு உரமாகப் போகின்றது. தலையில் உள்ள முடிகள் நரைக்கப் போகின்றன. வாயில் உள்ள பற்கள் விழப்போகின்றன. உடம்பின் அழகான தசைகள் சுருங்கப் போகின்றன. நேராக நிற்கின்றோம்.



ஆனால் முதுமைப் பருவத்தில் நடக்கக்கூட முடியா மற் போகப்போகின்றது. நோய்கள் ஏற்படும். இறப்பு ஏற்படும். பிறப்புக்கும் இறப்புக்கும் இடையி லான காலத்தவையே ஆன்மீக தர்மங்கள். மதத்தை வைத்து மதவாதியாக வாழப்போகின்றேனா அல்லது ஆன்மீகத்தை வைத்து மனிதநேயத்துடன் மனிதனாக வாழப்போகின்றேனா என்பதை தீர்மானியுங்கள்.

## மானிடம் தழைக்கட்டும்

பிறக்கும்போது மனிதனாக மட்டுமே பிறந்தோம். அதன்பின்னரே மதம், மொழி எல்லாம் ஏற்படுத்தப் பட்டன. இறந்தபின் எங்களைப் பார்க்க வருபவர் களை நாங்கள் அவர் எந்த மதம், மொழி எனப்பார்க்க முடிவதில்லை. இதுவே மனித வாழ்வு. இதற்கிடை யில் எனது மதம் உயர்வு, உன்னுடையது தாழ்வு என வீணற்ற வார்த்தைகளைப் பேசுகின்றோம். இந்த நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலவ வேண் டும். அதனை உருவாக்குவது எமது கையிலேயே உள்ளது. இறைவனாகத் தரமாட்டார். அப்படித் தரு வதாக இருந்தால் உலக நாடுகளில் எல்லாம் எப்பொ ழுதோ பிரச்சனைகள் முடிந்திருக்கும்.

இந்த அழகான நாட்டில் பிரதானமாக இரு மொழி கள் உள்ளன. சிங்களவர்கள் தமிழ் கற்க வேண்டும். தமிழர்கள் சிங்களம் கற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் பேசிப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும். இல்லையெனில் இந்த நாடு, நகரம், கிரா மம் அமைதியாக இருக்காது. குடும்பமும்அமைதி யாக இருக்காது. அடியார்களே! புத்த பெருமானின் போதனை அழகானது. அவர் வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் என்றே கூறினார். எந்த மதத்தையும் தாக்கவில்லை. ஏசவில்லை. கோபப்படவுமில்லை. அனைவர் மீதும் அன்பு காட்டியவர்.

நாம் நிம்மதியாக வாழவேண்டுமானால் முதலில் எமது குடும்பப் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும். எனினும் நாங்கள் முயற்சிப்பதில்லை. பிரார்த்தனை செய்வதில்லை. தமிழ் நாட்டிலே தமிழ் பேசும் பௌத் தர்கள் இருக்கின்றனர். அவர்கள் உண்மையில் சந்தோசப்பட வேண்டும். ஏனெனில் அவர்களது பாரத நாட்டிலிருந்தே புத்த பெருமான் இங்கு வந் தார். காஞ்சிபுரத்திலே நிறைய தமிழ் பேசும் பௌத் தர்கள் உள்ளனர். அவர்கள் உறவு கிடைத்துள்ளது. அதுபோல வெளிநாட்டிலுள்ள தமிழ் பேசும்பௌத் தர்களைப் பார்க்கவும் வரவுள்ளோம்.

## அனைவருக்கும் சமத்துவம்

அன்பான தமிழ் பேசும் சொந்தங்களே!உங்களுக் காவே நான். நான் பிறருக்கு உதவி செய்யவே உள் ளேன். தமிழ், இஸ்லாமியர்களே! உங்களுக்கான தலைமைத்துவத்தை வழங்க பௌத்த துறவிகளாகிய நாங்கள் தயாராக உள்ளோம். நீங்களும் இந்த நாட் டில் தலைநிமிர்ந்து வாழ உதவி செய்யத் தயாராக உள்ளோம். அனைவரும் ஒருவர் மீது அன்பு செலுத்தி விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்து கண்களால் நல்லதைப் பார்த்து காதால் நல்லதைக் கேட்டு வாயால் நல்லதைப் பேசி மனதால் நல்ல சிந்தனைகளை எடுத்து ஒரு நாளைக்கு பத்து நிமிட மாவது தியானம் செய்து உங்கள் மனதை ஒருநி லைப்படுத்துங்கள்.

பல இடங்களில் பல பிரச்சனைகள் இருக்கலாம். ஆனால் பிரச்சனைகளையே பேசிக் கொண்டிருக்கா மல் அதற்குத் தீர்வுகாண முயலவேண்டும். அப்பொழு துதான் நாங்கள் எங்கள் நாட்டிற்கு ஒரு தீர்வுகாண முடியும். எல்லா இடங்களிலும் பிரச்சனைகள் இருக் கின்றன. ஆனால் அதெற்கெல்லாம் தீர்வு இருக்கின் றன. வாழ்க்கையில் கோபப்படாமல் அமைதியாக விட்டுக்கொடுத்துப் பேசுவோம். எங்கள் விகாரைக்கு வாருங்கள்.




**( வண.பொகவந்தலாவை ராகுல தேரருடன் ஆய்வாளர )**

இம்முறை வர இருக்கின்ற தைப்பொங்கலை எமது விகாரையிலே அறநெறியின் சைவப் பிள்ளைகள் உள்ளடங்கலாக சைவ மக்களையும் சேர்த்துக் கொண்டு மிகப் பிரமாண்டமாக செய்ய இருக்கின்றோம். தமிழிலும், சிங்களத்திலும் தைப்பொங்கல் பற்றியும் அதுதொடர்பான உரைகளும் நிகழ்த்தவுள்ளோம். இதில் தமிழர், இஸ்லாமியர், சிங்களவர் என எல்லோரும் எமது விகாரைக்குவாருங்கள். கலந்து கொள்ளுங்கள். தை பிறந்தால் வழி பிறக்கும். எனவே அத்தினத்தில் சந்திப்போம்.

**06.அவரின் வெளிநாட்டுப் பயணங்கள்**

2018 ஆம் ஆண்டு குருத்துவ பட்டமளிப்பின்வண. பொகவந்தலாவை ராகுல தேரர் பல வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

- 2018இல் சிங்கப்பூர் நாட்டிற்கு தர்ம போதனைக்காகச் விஜயமானார்.
- தாய்லாந்துக்கு விகாரைகளைப் பார்வையிடச் சென்றார்.
- இந்தியாவிலுள்ள குஜராத்தில் மூன்று விகாரைகள் உள்ளன. அதில் ஒரு விகாரையில் தியான மண்டபத்தில் தியானம் மேற்கொண்டுள்ளார். (தமிழ்நாட்டிலே பல விகாரைகள் உள்ளன. எனினும் அங்கு வழிபாடுகளோ, பௌத்த துறவினளோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.)
- 2019 இல் சுவிற்சர்லாந்து தேசத்திலே சிவன் கோவில் ஒன்றில் தர்ம போதனை ஆற்றியுள்ளார்.
- கனடாவில் போதனைகளை நிகழ்த்தினார்.
- யப்பானிலும் தர்ம போதனைகளைச் செய்தார்.

**முடிவுரை**

பிறப்பால் வண.பொகவந்தலாவை ராகுல தேரர் சைவராகத் திகழ்ந்து பௌத்த சமயத் துறவறம் பூண்டிருந்தார். மதம்மாறுபவர்கள் தம் மதமாற்றத்தின் பின் தமது பூர்வீக மதத்தைச் சாடுவது வழமை. எனினும் வண.பொகவந்தலாவை ராகுல தேரர் அவ்வாறு செய்யவில்லை. மாறாகச் சைவத்திற்கு பெரும் பணிகளை ஆற்றி வருகின்றமையைக் இவ்வாய்வினூடாகஅறியமுடிகிறது.ஆகவே சைவமும் தமிழும் கூறும் நல்லுலகம் இலங்கையின் முதலாவது தமிழ் பௌத்த தேரரை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதனூடாக பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் இன்றைய சூழலில் சைவ, பௌத்த இணக்கப்பாடு இன்றியமையாத ஒன்றாகும். இவ் இணக்கப்பாட்டின் அடையாளமாக வண.பொகவந்தலாவை ராகுல தேரர் தொடர்பாகச் சைவரும்,பௌத்தரும் அறிவது சாலப்பொருத்தமாகும்.



# தாய் மொழிக் கல்வி

ஒரு வலிமையான தலைநிமிர்ந்த சமூகத்தை உருவாக்க தாய் மொழிக் கல்வி அவசியம்.

பெற்ற தாயைவிட சிறந்தது தாய்மொழி யாகும். எந்நாட்டவராக இருப்பினும் அவரவர் தாய் மொழியிலேயே கல்வி கற்பதுதான் மிகச் சிறந்ததாகும். ‘தாய் மொழி கண் போன்றது. பிற மொழி கண்ணாடி போன்றது’ என்பது பொன்மொழி. கண்ணாடிகளுக்காக கண்ணை இழக்காமல் வாழ்வது குறித்து வளரும் தலைமுறைக்கு வழிகாட்டுவோம்.

உலகளவில் மனித சமுதாயம் ஒருவருக்கொரு வர் தொடர்பு கொள்ள முடிகிறது என்றால் அதற்கு காரணம் மொழி. உலகில் பேச்சு வழக்கில் ஆயி ரக்கணக்கான மொழிகள் உள்ளன. இது மாவட்டம் மாகாணம். நாடு கண் டம் என வேறுபடுகிறது. இவற்றின் தனித்தன்மை பண்பாட்டை பாதுகாக்கும் நோக்கிலும் அவற்றுக்கி டையே ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கிலும் பெப். 21ம் தேதி சர்வ தேச தாய்மொழி தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. தாய்மொழி தேசிய மொழி மற்றும் தொடர்பு மொழி என பொதுவாக மூன்று விதமான மொழிகள் ஒருவ ருக்கு தெரிந்திருந்தால் எங்கு வேண்டுமானாலும் வாழ் வதற்கு துணையாக இருக்கும் என அறிஞர்கள் கூறு வர். ஆனால் தொடர்புகளுக்காக உருவான மொழியின் பெயரால் இனவாதம் துவங்கியது துரதிஷ்டமானது. உலக மக்களால் பயன்படுத்தப்படும் அனைத்து மொழி களுக்கும் பாதுகாப்பும் உரிய மரியாதையும் அளிக்க வேண்டும். எந்த மொழியையும் அழிக்கக் கூடாது. ஒரு வர் பல மொழிகளை தெரிந்து கொள்ளவும் வெளிநாட்டு மொழிகளை கற்றுக் கொள்ளவும்




திருமதி.
**பவானி சற்குணசெல்வம்**
(நெதர்லாந்து)




மொழிபெயர்ப்பு மூலம் அமைதியை உருவாக்கவும்' இத்தினம் வலியுறுத்துகிறது.

ஒரு வளமான நாட்டுக்கு அடிப்படை, வளமான கல்வி முறையே ஆகும். அதுவும் தாய்மொழிக் கல்வி முறையே ஆகும். உலகம் முழுவதும் அனைத்து நாடுகளிலும் இந்தியா உள்பட ஒரு சில ஆசிய, ஆபிரிக்க நாடுகளைத் தவிர, தாய்மொழி மூலமாகவே கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. இன்றைய கால கட்டத்தில் தாய் மொழிக் கல்வி என்பது அனைவராலும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால் இதனை இன்று பழைமைவாதமாகவும், குறுகிய கண்ணோட்டத்துடனும் நோக்கப்படுகிறது. உலகமயமாக்கல் நிலவும் இக்கால கட்டத்தில் தாய் மொழியில் கல்வி என்பது தாங்கள் குழந்தைகளுக்கு வளமான எதிர்காலத்தை ஏற்படுத்தி கொடுக்குமோ என்ற கேள்வி பெற்றோர்களிடத்தில் எழுகிறது. இதனால் இன்று நாம் தாய் மொழிக்கல்வியின் அவசியத்தை வலியுறுத்த கடமைப்பட்டுள்ளோம்.

மனித ஆற்றலை வளமையாக்கவும், ஒருவரது படைப்பாற்றலை அதிகப்படுத்தவும் தாய்மொழிக் கல்வியால் மட்டுமே முடியும். இது அறிவியல் பூர்வமாக நிரூபணமான உண்மை. மனிதனது சிந்தனைத் திறனுக்கும் தாய்மொழிக்கும் தொடர்பு இருக்கிறது. தாய்மொழியிலேயே ஒருவர் அதிகம் சிந்திக்க முடியும். சிந்தனை ஆற்றலை வளர்ப்பதும்இ படைப்புத் தன்மையை உருவாக்குவதும், நாகரிகமான சமூக மனிதராக மாற்றுவதும் சமூகப் பண்பாட்டைக் காப்பாற்றிக் கொண்டே அதை மேம்படுத்துவதும் சிறந்த கல்வியின் நோக்கம்.

தங்களுடைய இளமைக் காலத்தில் தாய்மொழியில் கல்வி கற்கும் குழந்தைகள், இதர மொழிகளையும், இதரப் பாடங்களையும், தாய்மொழியில் கல்வி கற்காத குழந்தைகளை விட சிறப்பாக கற்றுத் தேறுகின்றனர். தமிழ்மொழியை நம் குழந்தைகள் சிறப்பாகக் கற்று சான்றோர்களாக வாழ வழி அமைப்பது நமது முக்கிய கடமையாகும். குழந்தைப் பருவத்திலேயே தமிழைக் கற்பதன் மூலம் நம் குழந்தைகள் பாடங்களையும்இ மொழிகளையும் கசடறக் கற்பதிலே வல்லவர்களாகத் திகழ்வார்கள் என்பதில் ஐயமே இல்லை.

தாய்மொழிதான் சிந்திக்கும் திறனின் திறவுகோலாக இருக்கிறது. எந்த மொழியைக் கற்றாலும், எத்தனை மொழிகளைக் கற்றாலும் ஒருவரின் சிந்தனை உருவெடுப்பது தாய்மொழியில்தான். தாய்மொழிக் கல்வி கற்பதனால் தொழில்துறை மற்றும் பொருளாதாரம் போன்றவற்றில் வெற்றி பெற முடியுமா என்ற கேள்வி தவறான கருத்தாகும். ஏனெனில் தாய்மொழிக் கல்வி வாழ்க்கையை செம்மைப்படுத்துகிறது.

தாய்மொழிக் கல்வி போதனையில் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியதுடன் அதன் மேம்பாட்டில் அக்கறை கொள்ள வேண்டும். 'தமிழை மறந்தால் தமிழ் இலக்கியமும்இ வரலாறும் அதோடு போய் விடும். மன்னிக்க முடியாத குறை வந்து சேரும்'. தாய்மொழிக் கல்விக்கு எதிரான அனைத்து வேறுபாடுகளும் அகற்றப்பட வேண்டும்:

எந்த நாட்டின் ஒற்றுமையின்மைக்கும் தாய்மொழிக் கல்வி காரணமாக இருந்ததே இல்லை. ஒரே மொழிக்கல்வி எந்த நாட்டிலும் ஒற்றுமையை உறுதிப்படுத்தி அதனை நிரந்தரமாக்கியதில்லை. ஒற்றுமையின்மைக்கு வித்திடும் என்ற கூற்றுக்கு மாறாக தாய்மொழிக் கல்வி சிறார்களின் ஆற்றலை வளர்த்திடவும்இ பல்லின மக்களிடையே அவரவர்களின் பண்பாடுகளைப் புரிந்து கொள்ளவும்

வேறுபாடுகளை உணர்ந்து போற்றவும் அவற்றி னால் வளமடையவும் உதவுகிறது. தாய்மொழியின் இச்சிறப்புகளை ஐ.நா. மன்றம் ஏற்றுக்கொண்டு அங் கீகாரம் அளித்துள்ளது.

எழுத்து இல்லாத மொழிகள், சிறுபான்மையினர் பேசும் மொழிகள், இலக்கணங்கள் சரிவர இல்லாத மொழிகள்இ மொழி வளர்ச்சி அடையாத மொழி கள், பிற மொழிகளுக்கு சமமான சொல்வளம் இல் லாத மொழிகளில் தாய் மொழியில் கல்வி என்பது மிகப் பெரிய சவாலாகவே உள்ளது. இதைக் கருத் தில் கொண்டு பல ஆராய்ச்சிகளின் அடிப்படையில் பன்மொழிக் கல்வி என்ற கோட்பாடு வகுக்கப்பட்




டுள்ளது. பன்மொழிக் கல்வி என்பது தொடக்க கல்வி யைத் தாய்மொழியில் தொடங்கி மெதுவாகத் தேசிய மற்றும் சர்வதேச மொழிக் கல்விக்கு மாறுவதாகும்.

எந்த மொழிக் கல்வியாக இருந்தாலும் இலக்கியம், இலக்கணம் போன்றவற்றை மட்டும் கற்பதன் மூலமாக ஒரு மாணவன் முழுமையான மொழியறிவைப் பெற முடியாது. மொழிக் கல்வி என்பது குறைந்தபட்சம் கேட்டல்இ வாசித்தல், பேசுதல், எழுதுதல், என்ற நான்கு பகுதிகளிலும் போதிய தேர்ச்சியை அடைவதன் மூலம் பெறப்படும். அதைவிட மொழியைச் சரியான முறையில் பலுக்குதல், உச்சரித்தல்இ எழுத்துப் பிழை வசனப்பிழை விடாது எழுதப்பழகுதல், கற்பனை வளத் தைப் பெருக்குதல் கொடுக்கப்பட்ட விடயத்தைப்பற்றி சரியாக வரையறுக்கப்பட்ட கட்டமைப்பில் எழுதவும் பேசவும் பழகுதல் போன்ற விடயங்களுக்கு மாணவர் கள் பயிற்றப்பட வேண்டியது அவசியம். தாய்மொழி யில் வலுவான அறிவைப் பெற்ற பிறகு, வாழ்க்கை யின் குறிப்பிட்ட கட்டத்தில் ஆங்கிலத்தை எளிதாகக் கற்றுக்கொள்ள முடியும்.

கல்வியின் முக்கியத்துவத்தையும், சமுகத்தின் இயங்கியலில், அதற்கான அவசியத்தையும் அறிந் துகொள்ளஇ இலக்கியங்கள் அதற்கான தரவுகளை நமக்கு முன்னிறுத்துவதை நாம் காணமுடியும். தாய் மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள வும்இ அதன் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கவும்இ அதனை போதனை முறையில் நடைமுறைப் படுத்த வேண்டும். மொழி ஆன்மாவாகும். பன்முக கலாச்சாரமும் பன்முக மொழி போதனையும் ஒற்றுமைக்கு எதிரானது அல்ல. மொழி என்பது வெறும் கருத்து பரிமாற்றங்களுக்கான ஒரு கருவி என்பதைத் தாண்டி அது மக்களின் கலாச் சாரங்களைத் தாங்கி நிற்கும் சாதனமாக உள்ளது. அது மக்களின் பண்பாட்டுடன் இரண்டறக் கலந்துள்ளது. தாய்மொழிக் கல்வியால் கலாச்சாரங்களை ஒட்டி கல்வி கற்க முடிகிறது. மக்கள் தங்கள் கலாச்சாரங்க ளைத் தழுவி வாழ்கின்றனர். இதனால் உலகில் பல்வே றுபட்ட கலாச்சாரங்களைப் பாதுகாக்க முடிகிறது.

உலக நாடுகள் அனைத்தும் தாய் மொழிக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து அதை நோக்கி நகர்ந்துள்ளன. நம் நாட்டிலும் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து தாய் மொழிக் கல்வியை ஆதரித்தால் தான் ஒரு வலிமை யான தலைநிமிர்ந்த சமுகத்தை உருவாக்க முடியும்.

# மானிடகுல இராவணனாரின் சமாதியை, மனிதகுல சித்தர் காலாங்கிநாதர் தரிசித்துள்ளார்



*பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் எத்தனை ஆட்டங்கள்.*
*விண்ணில் மனிதன் பறக்கின்றான்*
*விந்தை பலவும் புரிகின்றான்,*
*பறக்கத் தெரிந்த மனிதனுக்கு*
*இறப்பைத் தடுக்கத் தெரியவில்லை (விண்)*

*செய்மதி விதம் விதம் செய்துள்ளான்*
*தன் மதி இழந்து தவிக்கின்றான்*
*உயிரை அணுவினால் அழிக்கின்றான்*
*உயிரூட்ட முடியாமல் நிற்கின்றான - (விண்)*

*விஞ்ஞானம் வளருது மேற்கினிலே*
*அஞ்ஞானம் போவது அழிவினிலே*
*அமைதிக்கு தூது விடுவோமா*
*ஆண்டவன் பாதம் பணிவோமே (விண்)*

*குழந்தை தாயின் கர்ப்பத்திலிருந்து வெளியே வரும்போது பூவுலக காற்றை சுவாசிக்கத் தொடங்கியதும், தான் பூவுலகிற்கு வந்ததினால் ஏற்பட்ட மாற்றத்தை அறிவிக்கவே வீரிட்டு அழுகிறது. குழந்தை பிறந்ததிற்கு அடையாளமாக நேரம், காலம் போன்றவை ஏனையவர்களால் குறிக்கப்பட்டு பிறப்புச்சாட்சிப் பத்திரம் வழங்கப்படுகிறது. ஆனால் மனிதர்களின் இறப்பைக் குறிக்கும் காலத்திற்கான பத்திரம் மனித உடலிலிருந்து ஆன்மா பிரிந்ததும் ஏனைய மனிதர்களால் குறித்து வைக்கப்படுகிறது. அதற்கான அடையாளத்தை ஆன்மாவிற்கு சொந்தக்காரனான மனிதனால் குரல் விட்டுச் சொல்ல முடிவதில்லை.*

*1994களில் என்னால் எழுதப்பட்டு எம்.எஸ். செல்வராசா அவர்களின் இசையமைப்பில் எஸ். குலசேகரம் அவர்களால் பாடப்பட்டு தொலைக்காட்சியில் 'ஒளித்தென்றல்' நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகிய பாடல் இது. நூல் வடிவிலும் வெளிவந்துள்ளது. சித்தர்களும் முனிவர்களும், ரிஷிகளும் உடலிலிருந்து ஆன்மா பிரிய வேண்டிய நேரத்தை முன்கூட்டியே தெரிந்துகொண்டு, தம்மைத் தயார்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதன்படி குறித்த நேரத்தில் சமாதி அடையும் சக்தி பொருந்தியவர்களாகவும் இருந்துள்ளார்கள்.*

**இலிங்க பூமியிலிருந்து தமிழ்நிதி அருணா செல்லத்துரை**





**சித்தர் காலாங்கி நாதர் :** Siddher Kalangi Nathar தனிமனிதனுடைய ஆயுள் காலத்தில் நோய் நொடிகளின்றி சுகதேகியாக வாழ்வதற்கு தேவையான பல வழிகளைச் சொன்னவர்கள் சித்தர்கள் என்று அழைக்கப்பட்டுள்ளார்கள். காலாங்கிச் சித்தர் கன்னார் (நாகர்) என்ற குலத்தைச் சேர்ந்தவர்.

## காலாங்கி நாதர்

மனிதர்கள் சுகதேகிகளாக வாழ்வதற்கு இறைவழிபாடுகளுக்கான யோகாசனம், நரம்புகளை சீராக்கி முறையான இரத்தோட்டத்தை ஏற்படுத்துவதற்கான அக்குபஞ்சர் வைத்திய முறைகள் மற்றும் வர்மக்கலை என்று அழைக்கப்பட்ட தற்காப்புக் கலைகளான சிலம்பாட்டம், போன்றவற்றை சொல்லிக் கொடுத்தவர் சித்தர் காலாங்கி நாதர் ஆகும்.

சித்தர்கள் பலர் நாடு விட்டு நாடு சென்று மக்கள் வாழ்க்கைக்கு தேவையானவற்றைச் சொல்லிக் கொடுத்துள்ளார்கள். இந்தியாவில் பிறந்த சித்தர் காலாங்கி நாதர் அவர்கள சீன நாட்டில் வாழந்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. அதன்படி சீன வரலாறுகளில் அவர் கொன்பியுசியஸ் (Confucius) என்று அழைக்கப்பட்டுள்ளார். கிறிஸ்துவிற்குமுன்னர் 551ம் ஆண்டு (BCE, as per Chinese sources) லூ (Lu) என்ற சீனக் கிராமத்தில் பிறந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவருடைய பிரதம சியர் போகர் என அழைக்கப்பட்டுள்ளார்.

## Bhogar சித்தர் போகர் நாதர் / Siddher Nathar: போகர் சித்தர்

போகர் சித்தருடைய வரலாறுகள் 'போகர் ஜனன சாகரம்' என்ற நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றி 1979, 1982ம் ஆண்டுகளில் பல ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன என்று இணையத்தள தகவல்;கள் தெரிவிக்கின்றன. தமிழ் நாட்டில் பிறந்த இவர் இந்தியா, சீனா, மற்றும் மெக்சிக்கோ போன்ற நாடுகளில் தமது சேவைகளை வழங்கியுள்ளார் என்பது ஆய்வுகளில் வெளிவந்துள்ளது. சீனாவில் போகர் சித்தருடைய பெயர் லா ஓ ஜி அல்லது லா- ஓ-ஸ (Laozi / Lao Tzu) என்பதாகும். போகர் அவர்கள் பொற்கொல்லர் (Goldsmiths) பரம்பரையைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கபபடுகிறது. பஞ்ச கர்மாக்கள் என்று அழைக்கப்பட்ட நாகர்களுக்குள் பொற்கொல்லர் என்ற குலமும் ஒரு பிரிவினராகும்.

மனிதர்கள் சுகதேகிகளாக நீண்ட காலம் நோய் நொடியின்றி வாழ்வதற்கு, அவர்களுக்கு ஏற்படும் வருத்தங்களை, மூலிகைகளைக் கொண்டு சுகப்படுத்த முடியும் என்ற மூலிகை மருத்துவத்தில் (Herbal Healer) சிறந்தவர். இவர் போகர் யோகி எனவும் போகர் நாதர் எனவும் அழைக்கப்பட்டுள்ளார்.

காலாங்கி நாத சித்தர் தனது பிரதான சீடர்களில் ஒருவரான போகர் சித்தரை, சீனாவிற்குச் சென்று மூலிகை வைத்தியத்தை அறிமுகம் செய்து, மக்கள் சுகதேகிகளாக வாழ்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுள்ளார். அவரது வேண்டுகோளுக்கிணங்க போகர் சீனாவிற்குச் சென்றுள்ளர். அங்கு மூலிகை வைத்தியம் உட்பட காகித உற்பத்தி மற்றும் பல நீராவி விஞ்ஞான தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சித்தர் காலாங்கி நாதர், வாழ்க்கைக்குத் தேவையான சமயநெறிகளில் பின்பற்றப்பட வேண்டிய பயிற்சிகளையும், அவருடைய சீடரான போகர் சித்தர் மூலிகை வைத்தியம் அல்லது இயற்கை வைத்தியத்தின் மூலம் மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களில் இருந்துவிடுபட்டு சுகதேகிகளாக வாழமுடியும் என்பதை நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

மனிதர்கள் பூவுலகில் வாழ்வதற்கு தேவையான இரண்டு வகையான மருத்துவ முறைகள் அறிமுகம் செயப்பட்டுள்ளமை தெளிவாகிறது. காலாங்கி நாதர் மற்றும் அவருடைய பிரதான சீடரான சித்தர் போகர் ஆகிய இருவரும் வேறு வேறு துறைகளாக இருந்தாலும் மக்களை நல்வாழ்க்கைக்கு வழிப்படுத்துவதே நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

பூவுலக வாழ்வில் சுகதேகியாக இருப்பதற்கு யோகாசனப் பயிற்சிகள், மூலிகை வைத்தியம் ஆகிய

இரண்டும் அவசியமானவையாகும். மக்களின் நல்வாழ்க்கைக்கு தேவையானவற்றை புகட்டுவது என்ற நல்ல சிந்தனை அவர்களுக்கிருந்தது. இருவருடைய நோக்கங்களும் மக்களை சுகதேகிகளாக வாழவைப்பதற்கு தேவையானவற்றை சொல்லிக் கொடுக்க வேண்டும் என்பதையே அடிப்படையாகக் கொண்டிருந்தமை தெளிவாகிறது.

காலாங்கிச் சித்தரும் போகர் அவர்களும் பொதுவாக நாகர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்புகள் மூலம் தெளிவாகிறது. இவர்கள் வாழ்ந்த காலங்கள் பற்றிய காலக்கணிப்புகள் வரலாற்றுக்கு முக்கிய அம்சமாகும்.

காலக்கணிப்புகள் : சித்தர் காலாங்கி நாதர் மற்றும் போகர் சித்தர் ஆகியோர் தமிழ்நாட்டிலும் சீனாவிலும் வாழ்ந்ததாக குறிப்பிடப்படுவதினால் இரண்டு நாடுகளின் காலக்கணிப்புகளும் ஒப்பீட்டு அடிப்படையில் ஆங்கிலத்தில் கூறப்பட்டுள்ளன. இந்தியா, சீனா ஆகிய இரண்டு நாடுகளின் காலக் கணிப்புகளும், ஆங்கிலத்தில் கி.மு. / கி.பி. என்று மாற்றப்பட்டுள்ளன. அதுவே தற்போது வரலாறுகளில் பாவனையிலும் உள்ளன.

**01. தமிழ் காலக்கணிப்பு.**

**02. சீனக் காலக்கணப்பு**

**03. ஆங்கில காலக்கணிப்பு**

உலகநாடுகளில் தமிழ், சீனம், ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் காலக்கணிப்புகள் இருந்துள்ளன. அனைத்தும், குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் சர்வதேச தரத்திற்கேற்ப கிறிஸ்துவை அடையாளமாக வைத்து மாற்றப்பட்டுள்ளன. அறிஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து கணிப்பீடுகளைச் செய்துள்ளமை தெளிவாகிறது.

தமிழ்காலக்கணிப்பு: தமிழ் காலக்கணிப்புகள் தனித்தன்மையுடன் யுகங்களாக பிரிக்கப்பட்டு இருந்த காரணத்தினால், அவை சர்வதேச தரத்திற்கேற்ப மாற்றப்பட்டுள்ளன. தற்போது குறிப்பிடப்படும் வரலாற்றுக்கான காலக்கணிப்புகள் கி.மு. ஃ கி.பி. என்று வரலாற்று ஆய்வுத்தேவைக்காக மாற்றப்பட்டுள்ளதினால் அவைபற்றியே குறிப்பிடப்படுகின்றன.

தமிழ் காலக்கணிப்பின்படி நான்கு யுகங்கள் உள்ளன. இதனை புராணங்கள் மற்றும் இதிகாசங்கள் மூலமும் அறியக்கிடக்கின்றது. இலங்கையில் வடபுலத் தமிழர்களின் காலக்கணிப்பு பஞ்சாங்கத்தில் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் பஞ்சாங்கத்தை கணிக்கும் பாரம்பரியம் ஆங்கில வருடம் கி.பி.1859ம் ஆண்டு தொடக்கம் இடம் பெற்றுள்ளது. இது ஒரு நிறுவனமாக நிறுவப்பட்டு 1892ம் ஆண்டு தொடக்கம் பஞ்சாங்கம் வெளியிடப்பட்டு வருகிறது. அதுவே எமக்கான காலக்கணிப்பாகவும் இருக்கின்றது.




கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்ற நாலு யுகங்களும் ஒன்றாக சதுர் யுகம் எனவும், மொத்தமாக 43,20,000 வருடங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு யுகத்தின் முடிவிலும் யுகமாற்றம் ஏற்படும். இந்த யுகமாற்றக் காலத்தை ‘பிரளயகாலம்’ எனப் பஞ்சாங்கம் கூறுகின்றது. ஒவ்வொரு யுகத்திலும் வாழ்ந்த மானிடர்கள் ஒவ்வொரு உயரத்தைக் கொண்டவர்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

01) கிருதயுகம் : முதலில் உள்ளது கிருதயுகமாகும். இதில் 17,28,000 வருடங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கிருதயுகத்தில் வாழ்ந்தவர்கள் உயரம் 24 அடிகள் எனவும் ஆயுள் காலம் பல ஆயிரம் ஆண்டுகள் எனவும் எழுதப்பட்டுள்ளது.

02) திரேதாயுகம் : இரண்டாவதாக திரேதாயுகத்தில் 12,96,000 வருடங்கள் இருந்தன. அக்காலத்தில் வாழ்ந்தவர்களின் உயரம் 18 அடிகள். ஆயுள் காலம் சில ஆயிரம் ஆண்டுகள். இந்த யுகத்திலும் பிரளயம் ஏற்பட்டு யுகம் மாறியிருக்கின்றது.

03) துவாபரயுகம்: துவாபரயுகத்தில் 8,64,000 வருடங்கள் இருந்துள்ளன. இக்காலத்தில் வாழ்ந்தவர்கள் அதீத சக்திபடைத்த மா-னிடர் குலத்தவர்கள். அவர்களின் சராசரி உயரம் 12 அடியாகும். ஆயுள்காலம் 120 ஆண்டுகள். துவாபரயுகத்தின் முடிவில் ஏற்படவிருந்த பிரளயகாலத்தை



எதிர் கொள்வதற்கான முன் ஆயத்தங்கள் துவாபரயுக த்தில் இடம் பெற்றிருக்கின்றன. அந்த யுகத்தின் முடிவில் பிரளயம் இடம்பெற்று அதற்குப் பின்னரே கலியுகம் பிறந்துள்ளது.

லங்கா நகரி இராஜதானியில் ரிஷிகளுக்கும் முனிவர்களுக்கும் மேலான அதீதசக்தி படைத்தவரான இராவண மகாராசாவை, வட இந்திய அயோத்தி நாட்டு ஆட்சியின் கீழ் கொண்டு வருவதற்காக, துவாபரயுகத்தில் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. மா-னிடகுலத்தைச் சேர்ந்த சேர்ந்த இராவணனார் மா-னிடர்கள் எவராலும் தோற்கடிக்க முடியாத வகையில் வரம் பெற்றிருந்தமை இதற்கான முக்கிய காரணமாகும்.

அதனால் கலியுகத்திற்குப் பொருத்தமான 06 அடி மனிதப் பிறவிகள், முனிவர்களால் பிறக்க வைக்கப்பட்டனர். 12 அடி உயர மா-னிடரான இராவணனாரை 6 அடி உயர மனித குலத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்பதாகக் காட்டி, அவரை சிறுமைப்படுத்த எண்ணினர். மனித உருவில் இருந்த இராமர் வடஇந்திய அயோத்தியிலிருந்து தென்திசையிலிருந்த காடுகளை 14 ஆண்டுகள் ஆள்வதற்காக அனுப்பப்பட்டார். அவருடன் மனைவி சீதையும், சகோதரன் இலட்சுமணனும் சேர்ந்து கொண்டனர்.

துவாபரயுகத்தின் இறுதி நூறு ஆண்டுகளுக்குள் இராவண மகாராசா வாழ்ந்துள்ளார் என்பது புராணங்கள் இதிகாசங்களின் காலக்கணிப்பாகும். அவர் எத்தனை வருடங்கள் ஆட்சி செய்தார் என்பது தெளிவில்லை. ஆனால் இராவண மகாராசா, அயோத்தி இராமரைவிட வயதில் கூடியவர் எனபது மட்டும் ஆய்வுகளில் தெளிவாகிறது.

04) கலியுகம்: நான்காவது கலியுகமாகும். வறுமைக்காலம் எனவும் அழைக்கப்பட்டுள்ளது. கலியுகம்; 4,32,000 ம் வருடங்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இக்காலத்தில் வாழப்பிறந்த மனித குலத்தினரின் உயரம் 6 அடி வரையாகும். ஆயுள் காலம் 120 ஆண்டுகள் ஆகும். கலியுகத்தின் முடிவில் பிரளய காலம் ஏற்படும். அப்போது உலகம் அழிந்துவிடும் என்பது பஞ்சாங்கக் கணிப்பாகும்.

'' துவாபரயுகத்தில் பிறந்;தவர்கள் அதீத சக்திபடைத்த மா-னிட குலத்தவர்கள் எனவும், கலியுகத்தில் பிறந்தவர்களை மனித குலத்தவர்கள் எனவும் வேறுபடுத்திக் காட்டுவதற்காக இந்தப் பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழ் - ஆங்கில வருடங்களின் ஒப்பீடு : இலங்கை வரலாற்றில் கி.பி.1879ம் ஆண்டு சி.பிறிற்றோ அவர்கள் ஆங்கிலத்தில் வெளியிட்ட யாழ்ப்பாண வைபவமாலை என்ற தொகுப்பு நூலின், அனுபந்தப் பிரிவில் 'தமிழ் நாட்காட்டி' என்ற பகுதியில் 'பஞ்சாங்கம்' என்ற தமிழ் காலக்கணிப்புகளை, ஆங்கில வருட கணிப்புகளோடு ஒப்பீடு செய்து எழுதியுள்ளார்.

'தமிழ் காலக்கணிப்பின்படி தற்போது நாங்கள் கலியுகம் 4,979ம் ஆண்டு முடிவில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்;. இது ஆங்கிலக் கணிப்பின்படி கி.பி. 1878ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ந் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 01.45 ஆகும்'(1) என்று தெரிவித்துள்ளார்.

(1)'We are at present living in the Kaliyuga, of which the year 4,979 ended on Friday the 12th of April, 1878 A.D. at 01 hour and 45 minutes A.M'. (The Yalpana Vaipava- Malai or the History of the Kingdom of Jaffna' Translated by C.Brirro – 1879. Pagnchankam or The Tamil Calendar. p.no. ixxxix)

'' காலத்தை கணிப்பிட்டு (Convert) மாற்றியபோது கிறிஸ்துவிற்கு முற்பட்ட ஆண்டு கள் 3001 லிருந்து கீழிறங்கி குறைந்து வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

'' தமிழ் காலக்கணிப்பிற்கும் ஆங்கில காலக்கணிப்பிற்கும் இடையில் கலியுகத்தில் 100 வருடங்கள் வித்தியாசம் இருப்பது குறிப்பிடத்தக்கது. அதனால் கி.மு. 3100ம் வருடத்திலிருந்து கலியுகம் ஆரம்பித்துள்ளது என்று பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட் டுள்ளது.

'' கலியுகம் ஆரம்பித்து 3100 ஆண்டுகளுக்குப் பின்;னர், கிறிஸ்துவிற்குப் பின் என்று ஆங்கிலத் தில் உள்ள ஆண்டுக்கணிப்பு 'வரலாற்றுக் காலம்' எனவும் அழைக்கப்பட்டுள்ளது.

'' கி.பி. 2020ம் ஆண்டு (தற்போது), தமிழ் காலக்கணிப்பில் மொத்தமாக கலியுகத்தின் 5120 ஆவது வருடம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

'' இதேநேரம் கலியுகத்தில் கி.மு.3084ம் ஆண்டு களில் இராவண மகாராசா வாழ்ந்தார் எனத் தமிழில்

கணிக்கப்பட்டுள்ளதற்கு மாறாக, அவர் துவாபரயுகத்தில் வாழ்ந்தார் என்று போகரின் சப்தகாண்டம் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

'' கிறிஸ்து பிறப்பை அடையாளமாக வைத்து கலியுக கணக்கீடுகள், மாற்றப்பட்டபோது, கி.மு.3100ம் ஆண்டு கலியுகம் ஆரம்பித்தது எனவும் அதிலிருந்து 16 ஆண்டுகளின் பின்னர் 3084ம் ஆண்டுகளில் இராவண மகாராசா வாழ்ந்தார் என்றும் தமிழ் கணிப்புகள் கூறுகின்றன.

'' இராவண மகாராசாவின் ஆட்சிக்காலம் எனக் குறிப்பிடப்பட்ட நாளிலிருந்து, கலியுகம் ஆரம்பித்தது என்று கலியுகத்தின் ஆரம்பப் புள்ளியாக பேசப்பட்டும் வருகின்றது. இராவண மகாராசாவின் ஆட்சி முடிவடைந்ததும் தொடர்ந்து வந்த கலியுக காலத்தில் இலங்கையை விபீஷணும், அயோத்தியை இராமரும் ஆட்சி செய்துள்ளனர் என்ற முடிவு சரியானதாகும்.

'' தற்போது ஆங்கில காலக்கணிப்புகள் மட்டுமே வரலாற்று ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. கிறிஸ்து நாதரின் பிறப்பு கி.மு. 5ம் 6ம் நூற்றாண்டு என்ற வாதமும் முன் வைக்;கப்பட்டுள்ளது. அதனால் கிறிஸ்து நாதரின் பிறப்பு இறப்பு ஆகியவற்றை நூற்றாண்டுகளின் கால அடையாளக் கணிப்பாக வைப்பதைப் பற்றிய நீண்ட வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்று வருகின்றன.

இலங்கையில் தமிழ் காலக் கணிப்புகளின்படி கி.மு. 3084ம் (கி.மு. 31ம் நூற்றாண்டு) ஆண்டுகளில் இராவண மகாராசா வாழ்ந்தவர் என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால் துவாபரயுகத்தின் கடைசி நூறு ஆண்டுகளுக்குள் இராவண மகாராசா வாழ்ந்துள்ளார் என்பதை காலாங்கிச் சித்தர் கூறியதை போகர் சித்தர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். இராவணனாரின் காலத்தில் நடைபெற்றதைக் காலாங்கிச் சித்தர் குறிப்பிடும்போது 'துவாபரயுகத்தின் செய்திகள் அனைத்தும் கேள்வியுற்றதாக' கூறினார் என்று போகர் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த காலக்கணிப்பின்படி கி.மு.2387ம் ஆண்டு (24ம் நூற்றாண்டு) துவாபரயுகத்தில் வாழ்ந்த இராவணனார் காலமாகினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் காலக்கணிப்புகள் பாளி மொழியிலும் சமஸ்கிருதத்திலும் எழுதப்பட்டுள்ளன.

ஆங்கில காலக்கணிப்பு : 'கி.மு. 1810 ஆண்டுகளில் (கி.மு.19ம் நூற்றாண்டு) இராமர் படையெடுத்து வந்து இலங்கை ஆட்சியைக் கைப்பற்றினார் என்று ஆங்கில வரலாற்று குறிப்புகள்; கூறுகின்றன. கடல்கோள் இடம்பெற்று சில நூற்றாண்டுகளின் பின்னரே இராமரின் படையெடுப்பு இடம்பெற்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

'' இதன்படி கி.மு.19ம் நூற்றாண்டிலிருந்து சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் கடல் கோள் அழிவு ஏற்பட்டுள்ளது. இதன்; காரணமாக இலங்கை நிலப்பரப்பு இந்தியாவிலிருந்து தனியாகப் பிரிந்தது.



'' இலங்கையையும், இந்தியாவையும் பிரித்த கடல் பகுதி ஆரம்பத்தில் ஒரு ஆற்றின் அகலத்திற்கே (பாக்குநீரிணை) அமைந்து இருந்தது என்று ஆங்கில ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

'' காலாங்கி நாதர் சித்தர் கி.மு. 5000 ஆண்டுகளில் வாழ்ந்தவர் என்று தமிழ் காலக்கணிப்பில் குறிப்பிடப்படுகிறது. இவர் சீனாவில் சிலகாலம் தங்கியிருந்தார். அவர் சமாதியடைவதற்காக இந்தியா திரும்பியபோது இலங்கைக் கடற்கரையிலிருந்த இராவணனாரின் சமாதியை தரிசித்தமை பற்றி போகரிடம் கூறியதாக பாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'' போகர் சித்தர் காலாங்கி நாதருடைய பிரதம சி;யராகும். இவர் கி.மு.3000மாம் ஆண்டுகளில் பிறந்தவரென்று தமிழ்க் காலக்கணிப்பில் குறிப்பிடப்;படுகிறது. ஆகவே தமிழ்க் கணிப்புகளின்படி குருவிற்கும் சி;;யனுக்குமிடையில் 2000ம் ஆண்டுகள் இடைவெளிகள் இருக்கின்றன.

''இந்தக் கணிப்புகள் கலியுகத்திற்குப் பொருத்தமானதா?

**(தொடரும்....)**

# இல்லறமென்னும் நல்லறம்




கலைவல்லார் (கலாபூசணம்),
நா.வை. குமரிவேந்தன் (மகேந்திரராசா),
நிறுவநர், இலங்கைக் குமரித் தமிழ்ப்பணி மன்றம்,
மின்பொறியியல் கண்காணிப்பாளர்(ஓய்வு).


## தெய்வம் தொழாள் கொழுநன்

### ஆய்வு நோக்கில்

**த**மிழன் வாழ்வியலில் ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்பதே வள்ளுவப் பெருந்தகை காட்டும் இல்லறமென்னும் நல்லறமாகும். ஒருத்திக்கு ஒருவன்தான் என்று இல்லறத்தாள் கொண்டொழுகுவது போல் இல்வாழ்வானும் நெறிப்பட்டு வாழ்ந்தால் அவன் பெருமையுடையவன் என்பார் பெருநாவலர். பிறன்மனை நோக்காதவனை பேராண்மை மிக்கவன் என்றும் கூறுவார். அன்று புரையோடி இருந்த பெண்களின் பரத்தைத் தன்மைக்குக் காரணமான ஆணின் மேலாண்மையை ஒழிக்க வரைவில் மகளிர் என்னும் அதிகாரத்தையும், பெண்ணின் நிறையைப் பாழடிக்கும் பிறன் மனை செல்ல விழையும் ஆணைத் தடுத்து நிறுத்தப் பிறனில் விழையாமை அதிகாரத்தையும் யாத்தார். இவை ஆணுக்கும் கற்பு அல்லது நிறை வேண்டும் என்னும் கோட்பாட்டை உறுதி செய்வதற்கே ஆகும். இல்லறத்தின் சிறப்பு நோக்கியே இல்வாழ்கைக்குரிய கடமை, பண்புகளை 20அதிகாரங்களிலும், களவுவழி வந்த கற்பு வாழ்வை 24அதிகாரங்களிலும் புரியவைத்தார். ஆனால் துறவறத்திற்கு 13அதிகாரங்களில் மட்டுமே அதன் பண்பு நலன்களைத் துலங்க வைத்துள்ளார். துறவு தம்மை மேம்படுத்துவதற்கு ஆனதாகும். ஆனால் இல்லறமோ துறவறத்தாரையும், ஏனையோரையும் ஓம்புதலையே தலையாய கடமையாய் கொள்வதால் துறவைவிட இல்லறமே மேம்பட்டதென்பார்.

மநுநெறி, சுருமிதி, பகவத்கீதை பெண்ணை இழிந்தவளாக, தீமையின் கொள்கலனாகவே கூறும்(மநு.9சு.17). ஆனால் வள்ளுவரோ இல்லறத்தார் ஒத்த உணர்வினராய் அன்பினால் ஒருவருக்கொருவர் உறுதுணையாய் இருக்கவேண்டும் என்பதற்காகவே வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரம் வைத்தார். இல்லாள் என்றோ மனையாள் என்றோ தலைப்பிடவில்லை. அதுமாத்திரமல்ல கணவன் மனைவிக் இடையிலான அன்பிலா வாழ்வு கொடுவெய்யில் காணப்படும் பாலைவனத்தில் நட்டமரம் துளிர்ப்பதற்கு ஒப்பானதென்பார்(குறள்.78). அன்பும், அறனுமுடைய ஐந்திணை இல்லறத்தையே போற்றினார். மநு.5சு.148இல் பெண்ணானவள் வலிமையற்ற, பலவீனமான, தன்னைத்தான் பாதுகாக்க முடியாதவள் என்பதை சுட்டுகின்றதாம். ஆனால் வள்ளுவரோ:பெண்ணிற் பெருந்தக்க.(கு.54 ) என்றும்,சிறைகாக்கும்

காப்பெவன்(கு.57) என்றும் கூறுவதுஅவள் கற்பென்னும் திண்மை உடையவள் என்பதாலும் உடலை யார் பாதுகாத்தாலும் தன் உள்ளத்தை தானேதான் பாதுகாக்கின்றாள் என்பதை உணர்த்துகின்றார். எனவே எல்லா வகையிலும் அவள் ஆணுக்குச் சமமானவள் என்பார்.இவற்றை எல்லாம் கருத்தில்கொண்டே

**தெய்வம் தொழாள் கொழுநன்**
**தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை**
**(குறள். 55)**

என்று கூறி அவளை இமயத்தின் உச்சிக்கே உயர்த்துகின்றார் வள்ளுவனார். ஒரு கதையாசிரியன், நாடகாசிரியன், அல்லது கவிஞன் தமது ஆக்கங்களை உருவாக்கும் போது கற்பனையுடன் கூடிய உயர்வு நவிற்சியை வெளிப்படுத்தும் வகையிலே படைத்தளிக்கின்றான். உள்ளதைச் சிறப்பித்து உயர்வு நவிற்சியினை அளவாகக் காட்டுவது உண்மைக் கற்பனையென்றும், இல்லாததைப் புனைந்து அளவுக்கு அதிகமாக உயர்வு நவிற்சியினை வெளிப்படுத்துவது வெறும் கற்பனை என்றும் கூறப்படுகின்றது. திருக்குறளில் படைப்புக் கற்பனை, கருத்து விளக்கக் கற்பனை, இயைபுக் கற்பனை, ஏன் வெறுங்கற்பனை போன்றவையை பரக்கக் காணலாம். பகுத்தறிதலுக்கான ஊட்ட வலுவைத் தருவதே உலக மெய்யியலான திருக்குறளின் உட்பொருளாகும். படைப்பாளன்தன் பட்டறிவின்(அனுபவம்) மூலம் கண்ட மெய்மைகளை ஒருசேர இணைத்து ஒருபுதிய நிறைவான வடிவத்தைப் படைத்துக் காட்டுகின்றான். இதை முதுரையில் ஔவையார்:

நல்லார் ஒருவருளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை என்பதும், வள்ளுவரோ:


அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றோ செல்வத்தைத் தேய்க்கும் படைஎன்றும் கூறுவர்.

இங்கு முன்னது பண்பட்ட ஒழுக்க சீலர்களை உருவாக்கவும், பின்னது அரசு செங்கோன்மையுடன் மக்களை ஆளவேண்டும் என்பதையும் வலியுறுத்தும் வெறும் கற்பனையின் சிறப்பு உயர்வு நவிற்சியின் வெளிப்பாடாகும். இதுபோன்றே தெய்வம் தொழாள் . பெய்யெனப் பெய்யும் மழை என்னும் குறளும் தன்கணவனை தெய்வமாய்த் தொழுபவள் (இதுவே கற்பெனக் கொண்டதால்) வானைப்பார்த்து மழையைப் பெய்யென்று சொன்னால் மழை பெய்யுமெனப் பொருள் கண்டனர் பல உரையாசிரியர்கள். இது வெறும் படைப்புக் கற்பனை என்பதை அவர்களால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லைப் போலும். இயற்கைக்கு மாறான, இயல்புக்கு எதிரான, நடைமுறைக்கு ஏற்பற்ற ஒன்றை உண்மையின் உறைவிடம், மெய்யியலின் தந்தை, அறிவின் பகுத்தறிவின் பகலவன், அறிவியலின் ஆசான், மனவளமும் மூளைவளமும் ஒருசேர அமையப்பெற்ற பல்கலை விற்பன்னர், உலகம் உய்ய அறநெறி காட்டிய இமையம், 2000ஆண்டுகளுக்கு முன்னரே பெண்ணிழிவை ஏற்காத பெண்ணியவாதி, தெயவப்பிறவி எப்படித் தன் கணவனைத் தொழுதெழுபவள் மழையைப் பெய்யென்றால் பெய்யுமென்று சொல்லியிருக்க முடியும். தொழுதெழுபவள் என்னும் கூற்றை பெண்ணினம் ஆணுக்கு என்றென்றும் அடிமை என்பதை உறுதிப்படுத்தக் கூறியிருக்க முடியுமா? அல்லது தொழுதெழுதல் தான் ஒழுக்கம் அல்லது பண்பாடு என்று நினைத்துக் குறளை யாத்தாரா? அல்லது இயற்கை(ஊழ்) என்றொன்றில்லை அது அவள் சொல்லுக்குக் கட்டுப்படும் என்று இயற்கையோடு முரண்படுகின்றாரா? இது மந்திரத்தால் மாங்காய் விழுவதுபோல் அல்லவா உள்ளது! சில வேளை காகம் இருக்க பனம்பழம் விழுந்த கூற்றுக்கு ஒப்பாயிருக்கலாம்,ஆனால் இது எப்பொழுதும் நிகழும் ஒரு நிகழ்வல்லவே. எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும்(எத்தன்மைத்தாயினும்) அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு(கு.239,355)என்றும்,எண்பொருள வாகச்செலச் சொல்லித் தான் பிறர்வாய் நுண்பொருள் காண்ப தறிவு (கு.424) என்றும் சொல்பவற்றையும், கேட்பவற்றையும் அளவையியல்(எண்,ஏரணம்,தர்க்கம்) அடிப்படையில் மெய்பொருளை, நுண்பொருளை காணுங்கள் என்பார். ஆனால் கணவனைத் தொழுதெழும்



(கற்புடைப்) பெண் கூறினால் மழை பெய்யும் என வள்ளுவர் கூறுகின்றார் என உரையாசிரியர் கள் கூறுவார்களாயின் அது வள் ளுவன் தவறல்ல உரைகண்டோர் தவறாகும்.

சங்கப் பாடலான கலித்தொ கையில் வான் தரு கற்பினள் என்றும்,அருமழை தரவேண்டின் தருகிக்கும் பெருமையள்; என்றும் கூறுகின்றது. இதுவெறும் படைப் புக் கற்பனையின் சிறப்பு உயர்வு நவிற்சியின் வெளிப்பாடாகும். இது அவளின் ஒழுக்கப்பண்பை மேம்படுத்தவும் அவளைப் பெரு மைப்படுத்தவும் கூறப்பெற்ற கூற்றுக்களேயாகும்.உலகம் உய் யப் புல், பூண்டு, செடி, கொடி, மரம்,புள், ஊர்வன, விலங்கு, மாந்தன்வரை உயிர்வாழ் உயிரி களுக்கெல்லாம் உணவாய், ஊட் டமாய்இருப்பது மழையே(நீரே). திருக்குறளின் வான் சிறப்பு என்ற அதிகாரத்தில் அதன் சிறப்பை விரித்துக்கூறும். வானின்றுலகம் வழங்கி வருதலால். (கு.11) என்ற குறள்போல இல்லாளும் விரும்பிய விரும்பியபடி வாழ்வு நலங்களைத் தருவதால் இவள் அமிழ்தமாய் இருக்கின்றாள். இங்கு அவள் தன் கணவனுக்குப் பிள்ளைகளுக்கு அவளைச் சுற்றியிருக்கும் குமு காயத்திற்கு பெய்யெனப் பெய் யும் மழையாக வாழ்கின்றாள். பருவமழையை எதிர்பார்த்து உழவன் நிலத்தைப் பண்படுத்தி வித்திடுகின்றான், அவன் எதிர் மார்த்தபடி மழையும் பெய்கிறது. இது பருவகாலத்திற்கு மட்டுமே பொருந்தும். ஆனால் இல்லாளோ எல்லாக் காலத்தும் அமிழ்தமழை யாய் பெய்கின்றாள்.தான் வாழும் ஊரையே தன்னுள் அடக்கி விடு கின்றாள். அடக்கத்தின் ஆற்றலாக விரிகின்றாள். பொறுமை அடக் கத்துடன் மாத்திரமல்லாது அவள் வாழும் குமுகாயத்தின் சுமைதாங் கியாக தனது நலன்களை உதறி



வாழ்கின்றாள். இதை திருக்குறள் இல்வாழ்க்கையில் தொடங்கி புகழ் வரையுள்ள அதிகாரங்களில் அழ குற படம்பிடித்துக் காட்டுவார்.

இல் என்பது கூட மனையாளை, இல்லாளை, இல்லக் கிழத்தியைக் குறிப்பது. எனவே இல்வாழ்க்கை என்பது இல்லவளுடன் வாழ்வு, இல்லவன் வாழ்வு எனப் பொருள் படும். இங்கும் பெண்ணுக்கே முதலிடம் தருகின்றார். இல்வாழ் வான் அதாவது மனையாளுடன், இல்லவளுடன் வாழும் ஒருவ னால்த் தான் இல்லற வாழ்வை நல்லறமாக நடத்தமுடியும் என் பார் வள்ளுவர். அன்று தலைவன் மட்டுமே பொருள்தேட செல்ல வேண்டியதால் இல்லாளே தமது பெற்றோரை, பிள்ளைகளை, தூய துறவியரை(துறந்தார்), இல்வாழும் உணவின்றி அல் லல் படுவோரை(துவ்வாதார்), தங்குமிடம், உணவு அற்றோர் (இறந்தார்), தெளிந்த அறிவி னர் (சான்றோர்--தென்புலத் தார்), வாழ்வாங்கு வாழ்பவர் (தெய்வம்), நினையாவேளை வந்த விருந்தினர், உறவினர் (ஒக்கல்), தாம் ஆகியோரை வர வேற்று பணி புரிதலும்,இவற்றைச் சுமையெனக் கருதாது அன்பே உருவாய் முகம் திரிந்து நோக் காது செய்ய விழைபவள் தான் இந்தத் தற்காத்துத் தற்கொண் டான் பேணும் இல்லறத்தாள்.

இளங்கோவடிகளின் சிலப்பதிகா ரத்தில் கூடக் கண்ணகி, மாதவியை விட்டுக் கோவலன் விலகிவந்த போது அவனிடம் மனையறம் பற்றியே குறைபடுகின்றாள். அற வோர்க் களித்தலும், அந்தணர் ஓம் பலும்;, துறவோர்க் கெதிர்தலும், விருந்தெதிர் கொள்ளலும் என்ற வாறாக கொலைக் களக்காதையில் நயம்படக் கூறுவார். அத்தோடு இருமுது குரவர் ஏவலும் பிழைத் தேன் (இருவரின் பெற்றோர்களுக் குச் செய்யவேண்டிய கடமையில் நின்று தவறினேன்) என்பதாகவும் ஒரு இல்லக் கிழத்தியின் உள்ளப் பண்புகளை வெளிக் கொணர்கின் றார் இளங்கோவடிகள். குடும்பத் தலைவன்(தொடர்ந்து) இல்லா தவிடத்தும் மனையறம் பேண முடியாதென்பதையும் இக்கூற்றுக் களால் தெளிவுபடுத்துகின்றார்.

மனைவிக்கு கற்பு என்பதைப் போலவே கணவனுக்கும் நிறை என்பார் வள்ளுவர். கற்புவேறு நிறைவேறு அல்ல இரண்டும் ஒன் றே. இதுவே தமிழர் பண்பாடு.

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின்
உண்டு (கு.974)

ஒருத்திக்கு ஒருவனும், ஒருவ னுக்கு ஒருத்தியும் என்பதுதான் உயர்வொழுக்கம்.இக்குறளை வலுப்படுத்த புலவி நுணுக்கத்தில்

**பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுவுண்பர்**
**நண்ணேன் பரத்த நின்மார்பு**
**(கு.1311)**

அதாவது பெண்ணியல்பு அற்ற வர்கள் உன்னைத் தம் கண்ணால் பார்த்துத் தம்முட் கொள்வதால்

உன் நிறைத் தன்மை(ஒருத்திக்கு ஒருவன்) மாசுபடுவதால் உன்னைச் சேரமாட்டேன் என்று ஊடல் கொண்டு காதலி கூறுவதாக இக்கூற்று அமைந்துள்ளதைக் காணலாம். கற்பு என்னும் சொல் பலவாறு ஆளப்பட்டுள்ளது என்பதை தொல்காப்பியம் முதற் கொண்டு இன்றுவரை காணலாம். தொல்காப்பியம் கற்பெனப்படுவது கரணமொடு புணர. என்றும், ஔவை கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை எனவும் திருவள்ளுவர் கற்பென்னும் திண்மை உண்டாகப் என்றும் விளம்புவர். ஆண் பெண் இணைப்பு( திருமணம்) கரண(சடங்கு) முறையில் செயற்படுத்த வேண்டுமென தொல்காப்பியரும், சொன்ன சொல்லில் உறுதியாய் நிற்றலை ஔவையும், இதையே வள்ளுவர் திண்மை என்றும் செப்புவர். அதாவது உறுதியாய், பலமாய், எதற்கும் முகம்கொடுக்கும் தன்மையையே இது குறிக்கும்.

பாண்டியன் நெடுஞ்செழியன் அவையிலே கோபக் கனல் கிளம்ப புகுகின்றாள் கண்ணகி. தனது கணவன் கள்வனல்லன் என அரற்றி அவை நடுங்க தன் கையில் இருந்த மாணிக்க பரல் பதித்த ஒற்றைச் சிலம்பை அவ்வவையிலே அடித்து உடைக்கின்றாள். மாணிக்கக் கற்கள் சிதறுகின்றன. மன்னன் திகைத்தான். தானே கள்வன் என ஏங்கி இருக்கையில் இருந்து வீழ்ந்து உயிர் விடுகின்றான். இது யாரும் கண்ணகிக்குச் சொல்லிக் கொடுத்த கற்பா? இல்லை இதுதான் வள்ளுவன் சொன்ன கற்பு. தானே தனக்குக் கற்பித்துக் கொண்ட கற்பு.

பெல்சியம் நாட்டுத் தலைநகர் புருக்சேலைஎதிரிகள் படைகள் சூழ்ந்து முற்றுமுழுதாக முற்றுக்கைக்குள் கொண்டுவந்து விட்டன. எதிரிகள் படைத்தலைவன் சிந்தித்தான் முதியோர், பெண்கள், சிறுவர் ஏன் இம் முற்றுக்கையால் இறக்க, துன்புற வேண்டும். எனவே இவர்களை தாம் சுமக்க முடிந்த சுமையோடு வெளியேறி எங்கு போக வேண்டுமென்றாலும் போகப் பணித்தான். பெண்டீர் மனதாற் பேசினர். அடுத்த நாட்காலை சுமக்க முடியாத சுமைகளுடன் வெளியேறினர். இதைக்கண்டு படைத் தலைவன் திடுக்கிட்டான். செய்வதறியாது திகைத்தனர் போர் வீரர். இருந்தும் பெண்களின் துணிவு கண்டு பெருமைப்பட்டான். பகையிலும் பண்புகாத்தான், செ ஏற்காத்தான், போகவிட்டுவிட்டான். பெண்கள் சுமந்தது என்ன தெரியுமா? தம்தம் கணவன்மாரை. எதிரி புகழும் அளவிற்கு துணிந்த மங்கையரை புறக்கணிக்குமா தாய்நாடு! இல்லை ஆண்டுதோறும் தைமாதம் 19 ஆம் நாளை பெண்கள் நாளாக கொண்டாடுகின்றதாம் பெல்யியம் இந்த நிகழ்வை நினைவு கூர்ந்து. இது யார் சொல்லிக் கொடுத்த கற்பு? தாங்களாகவே கற்பித்துக் கொண்ட கற்பு. வள்ளுவர் போற்றிய, காட்டிய, சொன்ன கற்பு.

கி.மு.1800 (இற்றைக்கு3800 ஆண்டுகள்)களில் நாவலம் தேயததுள்;(இன்றைய இந்தியா,பாகிச்த்தான்,இலங்கை, பங்காளதேசம் இணைந்த) புகுந்த விலங்காண்டி நாடோடிகளான வைதீகவேத மரபார் தமிழரின் பண்பாட்டு, வழிபாட்டு நடைமுறைகளை சீரழித்து, இழிவுப் பண்பாட்டையும்(பலமனைவியர்), சிறுதெய்வ(முப்பத்து முக்கோடி), விலங்கு(குரங்கு, யானை, பசு போன்றன) வழிபாட்டையும், பல இழிவுத் தொன்மங்(புராணங்)களையும,; பெண்ணிழிவையும், மொழியிழிவையும், சாதி(தமிழர் சூத்திரர்)ப் பகுப்பையும் உட்புகுத்தினர். தமிழரிடம் இருந்த அறிவியல், வானியல், அணுவியல், மெய்யியல் அதாவது சாங்கியம்,யோகம், உலகாய்தம், சமணம், ஆசீவகம் போன்றவற்றையும் இயல், இசை, நாடக அனைத்து மூல நூல்களையும் மொழிபெயர்ப்புச் செய்தபின் அந்நூல்களை அழித்துவிட்டனர் என்கிறாராம் சென்னை பல்கலைக் கழகப் பேராசிரியராயிருந்த மதுரையைச் சேர்ந்த வடமொழியாளரான சூரிய நாராயண சாத்திரி அவர்கள். இவர் தனது பெயரை பரிதிமாற்கலைஞர் எனத் தமிழாக்கம் செய்தவர். தொடக்கத்தில் மாந்தன் தன்னை உணர வெளிப்பட்ட வேளை இயற்கை வழிபாடே அவனை ஆட்கொண்டது.இதை இருக்குவேதமும், சிலப்பதிகாரப் பாயிரமும் உறுதிசெய்யும். இதற்கு முன் கடவுள் என்றசொல் எங்கும் பயன்படுத்தப் படவில்லை என்பது அறிஞர் கூற்றாயுள்ளது.

பழைய கற்காலமாகிய கி.மு.35000--- 10000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர் நடுவில்பெண் தெய்வ போற்றுதல், வழிபாடு இருந்திருக்க வேண்டுமென்பார் பி.ரி.சீனிவாச ஐயங்கார் தனது இந்தியாவிற் கற்காலம் என்ற நூலில். பெண்கள் சிறப்புற்றிருக்கும் மக்களிடம் தான் பெண்தெய்வப் போற்றுதல் மிகுந்திருக்கும் என்றும் கூறுவார்.தொல்பழம் காலத்தில் பழையோள் வழிபாடு நடைபெற்றிருக்கிறது. காளி, பழையோள் கொற்றவை(கொற்றி, கொத்தி)யின் பணிப்பெண்களாக அல்லது பகுதியாக ஆக்கப் பெற்றனரோ என்று இராசமாணிக்கனார் தமது தமிழக வரலாறு என்ற நூலில் குறிப்பிடுவார். தொன்றுதொட்டு தமிழர்கள் தாய்வழிக் குமுகமாகவே வாழ்ந்தவர்கள், வைதீகவேத மரபார் வருகையால் ஆண்மேலாண்மை தலை தூக்கியது, ஆனாலும் இன்றுவரை இலங்கைத் தமிழர்கள் தாய்வழிக் குமுகமாகவே வாழ்வது பெருமைப் படத் தக்கதாகும். மேற்குலகப் பாணியில் பெண் சமத்துவம் பற்றியும், பெண்ணடிமைத்தனம் பற்றியும் மேற்குலக அரச சார்பற்ற நிறுவனங்களின் பிதற்றல்களை கைக்கூலி வேண்டிக்கொண்டு எம்மவர்களும் பிதற்றுகின்ற

னர். இந்தப் பிதற்றல்களால் எடுபட்ட சிலபெண்கள் அடங்காப் பிடாரித்தனமாகதாங்கள் நினைப்பதை எல்லாம் சரியென்றும், ஆண்களை மேலாண்மை செய்யவும் விரும்புகின்றனர். அரச சட்டங்களும் இவர்களுக்குப் பக்கபலமாய் இருப்பதால் இவர்கள் நினைப்பதை ஆண்கள்மேல் திணிக்க முயன்று அதில் சட்டவாயிலான வெற்றியும் பெறுகின்றனர். இதன் காரணமாய் தன், தனது குடும்ப தன்மானத்தை காக்க ஆண்கள் அடங்கிப்போக வேண்டியவர்களாகவே காணப்படுகின்றனர். இன்னொரு பக்கத்தில் வைதீக வேதமதம் திணித்த ஆண்மேலாண்மையால் சில ஆண் களும் பெண்களுக் கெதிரான வன்முறையில் ஈடுப டுகின்றனர். தமிழர் பண்பாடு,மேற்குறித்த வரத்துப் பண்பாடுகளுக்கு முரணானது, பெண்களுக்கே முதன் மையும், முன்னுரிமையும் வழங்குவது.இன்று பலத மிழ் குடும்பங்கள் தம்பண்பாட்டை, ஒழுக்கநெறியை மறந்தவர்களாக பழிவாங்கும் உணர்வுகளோடு தம்மை இழிவுப் பண்பாட்டில் புதைத்தவர்களாகக் காணப்படுகின்றனர்.சமத்துவம் பேசும் நிறுவனங்கள் 2000ஆண்டுகளுக்கு முன்னரே பெண் இழிவுகளுக்கு எதிராகவும், பெண் சமத்துவத்தைப் பேசிய திருக்குற ளை, சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பரப்புரை செய்வதன் மூலம் அதற்கான ஒரு உயிரூட் டத்தை பெறமுடியும்.

பண்டைய நாட்களில் ஒருபெண் யாரையாவது விரும்பியவளாய் அல்லது திருமணம் அடைந்திருந் தால் பிறை (இயற்கையை வணங்குதல்) தொழு தலைத் தவிர்த்து விடுவார்களாம். ஒருபெண்ணின் மனநிலையை அறிய பிறை தொழக்கேட்பது வழக்க மாய் இருந்திருக்கிறது. அப்படி வர மறுத்தால் அவள் யாரையோ விரும்புகிறாள் என்பதே பொருளாம். கண்ணகி கோவலனை பிரிந்திருந்த வேளை அவ ளைத் தேவந்தி சோமகுண்டம், பரிதிகுண்டம் மூழ்கி காமவேள் கோட்டம் சென்று வணங்கி வந்தால் பிரிந்த கணவன் கூடிய விரைவில் வருவான் என்கின் றாள். ஆனால் கண்ணகி அதைப் பீடன்று(பெருமை யற்றது) எனக்கூறி மறுத்து விடுகின்றாள். எனவே திருமணமானவுடன் அவள் தெய்வ நிலையடைகின் றாள் அல்லது அவள் கணவன் தெய்வமாகின்றான் என்பது தானே பொருள்.

உலக இயங்கியலானது முதற்பொருள்,கருப்பொ ருள், உரிப்பொருள் என்ற முப்பெரும் கூறுகளுள் அடங்குகின்றது. முதற்பொருள் என்பது மாந்தரால் செய்யப்படாததாய், இயற்கையாய் அமைந்திருப் பது. இது நிலம் பொழுது அல்லது இடம் காலம் என இரண்டாகும். இடத்தால் காலமும், காலத்தால் இட மும் தீர்மானிக்கப்படுபவை. இம் முதற்பொருள் வழி யாகக் கருக்கொண்டு தோன்றிய பொருள் கருப்பொ ருள். தெய்வம்,மாந்தன்,விலங்கு, மரம்,புள்,தொழில், பறை, யாழ் போன்றன கருப்பொருள்களாகும். உல கில் வாழ்வாங்கு வாழ்ந்த, வாழுகின்ற பெருமைக்கு உரியவர்களை அவர்களின் கருவிகளை வைத்து, படிமங்கள் வடித்தும், மண்டபம், கோபுரங்கள் அமைத்தும் அவற்றிற்கு மதிப்புச் செய்வதும் இன்று வரையுள்ள நடைமுறையாகும். நாம் நினைக்கின்ற ஒருவரைச் சந்திக்கும்போது கடவுளை, தெய்வத் தைக் கண்டதுபோன்று உள்ளதென குறிப்பிடுவதும் வழக்கமாயுள்ளது. இவர்கள் இறவாப் புகழாளராய் இருப்பதால் காலம் கடந்தும் நினைவு கூறப்படுகின்ற னர். இவையெல்லாம் மாந்தச் சான்றோர்களுக்காக மாந்தரால் உருவாக்கப் பெற்றவை. எனவே கருப் பொருள் என்றார் தொல்காப்பியர்.

**தெய்வம் தொழாஅள் கொழுநன்**
**தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை**
**(கு.55)**

அடுத்த தெய்வம் தொழல் என்ற சொற்கள் திருக்குறளில் என்ன பொருளில் கையாளப்ப டுகின்றன என்பதையும் ஆழ்ந்து நோக்குதல் வேண்டும். எடுத்துக்காட்டாக: வையத்துள் வாழ் வாங்கு(கு.50), தெய்வத்தால் ஆகாதெனினும் (கு.619), யான்என தென்னும் (346), ஐயப் படாஅ (கு.702), தேவரனையர் கயவர் (கு.1073), குடிசெய்வல் என்னும் (கு.1023) போன்ற இக்கு றள்கள் இம்மண்ணுலகில் வாழும் சக மாந்தரையே குறிக்கின்றது.திருக்குறளின் முதலதிகாரத்தை உரை யாசிரியர்கள் கடவுள் வாழ்த்து என்று அல்லது இறைவணக்கம் என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் இப்பத்துக் குறள்களும் இறவாப் புகழாளரை,வாழ் வாங்கு வாழும் சான்றோரையே குறிப்பிடுவதாகும். குறிப்பாக: உலகம் உய்ய, உயிர்ப்படைய பகிர்ந் துண்டு வாழ்பவனை(பகவன்), கல்வி, கேள்விகளில் சிறந்த வாலறிவனை, நடக்கும் போதுகூட தம்காலில் ஒரு எறும்பு தன்னும் நசிந்துவிடாது தாம்போகும் வழியை மயில்பீலி கொண்டு தடவிச் செல்லும் சமணர்கள் போல (மலர்போன்ற) மென்மையான மனமுடையவனை, பற்றறுத்தவனை(வேண்டு தல், வேண்டாமை இலார்), செங்கோல் செலுத்தும் தலைவனை(இறைவன்), ஐம்பொறி இச்சைகளைக் கட்டுப்படுத்தி (ஐந்தவித்தான்) வாழ்பவனை, வாழ் வாங்கு வாழ்பவனை(தனக்குவமை இல்லாதவன்), அறவர்களை(அறவாழி அந்தணர்), அளவையியல் (எண்,ஏரண,தர்க்கம்) முறையில் எண்ணுகின்ற எண் ணற்ற நற்குணம் உடையவன் (எண்குணத்தான்),

முயற்சியாளன்(கு.617) போன்ற உயிருள்ள மாந்தரையே தெய்வமெனச் சுட்டுகின்றார். இங்கு கூறப்படும் பத்தில் ஏழு குறள்களில் தாளென்றும், அடியென்றும் கூறுவது சாதியப் படைப்பில் காலால் பிறந்தவன் சூத்திரனாகிய தமிழன் என்பதால் அவனைப் பெருமைப் படுத்தவே(உடலில் உள்ள அத்தனை உறுப்புக்களுமே முதன்மை ஆனவையாய் இருக்கும்போது தாள்,அடி எனக்கூறுவது கேள்விக்கு உரியதே) முதலதிகாரத்தில் வைத்தார் எனலாம். அன்றைய சுழலில் சாதிய, பெண்ணிழிவுக் கொடுரங்கள் தலைவிரித்தாடிய காலமும் அதற்கெதிராக பௌத்தம், சமணம், ஆசீவகம் போன்ற மதங்கள் தோன்றிய காலமுமாய் இருந்திருக்கிறது.

அடுத்து தொழுதல், வணங்குதல் பற்றிக் குறிப்பிடும்போது கண்மூடி முழுந்தாளில் இருப்பதையோ,காதுகளைப் பிடித்திழுத்து தோப்புகரணம் போடுவதையோ வள்ளுவர் குறிப்பிடவில்லை. அவர் தனது குறள்கள்,கற்றதனால் ஆய (கு.2), கோளில் பொறியில் (கு.9) உழுதுண்டு வாழ்வாரே (கு.1033), தன்னுயிர் தானறப் (கு.268), கொல்லான் புலாலை--(கு.260), இழிவரின் வாழாத (கு.970) போன்றவற்றில் தொழுதலை வாழ்த்துதல், போற்றுதல், பாராட்டுதல், புகழுதல் என்ற பொருளிலேமீயுபயன்படுத்துகின்றார். 1330 குறள்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. எனவே ஒரு குறளுக்குப் பொருள்காணும் போது எனைய 1329 குறள்களுள்ளும் உள்நுழைந்து வெளிவந்தால் தான் அதன் நுண்பொருளை, மெய்ப்பொருளை, உண்மைப்பொருளைக் காணமுடியும். எனவே உலக இயங்கியலுக்கு உயிரோட்டமாய், அச்சாணியாய் இருக்கும் வாழ்வாங்கு வாழும் சான்றோர்களைப் பின்பற்றி, அவர்களைப் போற்றிப் புகழ்ந்து அவர் வழி நடத்தலையே இவை சுட்டுவதாகும்.எனவே

**தெய்வம் தொழாஅள் கொழுநன்**
**தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை**
**(கு.55)**

இங்கு இல்லற இணைப்பினூடாக குடும்பத் தலைவனும், தலைவியும் தெய்வநிலை அடைகின்றனர். அவர்கள் காலை தொடங்கி மாலை வரை பலருக்காகவும் உழைக்கின்றனர். அவர்கள் தங்களுக்கிடையில் எக்கருத்தையும் பகிர்ந்துகொள்ள நேரம் கிடைப்பதில்லை. ஆகையால் அவர்கள் இரவு உறங்கு முன் அல்லது காலை துயிலெழும்போது அன்றைய செயற்பாடுகளுக்காக ஒருவரையொருவர் போற்றிப் புகழ்வது பாராட்டுவது(தொழுதல்) இயல்பான செயற்பாடாய் உள்ளது. எனவே இவர்கள் தம்பெற்றோருக்கு, பிள்ளைகளுக்கு, தாம் வாழும் அக் கு(ச)முகத்திற்கு அவர்கள் விரும்பியதைக் கொடுப்பவர்களாக (பெய்யெனப பெய்யும் மழையாக) வாழ்கின்றனர்(இருமனம் ஒருமித்;த). ஒரு உழவன் குறித்த காலத்தில் தான் பருவமழையை எதிர்பார்த்து பயிரிடுகின்றான் ஆனால் இல்லறத்தார் தம் குமுகாயத்திற்கு என்றும் பெய்யெனப் பெய்யும் மழையாகவே உள்ளனர். இவற்றைப் புரிந்துகொள்ளாது மேலோட்டமாக நுனிப்புல் மேய்வதுபோல் குறளைப் படித்துவிட்டு வள்ளுவன் பெண்ணிழிவு பேசுகின்றான் என்று கூறுபவர்களை என்செய்வது. இது எப்போதோ யார் யாரோ எழுதிய உரைகளை வைத்துக்கொண்டு வக்காலத்து வாங்குவதேயாகும். பொத்தகப் படிப்பாளிகள் என்று காலத்திற்குக் காலம் தோன்றும் தற்குறிகள் சிலர் தமிழை இழிவுசெய்யவும், அதன் இலக்கியங்களை, காப்பியங்களை இழிவுசெய்யவும், அவற்றை யாத்தவர்களை இழிவுசெய்யவும்(பொய் சாதியம் கூறி) பின்னிற்பதில்லை.

**பன்மாயக் கள்வன் பணிமொழியன்றோ நம்**
**பெண்மை உடைக்கும் படை (கு.1258)**

இங்கு கூறப்பட்டது அடிமைக் கூற்றன்று. அவளைப் பாராட்டுகின்ற, புகழ்கின்ற(பணிமொழி) இக்கூற்று இவளைச் சலனப்படுத்தி இயைபடைய வைத்துவிட்டது. ஆகவே தன் கொழுநனைத் தொழுது(போற்றிப் புகழ்ந்து)உறங்கிப் பின் எழுவதாகவும் அல்லது கொழுநன் ஆகிய தலைவன் தொழுத( போற்றிப் புகழ்ந்து) பின் உறங்கி எழுவாள் என்பதாகவும் பொருள் கொள்ளப்படும். இதற்குத் தகுதியுடையவள் பெய்யெனப் பெய்யும் மழைக்கு ஒப்பானவள் என்று தானே கொள்ளவேண்டும்.இதுதானே தமிழர் பண்பாடு.

வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு!! மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!!!








திருமதி. தமயந்தி சிவானந்தன்
ஆசிரிய ஆலோசகர்,
ஹட்டன் கல்வி வலயம்,
ஹட்டன், இலங்கை.


# 'நானே பிரம்மம்'

மனிதனை மனிதனாக வாழ வைப்பது சமயம். மனிதனை தெய்வமாக வாழ வைப்பது சைவசமயம். தோன்றிற் புகழோடு தோன்றுக. என்ற வள்ளுவர் கூற்றை மாற்றி புகழோடு தோன்ற முடியாவிட்டாலும் மற்றவர் புகழ் வாழச் செய்வது சைவம்.

**''பிறந்த நாள்மேலும் பிறக்குநாள் போலும்**
**துறந்தோர் துறப்போர் தொகை''**

உலகில் பிறந்த ஆன்மாக்களின் தொகையும் எண்ணில்லாதவை. இத்தனை எண்ணிலடங்கா ஆன்மாக்களில் மனதில் நின்று நிலைக்கும் ஆன்மாக்கள் தான் எத்தனை? அன்பால் எம்மை ஈர்த்த விரல் விட்டு எண்ணக் கூடியவர்களையே உலகம் என்றும் நினைவு கூறும்.

இதனையே இருக்கு வேத மகாவாக்கியங்களுள் ஒன்றான 'அகம் பிரம்மாஸ்மி' குறிப்பிடுகின்றது. அதாவது 'ஆன்மாவே பிரம்மம்' என்பதே அது. எம்முள்ளே பிரம்மம் இருக்கும் போது நாம் ஏன் கடவுளை உலகமெங்கும் தேட வேண்டும்?

**''செங்கணானும் பிரமனுந் தம்முளே**
**எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலர்**
**இங்குற் றேனென்றி லிங்கத்தே தோன்றினார்**
**பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே''**

வானத்து தேவர்களான திருமால், பிரம்மா இருவரும் ஆணவம் கொண்டு தேடிய இறைவன் அவர்கள் கண்களுக்கு இறுதிவரை காட்சிக்கொடுக்கவில்லை. ஆனால் அன்பான அடியவர்களுக்கு இறைவன் நேரிலே காட்சி தந்த சந்தர்ப்பங்கள் ஏராளம்! எம்முள் இருக்கும் பிரம்மத்தை வெளியே கொண்டு வருவதையே இறைவனும் விரும்புகின்றார்.

'பிறர் துன்பத்தில் பங்குகொள்' இது எமது சமயம் கூறும் சிந்தனை. கண்முன்னே ஒருவன் பசித்திருக்க நாம் வயிறு நிறைய உண்பது முறையா? 'யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி' என்கிறது திருமந்திரம். ஒரு கைப்பிடி உணவை பகிரும் போது மனதார வாழ்த்தும் உயிர்கள் எத்தனை? எத்தனை?

**உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று**
**உடம்பினை யான் இருந் தோம்புகின்றேனே.**

இவ் உயிர் பிரிந்த பின் வெறும் சடம் என உடம்பை இழுக்காக நினைத்திருந்தேன். ஆனால் இவ் உடம்பிலே இறைவன் குடிகொண்டிருக்கின்றார். இறைவன் கோயில் கொண்டிருக்கும் இவ் உடம்பைக் கொண்டு பிறர் பயன்படும் எத்தனை நற்செயல்களை நாம் மேற்கொள்ள முடியும் என்று அறிந்த பின் இவ் உடம்பை பெருமையாக நினைக்கின்றேன் என்கிறார் திருமூலர்.

இதனையே 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்' என்கிறோம். இத்தனை பெருமைமிக்க நாம் சிந்தனை சொல், செயல் என்பவற்றையும் சிறப்பாக செய்ய வேண்டியவர்கள் தானே எம்முள் இருக்கும் சாத்வீக பண்புகளை வெளிக்கொணர்ந்து நானே பிரம்மம் என்பதை காட்டத் தயங்குகின்றோம். இத்தனை புனிதமான உடம்பைப் பெற்ற நாம் இதுவரை மேற்கொண்ட மிருகங்களைவிட மோசமாக செய்த செயல்களை நினைத்து வெட்கப்பட வேண்டும்.

அழும் ஒருவரின் கண்ணீரைத் துடைக்க வாய் வார்த்தைகள் போதாதா? கீழே விழுந்த ஒருவரைத் தூக்கி எழுப்ப கைகள் போதாதா? பிறருக்குதவ பொருள் பண்டம் தேவையில்லை மனதில் இடமே தேவை இதுவே 'எண்ணம் போல் வாழ்வு' என்கிறோம்.

நீரில் மூழ்கி உயிருக்கு போராடும் ஒருவரை காப்பாற்ற நினைக்காமல் கைப்பேசியில் படம் எடுக்கும் மனிதர்களும், சப்பாத்து காலால் கழுத்தை நெரித்து உயிரை எடுக்கும் மனிதர்களும் வாழும் உலகில், மனிதப்பண்பே அல்லாத மனிதர்களிடம் தெய்வீகப் பண்பை எங்கே எதிர்ப்பார்ப்பது?

மேலும் எதிர்ப்பார்ப்புடன் உதவி செய்பவர்கள் பலர். இறைவன் தனக்கு அன்பாய் ஒரு பச்சிலையை வைத்தாலே போதும் என்று கீதையில் குறிப்பிடுகின்றார். ஆடம்பரமாக இறைவனுக்கு வாரி வழங்குபவர்கள் கண்ணெதிரே பாலுக்கு அழும் குழந்தையை கண்டுக் கொள்வதேயில்லை. எம்பெருமான் தாயினும் நல்ல தலைவர். தாயை இழந்த பன்றிக் குட்டிகளுக்காக தாய்பன்றியாக மாறி பால் கொடுத்தவர். செம்மனச் செல்விக்காக கூலியாளாக மாறி பிரம்படிப்பட்டவர். இவ்வாறு இறைவனே உயிர்களுக்காக தன் நிலையில் இருந்து இறங்கி வரும் பொழுது மனிதர்களான நாம் மனிதப் பண்புகளை வெளிக் கொணர வேண்டாமா?



கன்மம், பிறவிப்பயன், மறுபிறப்பு என்பவற்றில் நம்பிக்கை கொண்ட நாம் அரிதாக கிடைத்த மானிடப் பிறவியில் செய்ய வேண்டியவற்றை தவறவிட்டுள்ளோம். வரப்புயர நீர் உயர்வது போல் எண்ணங்கள் உயரும் போதே நாம் உயர்வோம்.

மரம் நிறைய கனி இருக்கும் போது காயை உண்ண அவசியமில்லை. அதுபோல அன்பு, கருணை, ஈகை, ஜீவகாருண்யம், பக்தி, ஒப்புரவு, வாய்மை என எண் நிறைந்த விழுமியங்கள் இருக்கும் போது தீயவை நாட அவசியமில்லை.

கொரோனா எனும் கண்ணுக்கு தெரியாத வைரஸ் எமக்கு நிலையாமை எனும் பாடத்தை அழகாக புகட்டியபின்பும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பாமல், ஈயாமல் வாழ்வது வேதனைக்குரியதே. எமது சமயம் கூறும் வேத, ஆகம, புராண, இதிகாச, தர்மசாஸ்திர கருத்துக்கள் அனைத்தும் எம்முள் இருக்கும் பிரமத்தை வெளிக்கொணரவே வாய்ப்பு வழங்கியுள்ளன. எம்மால் இயலுமானவரை ஏனைய உயிர்களையும் உயிர்களாக மதிக்கமனம் கொள்வோம்.

**வாழும் காலத்தில் பூமியில் தெய்வப் பண்புகளோடு வாழ்ந்தால் வானுறையும் தெய்வத்துள் போற்றப்படுவோம்.**
**அகம் பிரம்மாஸ்மி, அன்பே சிவம்**




# கொரோனா தொற்று ஊரடங்கின்போது வீடுகள் பாதுகாப்பானவையா?

உலகம் முழுவதும் பரவியிருக்கும் கொரோனா தொற்றினால் பெரும்பாலான நாடுகள் சமூக ரீதியாகவும்இ ஒருவரிடம் இருந்து பிறர் விலகி இருப்பதற்குமான சூழலுக்கு வழிவகுக்கும் வெவ்வேறு வகையான ஊடரங்கு உத்தரவுகளை அமுல்படுத்தி உள்ளன.

பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் அரசின் உத்தரவின்படி உலகம் முழுவதும் முடப்பட்டிருக்கின்றன. பணியாளர்கள் பெரும்பாலும் வீட்டில் இருந்து பணியாற்றி வருகின்றனர். பெண்கள், சிறுமியர், பாலியல் சுரண்டலுக்கும், மோசமாக நடத்தபடுவதற்கும் மேலும் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்கின்றனர். 2014-ம் ஆண்டு எபோலா நோய் தொற்றின் போது மேற்கு ஆபிரிக்க நாடுகளில் இதுபோல ஊரடங்கு உத்தரவுகள் அமல்படுத்தப்பட்டன. பணியிடங்கள் முடப்பட்டன. பள்ளிகள், கல்லூரிகள் முடப்பட்டிருந்தன. இதனால், அங்கு பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான பாலியல் கொடுமைகள், வன்முறைகள் அதிகரித்ததாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. சியரா லியோன் நாட்டில் பணியாற்றும் தன்னார்வ நிறுவனங்களின் கூற்றின்படி, வீடுகளில் இருந்த சிறுமிகள், இளம்பெண்கள் பெரும் அபாயங்களை சந்தித்தனர். பாலியல் தாக்குதல், பாலியல் வன்கொடுமைகளால் பெண்கள் இளம் வயதில் கர்ப்பம் அடைவது அதிகரித்தது என்பது தெரியவருகிறது. ஒட்டும்மொத்தமாக ஒரு ஆண்டுக்குள் பாலியல் வன்கொடுமைகள் 40 சதவிகிதம் அளவுக்கு அதிகரித்தன.



திருமதி.
பவானி சற்குணசெல்வம்
(நெதர்லாந்து)

2018-ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படிஇ உலகம் முழுவதும் வீடுதான் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத இடமாக மாறி வருகிறது என்று தெரியவந்துள்ளது.

உலக சுகாதாரப் பணியாளர்களில் 67 சதவிகிதம் பெண்கள். இயல்பாகவே அவர்கள் தொற்றால் பாதிக்கப்படக் கூடிய சூழலில் இருக்கின்றனர்.



ஆண்களை விட பெண்கள் மூன்று மடங்கு அதிக சம்பளம் பெறாத சுகாதாரப்பணிகளால் சுமையாக உள்ளனர். இந்தச் சுமை ஊடரங்கு காலத்தின் போது இது பன்மடங்காக அதிகரிக்கும். ஒருவரின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தக்கூடிய கடுமை யான ஊடரங்கின்போது, பெண்கள் மோசமாக நடத்தப்படுகிறார்கள். உடல் ரீதியாக, பாலியல், உணர்வு ரீதியாக மிக மோசமாக பாதிக்கப்படும் அபாய சூழலுக்கு பெண்கள் தள்ளப்பட்டிருக்கி றார்கள்.

## சர்வதேச ஊடரங்கும் வீடுகளில் அதிகரிக்கும் வன்முறை சம்பவங்களும்

உலக அளவில் மேலும், மேலும் அதிகமான நாடுகள் ஊரடங்கு உத்தரவுகளை அமுல்படுத்தி யிருக்கும் சூழலில்இ அந்தந்த நாடுகளில் உள்ள பெண்கள் நல மையங்கள், பெண்கள் உதவி மையங்களுக்கு வரும் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை தொடர்பான புகார்கள் அதிக ரித்திருக்கின்றன. சீனாவில் உள்ள ஹூபே மாநி லம் முதல் பிரேசில் வரைஇ பிரான்ஸ் முதல் இங் கிலாந்து வரை, அனைத்து பகுதிகளிலும் உள்ள நாடுகள்இ பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்திருப்பது குறித்து கவனத்தில் கொண் டுள்ளன. சீனாவில் உள்ள, வூஹான் மாநிலத்தில் உள்ள ஹூபேயில்தான் கொரோனா வைரஸ் முதன் முதலில் தாக்கத் தொடங்கியது. இங்கு பிப் ரவரி மாதம் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. அந்த மாதத்தில் மட்டும் வீடுகளில் உள்ள பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மூன்று மடங்கு அதிகரித் திருக்கிறது. கடந்த ஆண்டு இதே மாதத்தில் அங்கு 47 பேர்தான் வீட்டு வன்முறையில் பாதிக்கப்பட் டிருந்தனர். இந்த ஆண்டு அது 162 ஆக அதிகரித் திருக்கிறது. உள்ளூர் தன்னார்வலர்களின் தகவ லின்படி, இதில் 90 சதவிகித நிகழ்வுகள் என்பது, கொரோனா தொற்றால் நடைமுறைக்கு வந்த ஊரடங்கின்போது நடந்தவை என்று தெரிய வரு கிறது. பிரேசிலில் அரசு நடத்தும் பெண்கள் பாது காப்பு மையங்களுக்கு வருவோரின் எண்ணிக்கை 40-50 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. கட்டலோ னியா முதல் சைப்ரஸ் வரை உள்ள ஐரோப்பிய நாடுகளில் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்மு றைகள் தொடர்பான உதவி எண்களுக்கு வரும் அழைப்புகள் எண்ணிக்கை 20-30 சதவிகிதம் அதி கரித்திருப்பது தெரியவந்திருக்கிறது. ஸ்பெயினில் ஊரடங்கு உத்தரவு மிகக் கடுமையான வகையில் பின்பற்றப்படுகிறது. ஊரடங்கு உத்தரவை கடை பிடிக்காதவர்களுக்கு அதிக அபராதம் விதிக்கப்பட் டது. வலென்சியாவில்இ பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைகள் குறித்த புகார்கள் பதிவாகி இருக்கின்றன. பிரான்ஸ் நாட்டில் மார்ச் 17-ம் தேதி முதல் ஊரடங்கு அமுல்படுத்தப்படுகிறது. அது முதல் 30 சதவிகிதத்துக்கும் அதிகமான வீட்டு வன்முறை தொடர்பான நிகழ்வுகள் குறித்து புகார் கள் வந்துள்ளன என்று அந்நாட்டின் வெளியுற வுத்துறை அமைச்சர் கூறுகிறார். பாரீசில் மட்டும் இத்தகைய நிகழ்வுகள் 36 சதவிகிதம் அதிகரித் துள்ளன. இங்கிலாந்தில், தேசிய ஹாட்லைன் தொலைபேசிக்கு கடந்த வார இறுதியில் 65 சதவி கிதத்துக்கும் அதிகமான அழைப்புகள் வந்துள்ளன. ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்தபோதிலும், பாதிக்கப்படும் பெண்கள் போலீஸில் உதவி கோர வும்இ அவர்கள் வீடு பாதுகாப்பானது இல்லை என்று உணர்ந்தால் அரசின் உதவியை கோரவும் செய்யலாம். அவர்களுக்கு உரிய உதவிகள் செய் யப்படும் என்று அமைச்சர் ப்ரீத்தி பாட்டீல் கூறி இருக்கிறார்.

சில நாடுகளில், பூட்டப்பட்டதிலிருந்து வீட்டு வன்முறை அறிக்கைகளின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளது. எனவேஇ கொரோனா வைரஸுக்கு எதிரான போராட்டத் தின் ஒரு முக்கிய பகுதியாக பங்குதாரர் துஷ்பிர



யோகத்தை சமாளிக்க ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குடரெஸ் விரும்புகிறார்.

கொரோனா நெருக்கடியின் போது வீட்டு வன்முறை அடிக்கடி நிகழ்கிறது. பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் குறித்து கடுமையான கவலைகள் உள்ளன. எடுத்துக்காட்டாகஇ கடந்த வாரம் மாணவர்களும் பெற்றோர்களும் ஒரு ஆன்லைன் பாடம் கற்பிக்கும் போது ஒரு ஆசிரியர் சம்பந்தப்பட்ட வீட்டு வன்முறை சம்பவத்தால் திடுக்கிட்டார். விஷயங்கள் சீராக நடக்காத குடும்பங்களில் தனிமைப்படுத்தலின் போது பதட்டம் அதிகமாக இருக்கும்.

வீட்டு வன்முறை உணர்ச்சி சிக்கல்களுக்கு வழிவகுக்கும். மக்கள் பெரும்பாலும் அவமானத்தையும் குற்ற உணர்ச்சியையும் அனுபவிக்கிறார்கள், அதாவது பாதிக்கப்பட்டவர்கள் உதவி பெற நீண்ட நேரம் எடுக்கும். குழந்தைகள் தங்களுக்குள்ளும் மற்றவர்களிடமும் நம்பிக்கையை இழக்கலாம், உறவுகளில் நுழைவதில் சிரமம் இருக்கலாம் மற்றும் பாலியல் தொடர்பான சிக்கல்களை அனுபவிக்கலாம். பாதிக்கப்பட்டவர்கள் பலமுறை உறவுகளில் வன்முறையை அனுபவிக்கும் அபாயம் உள்ளது என்பது அறியப்படுகிறது.

## இந்திய ஊரடங்கின்போது குடும்ப வன்முறையின் தாக்கம்

‘உலகளவில், வெள்ளம், பூகம்பங்கள் அல்லது யுத்தம் என பேரழிவு காலங்களில் வன்முறை அதிகரிக்கிறதுஇ இந்த சூழ்நிலையில், கவலைகள் அனைத்தும் ஆழமாகின்றன. மிகப்பெரிய வேலை இழப்பு உள்ளது; பலவீனமான ஒருவர் மீது விரக்தியை வெளிப்படுத்தும் வாய்ப்பு உள்ளது, ஒரு ஆணாதிக்க சமுதாயத்தில் ஆண்கள் தங்கள் விரக்தியை பெண்கள் மீது காட்டுகிறார்கள். இந்தியாவில், மார்ச் மாதத்தில் வீட்டு வன்முறை தொடர்பாக 291- புகார்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக தேசிய பெண்கள் ஆணையம் தெரிவித்துள்ளது. இப்போது இ-மெயில் வழியாக மட்டும் புகார்கள் பெறப்படுகின்றன. தன்னார்வ நிறுவனங்கள்இ தன்னார்வ அமைப்புகள் வைத்திருக்கும் உதவி எண்களுக்கு பெண்கள் கொடுமைப்படுத்துவதாக வரும் அழைப்புகள் முன் எப்போதையும் விட குறைவாக இருப்பதாக தெரியவந்துள்ளது. பெரும்பாலான தன்னார்வலர்கள்இ இந்த உதவி முகாம்களுடன் தொடர்புடைய வல்லுநர்கள்இ கீழ்மட்ட அளவில் வீட்டு வன்முறை தொடர்பான நிகழ்வுகள் தொடர்பான விழிப்புணர்வுப் பணிகளில் ஈடுபடுபவர்களின் கருத்து என்பதுஇ பெண்களை தொந்தரவு செய்பவர்கள் வீட்டிலேயே இருப்பதால்இ பெண்கள் தனியாக வந்து புகார் தெரிவிப்பது என்பது குறைந்திருக்கிறது என்று அச்சம் தெரிவிக்கின்றனர். நடமாட்டம் குறைக்கப்பட்டிருப்பதுஇ பாலியல் ரீதியிலான வன்முறை மீது போலீசாரின் அக்கறையின்மைஇ துஷ்பிரயோகத்தில் இருந்து அவர்களை காப்பாற்றக்கூடிய வழிகளைக்கூட பெண்கள் இழக்கின்றனர். சில தீவிரமான நிகழ்வுகளில் மரணம் கூட ஏற்படலாம்.

வீட்டு வன்முறையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ், வீட்டு வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கான முதல் பாதுகாவலராக போலீஸார் இல்லை. வன்முறை தடுப்பு ஆலோசனை மையங்கள்தான் பாதிக்கப்பட்டு புகார் அளித்த பெண்களை அணுகக் கூடியவர்களாக இருக்கின்றனர். ஊரடங்கு உத்தரவின் காரணமாக, இந்த சேவைகளும் கிடைக்காமல் இருப்பது, தேவைப்படும் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போவது அவர்களுக்கு ஆபத்தானதாகும். ஹரியானாவில் பாலியல் தொல்லைகளால் பாதிக்கப்படும் பெண்களுக்கு உடனடி மருத்துவ உதவிகள் அளிப்பதற்கான சுகூன் என்ற மையங்கள் மகளிர் மருத்துவ மையங்களுக்கு அருகேஇ அமைக்கப்பட்டன. ஆனால் இந்த மையங்களும் இப்போது மூடப்பட்டுள்ளன. அபாயமான சூழல்களில் இருந்து பெண்களைப் பாதுகாக்க விரைவாக அவர்களை மீட்க, நேரடியான மாற்று எச்சரிக்கை முறை இந்தியாவுக்கு அவசியத் தேவையாகும். உ.பி-போலீஸார் அவசர உதவி எண் 112-ஐ அறிவித்துள்ளனர். இது வீட்டு வன்முறை தொடர்பாக புகார் அளிக்கும் உதவி எண் அல்ல. வன்முறை குற்றங்கள் தொடர்பாக எச்சரிக்கைத் தகவல்கள் அனுப்பக் கூடிய எண் என்று சொல்கின்றனர்.



இந்த நிலையில் வீட்டில் இருக்கும் ஆண்களை மனைவிகள் கொடுமை செய்வதாகவும் அதனால் ஆண்களை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு ஆண்கள் பாதுகாப்புச் சங்கத்தின் தலைவர் வக்கீல் டி.அருள்துமிலன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமிக்கு கடிதம் எழுதியிருக்கும் அவர், கொரோனா என்ற கொடிய வைரசுக்கு பயந்து மரண பீதியில் உலக மக்கள் அனைவரும் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கிறார்கள். இதனால், வீட்டில் அடைபட்டு கிடக்கும் ஆண்களின் நிலை பரிதாபமாக உள்ளது. குடும்ப வன்முறை உடல் ரீதியாக மட்டுமின்றி, மன ரீதியாகவும் ஆண்களை ஆட்டிப்படைக்கிறது. பெண்களுக்கு ஆதரவான சட்டங்களை காட்டிஇ ஆண்கள் பலர் தங்களது மனைவிகளால் மிரட்டப்படுகின்றனர். அடிமைப் படுத்தப்படுகின்றனர். உண்மை நிலை இவ்வாறு இருக்கஇ குடும்ப வன்முறையில் ஈடுபடும் ஆண்கள் உடனடியாக கைது செய்யப்படுவார்கள் என்று டி.ஜி.பி.இ ரவி வெளியிட்டுள்ள அறிக்கை ஆண்களுக்கு கடுமையான வேதனைகளை தருகிறது. சொந்த வீட்டில் உணவுக்காக ஆண்கள் கையேந்தும் நிலையில் உள்ளனர். பலர் மனதளவில் மனைவிகளால் கொடுமைப்படுத்தப்படுகின்றனர். நிராயுதபாணியாகவும்இ குடும்ப வன்முறை குறித்து புகார் கொடுக்க முடியாமலும், பல ஆண்கள் வெளியில் சொல்லமுடியாத இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். ஆனால், தேசிய மகளிர் ஆணையம், தமிழ்நாடு மகளிர் ஆணையம் ஆகியவை இந்த ஊரடங்கு காலத்தில் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை அதிகரித்துள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ளன. ஆண்கள் எதிர்கொள்ளும் குடும்ப வன்முறைகளை முறையிடவே இடமில்லாத சூழலில்இ இந்த அறிக்கை ஒருதலைபட்சமானதும் கண்டிக்கத்தக்கதும் ஆகும். எனவே கொரோனா எனும் கொடும் வைரசைவிடஇ குடும்ப வன்முறையால் அதிகம் பாதிக்கப்படும் ஆண்களை பாதுகாத்திடவேண்டும். குறைந்தபட்சம் ஆண்களின் பிரச்சினைகளைத் தெரிவிக்கஇ ஒரு தொலைபேசி எண் சேவையை அரசு உடனடியாக தொடங்கவேண்டும். புகாரின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும். ஆண்களை பாதுகாக்க ஆண்கள் ஆணையமும் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**ஊரடங்கின்போது பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அரசுக்கு பரிந்துரைகள்**

ஐநா பொதுச்செயலாளர் அன்டோனியோ குடரெஸ், உலகம் முழுவதும் வீட்டு வன்முறை அதிகரித்திருப்பது, அதிர்ச்சிதரக்கூடியதாக இருக்கிறது. உலகம் முழுவதும் உள்ள அரசுகள், கொள்கைகளை அமுல்படுத்தும்போது, இந்த பிரச்சினை குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்று கூறி உள்ளார். பிரான்ஸ் நாட்டின் பாலின சமத்துவத்துக்கான அமைச்சர், பாதிக்கப்படும் பெண்கள் தங்குவதற்காக 20இ000 ஹோட்டல் அறைகள்இ பெண்கள் எளிதாக புகார் அளிக்கும் வகையில் மளிகைக்கடைகளில் பாப்-அப் கவுன்சிலிங் மையங்கள் அமைக்க நிதி உதவி அளிக்கப்படும் என்று கூறி உள்ளார். அதே போல ஸ்பெயினில் பாதிக்கப்படும் பெண்கள், மருந்துகடைகளுக்குச் செல்லும்போது மாஸ்க் 19 என்ற மறைமுக குறியீட்டு வார்த்தையைக் கூறினால் உடனே எச்சரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தன்னார்வலர்கள் உதவியுடன் அவர்கள் மீட்கப்படுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.



## இப்போதைய சூழலில் அரசுக்கான பரிந்துரைகள்

அரசானது மிகவும் ஒடுக்கப்பட்டோர் உட்பட ஒவ்வொருவக்கும் இப்போதைய சிக்கலான சூழலில் தேவையான தகவல்களை பெறுவது, ஆதரவு முறைகள் மற்றும் வளங்களை பெறுவது பாகுபாடற்ற அணுகுமுறையை மேற்கொள்வது, மனித உரிமையை உபயோகிப்பது சிக்கலானதாகும்.

அத்தியாவசிய சேவைகளுக்கான உதவி எண்களை மாநில அரசுகள் அறிவிக்க வேண்டும். ஊடரங்கின்போது அவை தொடர்ந்து செயல்படுவதாக இருக்க வேண்டும். தயாராக இருக்கும் சேவைகள், வளங்கள் பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டும். பாலியல் ரீதியான பாகுபாடு குறித்த வன்முறை தகவல்களை பரப்ப வேண்டும்.

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சட்ட உதவிஆலோசனை இருப்பிட உதவி உள்ளிட்டவை அளிக்கும் தன்னார்வ அமைப்புகள் வீட்டு வன்முறைகளில் பாதிக்கப்படுவோரை பாதுகாக்க உடனடியாக செயல்படும் அமைப்புகளுக்கான வளங்களை அதிகரிக்க வேண்டும். தொடர்ந்து அவர்கள் செயல்படுவதை முன்னெடுக்க வேண்டும்.

வீடுகளில் இருக்கும் வேலைகளை சரி சமமாக பகிர்ந்து மேற்கொள்வதை ஊக்குவிக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு தொடர்பில்லாத அதே நேரத்தில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்குத் தேவைப்படும் பரிசோதனைகள் மருத்துவம் தொடர்பான ஆராய்ச்சிகள், சுகாதார சேவைகள் தொடர்பான பொருட்களை தொடர்ந்து அளிக்க வேண்டும்.

இந்த சிக்கலான தருணத்தில், தாய்வழி சுகாதார சேவைகள், பாதுகாப்பான முறையில் குழந்தை பிறப்பதற்கான அறுவை சிகிச்சை உட்பட பெண்களுக்கு ஒருங்கிணைந்த பாலின மற்றும் இன பெருக்க சுகாதார சேவைகள் சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

வைரஸ் தொற்றைத் தடுப்பதற்கு ஊடரங்கின் போது தனிப்படுத்தப்பட்டு பொதுமக்கள் வீட்டுக்குள் இருப்பதற்கான கால அவகாசம் நீடிக்கப்படலாம் என்று தெரிகிறது. மத்திய மாநில அரசுகள் அதிகரித்து வரும் வீட்டு வன்முறை நிகழ்வுகளை உடனடியாக கவனித்து தடுக்க வேண்டும். பொதுவாக நாம் எல்லோரும் நம்புவதுபோல, வீடு என்பது பெரும்பாலான பெண்களுக்கு பாதுகாப்பானதாக இல்லை. பெண்களின் வாழ்க்கை என்பது, அவர்களுக்கான அவசரகால உதவி சேவைகள் தொடர்ந்து இயங்குவதில்தான் இருக்கிறது.



# 'கயிலை பயணம்'



எழுத்தாளர்
**துலாஞ்சன்**
உதவிப் பிரதேச செயலாளர்,
வெருகல்

**சீ**னாவின் எல்லைக்குட்பட்ட திபெத் பகுதியில் அமைந்திருக்கும் 'திசே' எனும் ஒரு மலை தான் நமது புராணங்களில் 'கயிலை' என்று போற்றப்பட்ட மலை. சைவம், பௌத்தம், சமணம், திபெத்திய பொன் சமயம் நான்கிலும் முக்கியமானது இம்மலை. பொன் சமயத்தவருக்கு உலகத்தின் அச்சு. சைவத்தில் சிவனது உறைவிடம். பௌத்தநூல்கள் சொல்லும் மகாமேரு. சமணரின் தீர்த்தங்கரர் இடபதேவர் முக்தியடைந்த அஷ்டபத கிரி, எல்லாம் இதுதான். சிந்து நதியும் பிரம்மபுத்திரா முதலிய ஆறுகளும் இம்மலையடிவாரத்தில் அமைந்துள்ள மானசரோவர் ஏரியில் தான் ஊற்றெடுக்கின்றன.

இந்தியாவிலிருந்து பயணிப்பது என்றாலே, விசேட அனுமதி பெற்று விமானத்தில் நேபாளம் போய், அங்கிருந்து இப்பகுதிக்குச் செல்ல வேண்டும். இந்தியாவிலிருந்து செல்ல சாதாரணமாக 2000 அமெரிக்க டொலர் செலவு செய்யவேண்டுமாம். மிகக்கடுமையான பயணம் அது. எந்தவித வசதிகளுமற்ற பனிப் பிரதேசம். உயரம் அதிகம் என்பதால் மூச்சுத்திணறல், சுவாசப்பிரச்சினைகள் ஏற்படும். யாத்திரை செல்லும் முதிர்ந்த பலர் அங்கேயே மரிப்பதுண்டு.



இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலேயே இப்படி இருக்கும் இந்த மலைக்கு, அந்தக்காலத்தில் பயணப்பட்டார் ஒரு மனிதர். வயது எழுபதைத் தாண்டிவிட்டது. தமிழகத்திலிருந்தே கால்நடையாகச் சென்றார். கேட்கவும் வேண்டுமா? கல்லும் மண்ணும் அடர்ந்த வரண்ட காட்டுப்பாதை. கால் தேய்ந்தால் என்ன, கையால் நடப்பேன், கை தேய்ந்தால் நெஞ்சால் நடப்பேன், நெஞ்சும் தேய்ந்தால் ஊர்ந்தாவது போவேன், என்னும் வைராக்கியம். உடல் கேட்கவில்லை. பல இடங்களில் தடுமாறி விழுந்தார். சாப்பாடில்லை. தண்ணீரில்லை. உடம்பில் சிராய்ப்புக்காயங்கள். தோலெல்லாம் உரிந்துவிட்டது. கண்ணெல்லாம் இருட்டி வந்தது. முடியவில்லை.



அறிவுமயங்கி கீழே விழுந்துவிட்டார்.

கண் விழித்தபோது இன்னொரு வயோதிபர் தனக்கு பணிவிடை செய்துகொண்டிருப்பதைக் கண்டார். அவர் கொடுத்த தண்ணீரை திணறியபடி அருந்தி மீண்டார். விடாய் அடங்கியிருந்தது. உடம்பில் ஓரளவு தெம்பு திரும்பியது போலிருந்தது. இவருக்கு நன்றி கூறிவிட்டு புறப்பட முயன்றார்.

**''எங்கு செல்கிறீர்?''**

**''கயிலைக்கு.''**

**''இந்த வயதிலா?''**

**''ஏன் போகக்கூடாதா?''**

**''இல்லை மோசமான பாதை''**

**''அது தெரியும்''**

**''ஏற்கனவே களைத்து விழுந்து விட்டீர்''**

**''இதோ, எழுந்து விட்டேன் தானே?''**

**''ஐயா, சொன்னால் கேளும். உம்மால் கயிலைக்குப் போகமுடியாது''**

**''போக முடியாவிட்டால் போகும் வழியிலேயே செத்து விழுகிறேன்''**

**''உம் மீது அக்கறையில் தான் சொல்கிறேன்''**

**''உம் அக்கறைக்கு நன்றி''**

**வயோதிபர் புன்னகைத்தார்.**

**''சரி. சொல்லும், ஏன் கயிலைக்குப் போகிறீர்?''**

''இதென்ன கேள்வி. அங்கே என்னப்பனும் அம்மையும் அழகுற அமர்ந்திருக்கும் காட்சியைத் தரிசிக்கத்தான்'' அவர் கண்கள் கசிந்தன.

''சரி. நம்புகிறேன். நீர் கட்டாயம் கயிலையைக் காண்பீர். அதற்கு முதல் களைப்புத் தீர கொஞ்சம் ஓய்வெடுத்துவிட்டுச் செல்லும். நான் உமக்கு ஏதாவது உண்பதற்கு தயார் செய்கிறேன்.''

''உமக்கு கடன்பட்டிருக்கிறேன். ஆனால் நேரத்தை வீணாக்க நான் தயாரில்லை. புறப்படுகிறேன்''

''சரியான பிடிவாதக்காரர் நீர், ஓய். ஓய்வெடுக்கவேண்டாம். அருகில் ஒரு தடாகம் இருக்கிறது. குளித்துவிட்டாவது புறப்படுகிறீரா? உடல் களைப்பாவது தீரும்.''

இவர் யோசித்தார். குளித்தால் கொஞ்சம் நன்றாகத் தான் இருக்கும். அப்படியே நடந்து குளத்தில் இறங்கினார். குளிர்ந்த நீர் முதிர்ந்த உடலை மெல்ல நடுங்கச்செய்தது. உடலிலிருந்த காயங்கள் எல்லாம் தீப்பட்டது போல் எரிந்தன. சிவசிவ என்றபடியே நீரில் மூழ்கினார். உடல் குளிரத் தொடங்கியது. கண்கள் சொக்கிக்கொண்டு வந்தன.

மூச்சுத்திணறுவதை உணர்ந்து திடுக்கிட்டு விழித்து மேலே வந்தவர் திகைத்துப்போனார். ''இது எந்த இடம், எங்கு நிற்கிறேன் நான்? என்னை குளிக்கச்சொன்ன முதியவரைக் காணவில்லையே? ஆ! இது ஐயாறு, திருவையாறு சிவன் கோவில். இங்கெப்படி நான் வந்தேன்?''

இப்படி அதிர்ந்தவர் தன்னை மேலும் கீழும் பார்த்தார். உடல் மீண்டிருந்தது. காயங்களின் தடத்தைக் கூடக் காணவில்லை. அதிசயமாக இருக்கிறது. ஒருவேளை கனவேதும் கண்டபடி இந்தக் குளத்தில் விழுந்துவிட்டேனோ!

வியப்புடன் சுற்றுமுற்றும் பார்வையை செலுத்தினார். இனிமையான அதிகாலை. இப்போது



தான் விடிய ஆரம்பித்திருக்கிறது. கோவில் இளவெயிலில் மெல்ல தெளிந்துவந்தது. பறவைகளின் ஓசை. விடிவதை அறியாத சுவர்க்கோழியின் சத்தம். சில அடியவர்கள் வந்து குளத்தில் இறங்கி தாமரைமொட்டுக்களைப் பறித்து குடத்தில் நீரள்ளி கோவில் நோக்கி

நடந்துசென்றார்கள். ஏதோ முடிவுக்கு வந்தது போல் குளத்திலிருந்து வெளியேறி அவர்களுக்குப் பின்னால் நடக்கத் தொடங்கினார். இவர்

தூரத்தே ஒரு பிளிறல், திரும்பிப் பார்த்தால் கோவில்யானைகள் இரண்டு மெல்ல அசைந்தாடி வந்துகொண்டிருந்தன. ஆண் யானை, பிடியானை மீது மெல்ல முட்டியது. பிடி விலகி கோபத்துடன் உறுமியது. களிறு மீண்டும் செல்லமாக முட்டியது. பின் அதன் மீது அன்போடு தும்பிக்கையைப் போட்டது. பிடி செவிச்சுளகுகளை வீசி மெல்ல முனகியது.

யானைகளின் குறுக்கே ஓடியது ஒரு பெட்டைக்கோழி. அதைத் துரத்திக்கொண்டு வந்தது ஒரு சேவல். கொக்கரக்கோ என்று அது கூவ, கோழி கொக்கொக் என்று மறுத்தபடி வேகமாக நடந்தது. விர்ரென்று கிறீச்சிட்டபடி இரு பறவைகள் வானில் தோன்றின. அண்ணாந்து பார்த்தால் குயில்கள். குளத்தின் கரையிலிருந்த வில்வ மரத்தின் ஒரு கிளையில் ஊடலுடன் ஒரு குயில் அமர, மற்றையது அடுத்த கிளையில் அமர்ந்து கூவியது. ''கூ...!'' வசந்தத்தின் கீதம்.

மரத்தின் கீழே கொடியில் காயப்போட்ட வெண்ணிறத்துணிகள் இரண்டு பறந்தன. என்ன அது? ஓ, அன்னங்கள். இரு அன்னங்கள் ''அழகாக நடக்கிறோம், இல்லையா?'' என்று இடையை அசைத்து கேட்டபடி நடந்து மெல்ல குளத்தில் இறங்கின. குளத்தின் அக்கரையில் ''மாயோன்'' என்று அகவியது ஆண்மயிலொன்று. அருகே அவன் தோழி மண்ணைத் தோண்டி எதையோ கொத்தி உண்டுகொண்டிருந்தாள். ''நான் அருகில் இருக்க என்ன தீனி வேண்டிக் கிடக்கிறது உனக்கு'' என்று தோகைவிரித்து சிலிர்த்தாடினான் அவன். அவள் அவனைக் கவனிக்கவேயில்லை. நிலத்தைக் கிளறுவதில் மும்முரமாக இருந்தாள்.

அவர்களின் தலைக்கு மேலால் பறந்த இரு அன்றில் பறவைகள் கீச் என்றபடி வேகமாக வந்து கரையிலிருந்த கோரைப்புதரில் புகுந்து மறைந்தன. உறுமியபடி அந்தப்பக்கம் குளத்தில் நீர்குடிக்க வந்தன காட்டுப்பன்றியும் அதன் துணையும். அதனருகே கலைமானும் அதன் பிணையும் 'ம்?' என்றன. எங்கிருந்தோ வந்து குளத்தில் இறங்கிய ஒரு நாரைச்சோடி 'பேக்!'' என்றபடி நீரில் பாய்ந்தது. ''கீக்கீ!' என்று அவற்றுக்குப் பதிலளித்தபடி அடுத்த மரத்தில் சிரித்தன இரு கிளிகள்.

மிக அருகே ''ம்பா'' என்று கேட்ட சத்ததைக் கேட்டு அவர் பதறி விலகினார். அது ஒரு மாடும் பசுவும். கனிந்த கண்களால் அவரைப் பார்த்து நாக்கைச் சுழற்றி மூக்கைத் துடைத்தது எருது. பசு அதனருகே குனிந்து ''ஹ்ரூம்'' என்றது. இரண்டும் அவரை விலகி நடந்து குளக்கரையை நெருங்கின.

ஒவ்வொன்றாகப் பார்த்து வந்தவருக்கு உள்ளே எதுவோ அதிர்ந்தது. மயங்கிக்கிடந்த தன்னை மீட்டு தண்ணீர் தந்த வயோதிபரின் கள்ளமற்ற விழிகள் நினைவில் எழுந்தன. ''இதென்ன கேள்வி. அங்கே என்னப்பனும் அம்மையும் அழகுற அமர்ந்திருக்கும் காட்சியைத் தரிசிக்கத்தான்'' என்று தான் சொன்னதும், அவர் சிரித்து ''சரி. நம்புகிறேன். நீர் கட்டாயம் கயிலையைக் காண்பீர்.'' என்று சொன்னதும் இவர் மூளையில் பளிச்சிட்டன. உடல் முழுதும் மெல்லிய பரவசம் பரவியது. ஆ! இதுதான் கயிலை! இதுதான் கயிலை! நான் எதற்கு அவ்வளவு தூரம் செல்லமுயன்றேன்? கண்டுகொண்டேன்! இதுவரை கண்டறியாததைக் கண்டுகொண்டேன்! என் அப்பனே, என் அம்மையே, இத்தனை அருகிலா இருந்தீர்கள்



நீங்கள், தெரியாமல் போய் விட்டதே எனக்கு!

பெரியவர் உருகினார். அவர் கண்களில் ஆனந் தக்கண்ணீர் வடிந்தது. அதற்குள் வந்திருப்பது யாரென்று அந்தப்பகுதியில் உலவியவர்களுக் குத் தெரிந்துவிட்டது. எல்லோரும் கைகூப்பி யபடி ஓடிவந்தார்கள். அவர் கண்களை மூடி குரலை சுருதிகூட்டினார். கிழக்கே எழுந்த சூரிய னின் முதற் கிரணம் அவர் மீது விழுந்ததில் முதிய குரல்வளை ஏறி இறங்குவது தெரிந்தது. உதடு கள் மெல்ல அசைந்தன. வந்துவிழுந்தன சொற் கள் 'மாதர் பிறைக்கண்ணியானை மலையான் மகளோடும் பாடி' பாடிமுடித்ததும் கூடியிருந்த வர்கள் நெகிழ்வுடன் கைகூப்பினார்கள்' நமோ பார்வதீபதயே! அரகர மகாதேவா! அப்பரே போற்றி! தம்பிரான் அடிகளே போற்றி!'

இப்படியாக, சைவத்தின் சமய நாற்குரவர் நால்வரில் ஒருவரான அப்பரடிகள், கயிலைக் குச் செல்ல திட்டமிட்ட பயணம், திருவையாறு நோக்கித் திருப்பப்பட்டு அவர் அங்கு மாதர் பிறைக்கண்ணி யானை என்று தொடங்கிப் பாடிய பதினொரு பாட்டுகளுக்கும் கயிலைப்ப திகம் என்று பெயர். இந்தப் பாடல்கள் எல்லா வற்றிலுமே ஒரு கவித்துவ அழகு உண்டு.

இந்த எல்லாப் பாடல்களுமே சந்திரனைக் கண் ணியாகக் கொண்டவன் என்று தொடங்குகின் றன. மாதர்ப்பிறை (அழகான பிறை), போழிளம் (இளம்பிறை), எரிப்பிறை (ஒளிரும் பிறை), ஏடுமதி (இளம்பிறை) என்றெல்லாம் அவை சந்திரனை வர்ணிக்கின்றன. கண்ணி என்றால் ஆண்கள் தலையில் அணியும் பூமாலை. சிவன் தலையில் இளம்பிறையே கண்ணியாக விளங்கு கிறது என்று பாடுகிறார் அப்பர்.

இரண்டாம் வரிகள் எல்லாம் சிவன் உமை யோடு இருப்பதைப் பாடுகின்றன. மலையான் மகளொடும் பாடி, பூந்துகிலாளொடும் பாடி, ஏந்திழையாளொடும் பாடி, என்று பலவாறு வருகின்றது. பதினொரு பாட்டின் எல்லா ஐந் தாம் வரிகளும் கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன் என்று முடிகின்றன. இதற்கு முன்பு தான் அறியாத ஏதோவொன்றைத் தான் கண்டுவிட்டேன். அப்படிக் கண்டதால் அவர் திருப்பாதம் கண்டேன் என்று பொருள். சிவன் தலையில் அணிந்த பிறையைப் பாடுவ தில் தொடங்கி பாதங்களைப் பாடுவதில் முடியும் இப்பாடல் கேசாதிபாதம் எனும் பிற்கால சிற்றி லக்கிய வகைக்கு அடிப்படை. தெய்வங்களை உச்சி (கேசம் தலைமுடி) முதல் உள்ளங்கால் (பாதம்) வரை வர்ணிப்பது தான் கேசாதிபாதம். பிற்காலத்தில் பாதத்திலிருந்து தலை வரை மாறிப் பாடும் வழக்கமும் ஏற்பட்டது. அதற்கு பாதாதி கேசம் என்று பெயர்.

பதினொரு பாடல்களிலும் கேசாதிபாதம் பாடும் அப்பர், ஈசனுடன் இணைபிரியாதிருக்கும் உமை யவளையும் பாடுகிறார். இப்படி இருவரையும் அடி முதல் முடி வரை கண்ணாரக் கண்டுவிட்ட தால், கண்டறியாதன கண்டுகொண்டேன் என் கிறார் அவர். அப்படி என்ன கண்டறியாததைக் கண்டுவிட்டார் அப்பர்?

இதற்கான பதில் ஒவ்வொரு பாட்டிலும் நான் காவது வரியில் வருகின்றது. ஒவ்வொரு பாட் டிலுமே ஒவ்வொரு விலங்குச்சோடி பாடப்ப டுகிறது. நாம் மேலே பார்த்த களிறும் பிடியும், சேவலும் கோழியும், அன்னமும் பேடும், இப்படி பதினொரு விலங்குகளின் இணையைப் பார்த்த தைத் தான் கயிலையில் சிவனுமையைக் கண்ட தாகப் பாடுகிறார் அப்பர்!

ஒன்றோடு ஒன்று தொடர்புகொண்ட, ஆனால் முற்றாக மாறுபட்ட இரண்டை இறைவனின்



உருவமாகக் காணும் மரபே சைவமரபு. மணிவாசகர் மெய்மையும் பொய்மையும் ஆயினாருக்கு, சோதியுமாய் இருள் ஆயினார்க்கு, இன்பமும் துன்பமும் ஆயினார்க்கு என்று முரண்களின் இருமையாகவே இறைவனைப் பாடுவார். சிவனும் உமையுமே கூட முரண்களின் இருமை தான். அவன் ஆண், அவள் பெண் அவன் சிவப்பு, அவள் கறுப்பு; அவன் நெருப்பு அவள் நீர். அந்த இருமையைத் தான் அப்பர் பாடுகிறார். யானைச்சோடி, அன்னச்சோடி, கிளிச்சோடி என்றெல்லாம்.

வீட்டில் முடங்கியும் முடங்காமலும் கிடக்கும் இந்தக் காலத்தில் இறைவன் என்பதை முரண்களின் இருமையாகத் தான் நாமெல்லாம் உணர்ந்திருப்போம். இதுபோல சோர்வான, வெறுக்கத் தக்க, அசாதாரணமான சூழலை நாம் இதற்குமுன் கடந்ததில்லை. ஆனால் இதுபோலவே மகிழ்வான, கொண்டாட்டமான, பூரிப்பான காலமெதையும் கூட நாம் கடந்ததில்லை. இறைவனின் அடியையும் முடியையும் ஆனானப்பட்ட பிரம்மா விஷ்ணுவாலேயே காணமுடியாது என்பது ஐதிகம். ஒன்றை ஒன்று நிரப்புகின்ற - ஒன்றாலொன்று ஆன இயற்கையின் ஆண்பெண் இருமையில் சிவசக்தியைக் கண்டுகொண்ட அப்பர், அடிமுடி கண்டதாக உரிமைகோருகிறார். கயிலையைக் கண்டேன், கண்டறியாதன கண்டுகொண்டேன் என்று மகிழ்ந்தாடுகிறார்.

தமிழ்ப்பக்தி மரபில் அப்பரின் கயிலைப்பதிகம், முக்கியமான புரட்சி. கயிலைக்கெல்லாம் புறப்பட்டுக் கடவுளைத் தேடி நீ போகத் தேவையில்லை. நம்மைச் சுற்றி இருக்கும் ஒவ்வொரு உயிர்ச்சோடியுமே சிவனுமை தான். நாம் வாழும் இடமே கயிலை தான் என்ற மகத்தான தரிசனம் இடம்பெற்ற பாடல் அது. எத்தனை மனமுடைந்திருந்தாலும், மனதுக்குப் பிடித்தவர் அருகில் இருக்கிறார் என்று கற்பனை செய்துகொள்வதே சில சந்தர்ப்பங்களில் நாம் மீண்டுகொள்ளப் போதுமானது. கடவுளே நம்மருகில் இருக்கிறான் என்று எண்ணிக்கொள்வது? அவனது இடத்தில் இப்போது நாம் இருக்கிறோம் என்று எண்ணிக் கொள்வது?

அந்த மகிழ்ச்சியைத் தருவது இந்தக் கயிலைப் பதிகம். ஈஷாவின் தேவார இசைத்தொகுதியில் வெளியான மாதர்ப்பிறைக்கண்ணி இப்போது யூடியூப்பில் காட்சி விழியமாக தரவேற்றப்பட்டிருக்கிறது. பார்த்து மகிழுங்கள். வீட்டுக்குள்ளேயே அடைபட்டிருந்தாலும் நாம் கவலைப்பட ஒன்றுமில்லை. நாம் கயிலையில் இருக்கிறோம்.

சிவனுமையின் கண்காணிப்பின் கீழ் இருக்கிறோம் என்ற சிந்தனையே மகிழ்ந்தாட வைக்கும். இன்னும் கொஞ்சநாள் தான். பழையபடி மீண்டுவிடுவோம். ஏனென்றால் நாம் என்றும் இருப்பது கயிலையில். எங்கெங்கும் இருக்கும் சிவசக்தியின் அருகில்.

**கண்டேனவர் திருப்பாதம்,**
**கண்டறியாதன கண்டேன்!**

# எரித்தாலும் சரி புதைத்தாலும் சரி

**இ**றந்த ஒருவரின் உடலை இடு காட்டுக்குஅல்லது சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்ல முற்படும்போதே அவ்வுடலுக்கு இனி மேல் ஒருபெறுமதியும் இல்லைஎன்பது அர்த்தமாகின்றது. அவ்வாறு இருக்கையில் அந்த உடலை எரித்தால் என்ன? புதைத்தால் என்ன? இந்தக் கேள்வியை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே எழுப்பியுள்ளார் ஒருசங்கத் தமிழ்ப் புலவர்.

பாண்டி நாட்டில் ஒருசிற்றூரை ஆண்டு வந்த நம்பி நெடுஞ்செழியன் சற்று வயது முதிர்ந்த நிலையில் வீட்டில் இறந்துவிடுகின்றான். தமது தலைவனது உடலை எவ்வாறு அடக்கம் செய்வது என்று ஊரவர்கள் கூடி ஆலோசிக்கின்றார்கள்.



**கலாநிதிபால. சிவகடாட்சம்**

அப்பொழுது அங்குவருகின்றார் 'பேரெயில்முறுவலார்' என்னும் சங்கத் தமிழ்ப்புலவர்.பேரெயில் முறுவலார் நம்பிநெடுஞ் செழியனை ஒருபோர் வீரனாகமட்டுமல்லாது, ஒரு பாசமிக்க கணவனாகவும் ஒருசான்றோனாகவும் நன்குஅறிந்தவர். அவர்கூறுகின்றார். ஒருமங்கைக்கு மாலையிட்டு மணம் முடித்தவன். தோட்டத்தில் அவளுக்குப் பூச்சூடி மகிழ்ந்தவன். நறுமணம்மிக்க சந்தனத்தைத் தனக்குப் பூசிக் கொண்டவன். எதிரிகளை ஒழித்தவன். நண்பர்களை உபசரித்தவன். வலியவர்கள் என்பதற்காக எவரையும் வழிமொழிந்த தில்லை. எளியவர் என்பதற்காக எவரையும் இகழ்ந்தது மில்லை. உதவிகேட்டு எவரிடமும் அவன் சென்றதில்லை. உதவிகேட்டுவந்தவருக்கு இல்லையென்று சொன்னதுமில்லை.

அரச சபையிலே தனது பெரும்புகழை நிலை நாட்டியவன். படையெடுத்து வந்தவர்களை எதிர்கொண்டவன். எதிரிகளைப் புறங்கண்டவன். அதிவேகமுடைய குதிரைகளைச்செலுத்தியவன். நீண்டவீதிகளில் நெடுந்தேரை விடுத்தவன். யானைமேற்பயணித்தவன்.

குடம் நிறைந்தமதுவை அருந்தியவன். பாடிவந்தபாணர்களின் பசியைப் போக்கியவன். போலிஉபசாரவார்த்தைகளைப்புறக்கணித்தவன். இவ்வுலகில் செய்ய வேண்டியதெல்லாம் செய்து முடித்தவன். இனிமேல் இவனது தலையை நீங்கள் புதைத்தால்என்ன? எரித்தால் என்ன? உங்களுக்குத் தோற்றியவாறு செய்யுங்கள்

**தொடியுடைய**
**தோள்மணந்தனன்**
**கடிகாவிற்பூச்சூடினன்**
**தண்க மழுஞ்சாந்து நீவினன்**
**செற்றோரை வழிதபுத்தனன்**
**நட்டோரை உயர்பு கூறினன்**
**வலியரென வழிமொழியலன்**
**மெலியரெனமீக்கூறலன்**
**பிறரைத் தான் இரப்பறியலன்**
**இரந் தோர்க்கு மறுப்பறியலன்**
**வேந்துடை அவையத்து ஓங்குபுகழ்தோற்றினன்**
**வருபடைஎதிர்தாங்கினன்**
**பெயர்படைபுறங்கண்டனன்**
**கடும்பரியமாக்கடவினன்**
**நெடுந்தெருவில் தேர் வழங்கினன்**
**ஓங்கு இயற்களிறு ஊர்ந்தனன்**
**தீஞ்செறிதசும்பு தொலைச்சினன்**
**பாண் உவப்பப்பசி தீர்த்தனன்**
**மயக்குடைய மொழிவிடுத்தனன்ஆங்குச்**
**செய்ப எல்லாம் செய்தனன் ஆகலின்**
**இடுகஒன்றோ ! சுடுகஒன்றோ**
**படுவழிப்படுக, இப்புகழ்வெய் யோன்தலையே!**
**புறநானூறு239**

வாழும்போதுதான்செய்யவேண்டியகருமங்களையெல்லாம்



**ஈமத்தாழி Burial urn**



**தகனம் Funeral pyre**

குறைவின்றிச் செய்துமுடித்து, தன்மான மிக்க தலைவனாக மட்டுமன்றி மனிதாபிமானம் மிக்கச ான்றோனாகவும் வாழ்ந்து காட்டி, என்றுமேஅழி யாத புகழுடம்பு பெற்று விட்ட ஒருமனிதனுக்கு மண்ணோடு மண்ணாகக் காற்றோடுகாற்றாகக் கலந்து விடப்போகும் உயிரற்றஅவனது உடலை அடக்கம் செய்யும் முறை எந்தவகையில் பெருமை யையோ சிறுமையையோ ஏற்படுத்தக் கூடியது என்பதே இப்புலவரின் கேள்வி. எக்காலத்துக்கும் உரிய அறிவுபூர்வமான கேள்வி.

# Burn him or Bury him

When the body of a deceased person is being carried to the burning or burial ground it is already acknowledged that the corpsehas no value anymore. Is there any point of debating about whether to burn or bury the body? This question has been raised by a Tamil poet two thousand years ago.


NambiNeduncheliyan, the chief of a village in the Pandya country passed away peacefully at home. His villagerswere discussing the last rites of their beloved leader including whether to burn or bury his body. At that time a respected poet arrives at the scene. The poet knew the chief not only as a courageous soldier, but alsoasa loving husband and an exemplary gentleman. This is what he had to sayabout the dilemma facing those gathered at the scene:

He wedded a girl wearing bangles
adorned her with flowers in the garden
anointed himself with fragrant sandal paste
defeated his enemies and hailed his friends
neither seconded the powerful
nor discredited the feeble
neither asked for help from anyone
nor failed to help those in need
excelled in the king's court
faced the enemies who came
chased the invaders out
rode the fastest horses
travelled on highways in chariot
drove around on tall elephants
enjoyed drinking sweet wine
relieved the hunger of bards
and made them happy
avoided confusing talks
had done everything he had to do, whether you
bury him or burn him, it is up to you

PereyilMuruvalar : Purananuru 239



# இலிங்க பூமி -2

**இலிங்க பூமியிலிருந்து தமிழ்நிதி அருணா செல்லத்துரை**


இலங்கையின் பல பகுதிகளில் இலிங்க வழிபாட்டின் அடையாளமாக தொல்லியல் சின்னங்களாக இலிங்கங்கள் காணப் படுகின்றன. கருங்கல்லில் வடிவமைக்கப் பட்ட இலிங்க வடிவத்தை இறைவனாக நினைந்து வழிபாடு செய்தது என்பது அருவமாயிருக்கும் கடவுளை நினைத்து வழிபடுவதற்கு சமமான ஒன்றாகும். இலிங்க வழிபாடு ஆரம்ப காலத்தில் இருந்தது என்பதும், உருவ வழிபாடு பின்னர் அறிமுகம் செய்யப்பட்டது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது.



உருவ வழிபாட்டிற்கு அடிகோலியவர்கள் நாகர்களாகும். இவர்களை கடவுளை உருவாக்குபவர்கள் (Creators of God) என்று எழுதப்பட்டுள்ளது. நாகர்களுக்குள் இருந்த ஓவியர் மற்றும் சிற்பிகள் என்ற பிரிவினர் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளதாக வரலாறு தெரிவிக்கின்றது.

புராதன காலத்தில் அடங்காப்பற்று-வன்னி;யில் இருந்த இலிங்க ஆலயங்கள் இயற்கை அழிவுகளினாலும், கோதாரி, கொள்ளை, மலேரியா போன்ற நோய்கள் பரவியபோது மக்கள் இடம் பெயர்ந்திருந்த காரணத்தாலும், நிலப்பரப்பு காடுகளாக மாறின. பிற்காலத்தில் ஆய்வாளர்கள் ஆய்வுகளைச் செய்ய முற்பட்டபோது காடுகள் பரவலாக இருந்த காரணத்தினால் பெருநிலப் பரப்பை ‘காடு’ என்றும், அதன் ஒத்த கருத்து ‘வனம்’ என்றும் வனம் என்ற சொல்

மருவி 'வன்னி' என்று அழைக்கப்பட்டது என்று கூறுவாரும் உண்டு.

பிற்காலத்தில் ஆய்வுகளைச் செய்தவர்கள், இந்தப் பிரதேசம் முழுவதும் காடு (வனம்) என்று அனுமானித்து வரலாறுகள் எழுதியுள்ளதை காணக்கூடியதாகவும் இருக்கின்றது. அதனால் உண்மையான வரலாறு வெளிவராமல் போய்விட்டது என்ற விடயம் கவலைக்குரியதாகும். ஆனால் புராதன காலத்தில் இருந்து பெருநிலப் பிரதேசத்தில் மக்கள் வாழ்ந்ததிற்கான தொல்லியல் அடையாளங்கள் உள்ளன. இவற்றை ஆய்வு செய்தபோது இந்தப் பிரதேசத்தில் இலிங்க வழிபாட்டுத்தலங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டதாக இருந்ததை காணக்கூடியதாக இருக்கின்றது.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் இந்தப் பிரதேசத்தில் மக்கள் வலுக்கட்டாயமாக மதமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டனர். இதனால் மக்கள் தத்தமது சமயங்களை கடைப்பிடிக்க பயப்பட்டுள்ளனர். அத்தோடு தலைமைப் பதவிகளுக்கு ஏற்பட்ட போட்டிகளினால் நடந்த அரசியல் கலவரங்கள் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்திருந்தனர். இதன் காரணமாக கிராமங்கள் மற்றும் குளங்கள் ஆலயங்கள் ஆகியன பராமரிப்பு இல்லாமல் கைவிடப்பட்ட நிலைக்கு உள்ளாகின. 1895ம் ஆண்டு ஜே.பி.லூயிஸ் அவர்கள் எழுதிய வன்னிக் கைநூலில் இந்த விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. தொடர்ந்து பெருநிலப் பரப்பில் இருந்த இலிங்க ஆலயங்கள் பற்றிய விபரங்களைப் பார்ப்போம்.

**பாணன்கமம் (பனங்காமம்):** துவாபரயுகத்தில் இலங்கையின் மேற்குக் கரையில் இருந்த மாதோட்டம் பிரிவில் இராவண மகாராசாவின் ஆட்சி இடம்பெற்றுள்ளது. அவருடைய இராஜதானி 'லங்கா நகரி' என்று அழைக்கப்பட்டதாக ஒட்டக்கூத்தர் எழுதிய இராம காதையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனித குலத்தினர் லங்காநகரிக்கு எதிராக யுத்தம் நடத்தியபோது யுகமாற்றம் ஏற்பட்டுவிட்டது என்ற காரணத்தினால் மானிட குலத்தைச் சேர்ந்த இராவண மகாராசா சமாதியிருந்தார். இதனால் இராவண மகாராசாவின் ஆதரவாளர்களான இயக்கர் மற்றும் நாகர்கள் அங்கிருந்து வெளியேறி மாதோட்டத்திற்கு கிழக்கேயிருந்த நிலப்பரப்பில் குடியேறி இருந்தனர். இயக்கர் நாகர் குடியேறியிருந்த பெரியகமம் ஒன்றில் பஞ்ச இலிங்க ஆலயம் கட்டப்பட்டிருந்தது.

**01.படம் : பஞ்ச இலிங்கேஸ்வரர் புதிய ஆலயம்**



மாதோட்டத்தில் (இலங்காபுரம்) இராவணனாருடைய தம்பி விபீஷணனுடைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் ஆட்சி செய்து வந்தனர். அவர்களில் ஒருவர் முன்னிலையில் தென்னிந்தியாவிலிருந்து வந்த பாணன் ஒருவர் யாழ் வாசித்து பரிசில்கள் பெற்றமை வரலாற்றில் குறிப்பிடப்படுகிறது. இயக்கர் நாகர் கட்டுப்பாட்டில் இருந்த பெரியகமமும், மணற்றிடல் ஒன்றும் பரிசில்களாக வழங்கப்பட்டுள்ளன. பாணனுக்கு பெரியகமம் வழங்கப்பட்ட காரணத்தினால் இராவணனாருடைய ஆதரவாளர்களான இயக்கர் மற்றும் நாகர்கள் அங்கிருந்து வெளியேறி தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று குடியேறினர் அவர்கள் குடியேறிய பகுதிகள் கிழக்கு மூலை மேற்குமூலை என அழைக்கப்பட்டுள்ளன.

பாணன் தனக்குப் பரிசாக கிடைத்த பெரியகமத்தை; இராஜதானியாக மாற்றினார். அதன் பின்னர் பெரியகமம் 'பாணன்கம இராஜதானி' என்று அழைக்கப்பட்டது. தற்போது பாணன்கம இராஜதானி (பனங்காமம்) மாந்தை கிழக்குப் பிரிவில் உள்ளது. பாணன்கமம் என்ற பெயர் வரலாற்றுக்கான முக்கிய ஆதாரமாகும்.

கிழக்கு மூலை, மேற்குமூலைப் பிரிவுகளில் குடியேறியிருந்த இயக்கர்களும்; நாகர்களும் பாணன்கம இராஜதானிக்கு எதிரிகளாக மாறியிருந்தனர். தமது நிலத்தை மீட்பதற்காக நீண்ட காலம் தொடர்ச்சியான பல போராட்டங்களை அவர்கள் நடத்தியுள்ளமை வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண இராஜதானியை பாணன் உருவாக்கிய காரணத்தால் பாணன்கமமும், யாழ்ப்

பாண இராஜதானியின் கீழ் கொண்டு வரப்பட்டது. மேற்கே இருந்த லங்காநகரி இராஜதானியில் இருந்த வைஷ்ணவ சமயத்தை தழுவியிருந்த விபீஷணனுடனும் பாணன்கம இராஜதானியுடனும் இயக்கர் நாகர் நடத்திய போராட்டங்களில் அநேகர் உயரிழந்தபோதும், கிழக்குமுலை மேற்கு மூலையில் இருந்த இயக்கர் நாகர்களை அடக்குவதற்கு முடியாமல் போனது. லங்கா நகரி இராஜதானிக்கும் பாணன்கம இராஜதானிக்கும் அடங்காமல் இருந்த இந்தப் பிரதேசம் 'அடங்காப்பற்று' என அழைக்கப்பட்டது. தொடர்ந்து பாணன்கமம் இராஜதானி யாழ்ப்பாண இராஜதானிக்கு கீழ்ப்பட்டதாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. விஜயன் வருகையின் பின்னர் எழுதப்பட்ட வராலறுகளில் லங்கா நகரி என்பது பாளி மொழியில் இலங்காபுரம் என அழைக்கப்பட்டுள்ளது.

தமிழ் வரலாறுகளில் இலங்காபுரம் இராஜதானி என்பது அனுராதபுரம் இராஜதானி எனக் குறிப்பிட்டுள்ளமை, பிற்காலத்தில் பல வரலாற்றுக் குழப்பங்களை ஏற்;படுத்தியதோடு பாரிய பிரிவினைகளுக்கும் காரணமாக அமைந்தது. இதற்கு தமிழ் வரலாற்றாசிரியர்களே முக்கிய காடரணிகளாக இருந்தமை கவலைக்குரிய விடயமாகும்.

இயக்கர்களும் நாகர்களும் தமக்குச் சொந்தமான பெரியகமத்திலிருந்து (பாணன்கமம்) வெளியேறியபோது தாம்கட்டியிருந்த பஞ்ச இலிங்க ஆலயத்திலிருந்து இரண்டு இலிங்கங்களை எடுத்துச் சென்றுள்ளனர். அவை குஞ்சுக் குளம் மற்றும் சாளம்பைக்;குளம் ஆகிய இடங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடுகள் இடம் பெற்றுள்ளன. இதற்கென சிறிய அளவிலான கருங்கல் ஆலயங்களும் கட்டப்பட்டிருந்தன. இவை பற்றிய தகவல்களும் வரலாறுகளும், வெளிவராது இருந்தாலும், கைவிடப்பட்ட இலிங்கங்கள் சான்று பகருகின்றன.

சாளம்பைக் குளம் : வவுனியா - கல்மடு வீதியில் சாளம்பைக் குளம் என்ற கிராமம் இருக்கின்றது. பாணன்கமத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட இலிங்கம் சாளம்பைக் குளத்தின்; வலது கரையில் இருந்த கிராமத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இதற்கென கருங்கல் தூண்களினால் ஆலயம் ஒன்றும் கட்டப்பட்டு வழிபாடு இடம்பெற்றுள்ளது. கி.பி. 1783 களில் ஒல்லாந்த கப்டன் தோமஸ் நாகெல் அவர்கள் இந்த இலிங்கத்தை சேதப்படுத்தியபோது இலிங்கத்தின் மேல்பகுதி மட்டும் தனியாக உடைந்துள்ளது.

பலவித காரணங்களிடல் மக்கள் சாளம்பைக்குளத்திலிருந்து வெளியேறினர். அதனால் அந்தப்பகுதி காடாக மாறியது. ஆத்தோடு கருங்கல் தூண்;களால் கட்டப்பட்டிருந்த இலிங்க ஆலயமும் கைவிடப்பட்டிருப்பதாக மீளக்குடியேறிய மக்கள் தெரிவிக்கின்றனர். எஞ்சியிருந்த இலிங்கத்தின் மேல் பகுதியை மட்டும் எடுத்து வந்து சாளம்பைக் குளத்தின் கட்டில் வைத்து பிரதேச மக்கள் வழிபாடு செய்ய ஆரம்பித்துள்ளனர். இந்த இலிங்த்தின் அமைப்பும் அதில் உள்ள நாக பிராமி; எழுத்து வடிவங்களும் புராதனத்திற்கான சான்று பகருவதை பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு உறுதி செய்துள்ளார்.

**02.படம் :**
**சாளம்பைக் குள இலிங்கம்**

பாணன்கமம் (பனங்காமம்) பஞ்சலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட



மற்றைய இலிங்கம் ஓமந்தை குஞ்சுக்குளத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. ஒல்லாந்தரால் இந்த இலிங்கமும் ஆலயமும் சேதப்படுத்தப்பட்டிருந்தது. சாஸ்திரி கூழாங்குளவாசிகள் சேதமடைந்த இலிங்கத்தை எடுத்துச் சென்று பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருகின்றனர். இந்த விபரம் ஆலயத்தின் கும்பாபிஷேக மலரில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இலிங்கத்தின் உச்சியில் சேதமேற்பட்ட அடையாளம் இருக்கின்றது.

**03.படம் : சாஸ்திரி கூழாங்குளம் இலிங்கம்.**




பனங்காமம் (பாணன்கமம்) என அழைக்கப்படும் பிரிவில் இருக்கும் பஞ்ச இலிங்கேஸ்வரர் ஆலயம் கும்பாபிஷேகத்திற்காக பல ஆண்டுகளுக்கு முன்னர் மூடப்பட்டிருந்தது. அப்போது வெளிமண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த வெள்ளைக் கல்லில் பொளியப்பட்ட இலிங்கத்தை புகைப்படம் எடுக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது.



**04.படம் : பாணன்கமம்
வெள்ளைக்கல்லு இலிங்கம்.**

வெள்ளை இலிங்கத்திற்கு அருகே கறுப்புக் கல்லில் பொளியப்பட்ட இலிங்கமும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது

**படம் : கறுப்புக்கல்லு இலிங்கம்.**



அனைத்து இலிங்கங்;களும் சமகாலத்தில் பொளியப்பட்டவை என்பதற்கு இலிங்கங்களின் அமைப்பு முறையும் தோற்றங்களும் சான்றுகளாக அமைகின்றன. நாம் அங்கு சென்றபோது பாணன்கமம் பஞ்சலிங்கேஸ்வரர் ஆலயத்தின்; பிரதான இலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த மூலஸ்தானம் மூடப்பட்டிருருந்தது. எட்டு ஆண்டுகளின் பின்னர் எமது முயற்சியின் காரணமாக மூலஸ்தானம் திறக்கப்பட்டது. உள்ளே இருக்கும் ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கத்தை புகைப்படம் எடுக்க முடிந்தது. இலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஆவுடையாரில் ஏற்பட்டிருந்த சேதங்கள் திருத்தப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

**05. படம் : மூலஸ்தான இலிங்கம்**



**அடுத்த வாரமும்
இலிங்க பூமிக்கான
விபரங்கள் தொடரும்.**

### தி/கன்னியா இராவணேசுவரன் தமிழ் வித்தியாலயம் திரிகோணமலை

# அருள்மிகு தென்புலநாதர் அருட்கோல இராவணேசுவரம் கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா

**தி**ரிகோணமலை கன்னியா இராவணேசுவரன் தமிழ் பாடசாலையில் அமையப்பெற்ற அருள்மிகு தென்புலநாதர் அருட்கோல இராவணேசுவரம் ஆலயத்தில் செந்தமிழில் கடவுள் மங்கல நன்னீராட்டு பெருவிழா இடம் பெற்றது. கடந்த வீறியெழல் (சார்வரி ) ஆண்டு இரட்டைத் திங்கள் 18ம் நாள் (02 07 2020) வியாழனன்று பனை (அனுசம்) நாண் மீன் பதிற்றிருமைப் பிறைநாள் (வளர்பிறை துவாதசி) காலை 07.26 தொடக்கம் 08.56 வரையுள்ள பிறைத் தோற்ற வழிபாட்டு நாளில் (பிரதோசம்) அருள்மிகு தென்புலநாதர் அருட்கோல இராவணேசுவரம்கடவுள் மங்கல நீராட்டு பெருவிழா செந்தழிழால் பூசைகள் இடம் பெற்றன.

தற்போதுள்ள சமுக இடைவெளியைக் கருத்திற்கொண்டு ஒன்று கூடிய பெற்றோர்கள் மாணவர்கள் மத்தியில் சிவபக்தன் இராவணன் தென்புலநாதரை வணங்கும் காட்சி தரும் தவக்கோலமாக உள்ள கடவுளருக்கு செ ந்தமிழ் ஆகம முறைப்படி,செந்தமிழ் மந்திரங்கள் ஓதி வேள்விகள் நடைபெற்றன.

நடைபெற்ற கடவுள் மங்கல நன்னீராட்டு பெருவிழாவின்போது தென் கயிலை ஆதீனத்தின் முதற்குரு. தவத்திரு அகத்தியர் அடிகளார் அவர்களும்,இளையபட்டம் திருமூலர் தம்பிரான் அவர்களும் வேள்வியை நடாத்தினர். செந்தமிழ் ஆகம முறைப்படி,செந்தமிழ் மந்திரங்களால் தலைமை அருட்சுனைஞர் உயிரொளி சிவம் பிரதாபனார்,உதவி அருட்சுனைஞர்கள் தயாளன் ஐயா,சனுஜன்







ஐயா,ருபேஸ்கரன் ஐயா ஆகியோரால் மங்கல நிராட்டு நடைபெற்றன.

அருள்மிகு தென்புலநாதர் அருட்கோல இராவணேசுவரம் ஆலயத்தை நிறுவுதற்கும் கடவுள் மங்கல நன்னீராட்டுப் பெருவிழா உபயத்திற்கும், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சிவத்திரு..குணரட்ணம் ஸ்ரீ, சிவத்திரு.தெய்வேந்திரம்பிள்ளை சிதம்பரகுமார் ஆகியோரால் நன்கொடை வழங்கப்பட்டது.

அனைத்து நிர்வாக ஒழுங்குகளை ஏற்று முன்னின்று செயற்பட்ட அவுஜ்திரேலியாவைச் சேர்ந்த அறம் அறக்கட்டளை மற்றும் சைவமாணவர் சபை ஆகியோருக்குப் பாராட்டுக்கள்.









# மலையகம் நோக்கிய சுயதொழில் வேலைவாய்ப்புத் திட்டம்

**ஓம் நமசிவாய,**

27 06 2020 சனிக்கிழமை காலை 11 00 மணியளவில் ஹற்றன் கேகஸ் ஹேறல்ட் தோட்டம் டின்சின் பொகவந்தலாவ என்னும் இடத்தில் அன்பேசிவம். சிவனருட்சபையால் சுயதொழில் வேலைவாய்ப்புத் திட்டம் என்னும் தலைப்பில் கருத்தரங்கு இடம் பெற்றது.

திரிகோணமலை கென்கயிலை ஆதீனத்தின் தாய்ச்சபையான , அன்பேசிவம் .சிவனருட்சபையால் அறிமுகப்படுத்தப்படவுள்ள பல திட்டங்களில் ஒன்றான மலையகம் நோக்கிய சுயதொழில் வேலைவாய்ப்புத்திட்டக் கருத்தரங்கில் 50 ற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். அதிகளவிலான பெண்கள் கலந்து கொண்ட இக்கருத்தரங்கு பலராலும் பாராட்டத்க விதத்தில் அமைந்தது.

நிகழ்வில் முதலாவதாக மங்கள விளக்கேற்றல் வைபவம் இடம் பெற்றது.கோயில் தர்மகர்த்தா திரு.ரவீந்திரன், உதவிக்கல்விப் பணிப்பாளரும், அன்பே சிவம்,சிவனருட்சபையின் ஹற்றன் வலயத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு..சாந்தகுமார்,அன்பேசிவம் சிவனருட்சபையின் சுயதொழில் வேலைவாய்ப்புத்திட்ட ஆலோசகர் திருமதி யோகேஷ்வரி,அறநெறிப் பள்ளி ஆசிரியர் திருமதி இந்திரா ஆகியோர் மங்களவிளக்கு ஏற்றினார்கள். பின்னர் அறநெறிப்பள்ளி ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் கடவுள் வாழ்த்து பாடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மலையகத்திற்கான , அன்பேசிவம்.சிவனருட்சபையின் ஒருங்கிணைப்பாளர் திரு.திவாகர் அவர்கள் வரவேற்புரையை நிகழ்த்தினார். வரவேற்புரையைத் தொடரந்து பேசிய திரு. திவாகர் அவர்கள் தென்கயிலை ஆதீனத்தின் தாய்ச் சபையான அன்பேசிவம்.சிவனருட்சபையின் திட்டங்கள் பற்றியும் அதன் நோக்கங்கள் பற்றியும் விரிவாக எடுத்துக்கூறினார். அறிநெறி சார்ந்தும், சமுதாயம் தழுவிய ஆன்மீகம் சார்ந்தும் செய்யவிருக்கும் நடவடிக்கைகளை தெரிவித்த அவர் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் அறநெறிப்பள்ளி மாணவச் செல்வங்கள் ஒவ்வொருக்கும் தனியாக வங்கியில் சேமிப்புக் கணக்கை ஆரம்பித்து கொடுக்கும் அரிய திட்டத்தையும் விளக்கிக் கூறினார்.

அடுத்து, பிரான்சிலிருந்து தென்கயிலை ஆதீனத்தின் அனைத்துலக ஒருங்கிணைப்பாளரும், அன்பேசிவம்.சிவனருட்சபையின் பொதுச் செயலாளருமான தென்கயிலை சிவா அவர்கள் ஒலி வடிவில் உரை பதிவு செய்து அனுப்பிபிய செய்தி. மலையகம் ,வடக்கு,கிழக்கு பகுதிகளுக்கு தமது செயற்பாட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்த உருவாக்கி வைத்திருக்கும் மிகப்பெரிய வலைப்பின்னல் கொண்ட நிர்வாக ஒழுங்குகளை விளக்கினார். அத்துடன் தமது ஒரே










நோக்கம் பரந்து விரிந்த நிலையில் தமது தென்கயிலை ஆதீனமும், தாயச்சபையான அன்பேசிவம்.சிவனருட்சபையும் ஆன்மீக ரீதியில் சமூகமட்டத்தில் சைவ அறநெறியோடு வாழ வழியேற்படுத்திக் கொடுப்பதே தமது தலையாய கடமையெனக்கூறினார் . இனமத வேறுபாடின்றி கொரோனா தொற்றுக் காலத்தில் நிவாரணப் பணிகளைச் செய்த எமது தென்கயிலை ஆதீனமானது தனது ஆன்மீகச் செயற்பாடுகளை விரிவுபடுத்த மலையக மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் விரைவில் தென்கயிலை ஆதீனம் மலையகம் என்னும் கிளை ஆரம்பிக்கப்படும் என்னும் நற்செய்தியையும் தெரிவித்திருந்தார். அத்துடன் நிறைய திட்டங்களை வெளிப்படுத்திய அவர் , மக்களுக்குண்டான ஆரோக்கியம் சார்ந்த நீரிழிவு விழிப்புணர்வுப் பட்டறைப் பயிற்சி மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டத்தையும் ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்தார். மேற்படி உரை அடங்கிய வடிவம் இணையத்தடங்கல் காரணமாக ஒலிபரப்பு செய்ய முடியாத நிலையில் கைத்தொலைபேசியூடாக பரிமாற்றம் செய்யப்பட்டது.

தொடர்ந்து, திரு .சாந்தகுமார் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார் உரையின் தொடராக அவரின் தலைமையில் கருத்தரங்கு இடம் பெற்றது. கருத்தரங்கை தொடக்கி வைத்துப் பேசிய திரு சாந்தகுமார் அவர்கள் அறநெறி சார்ந்தும் சமதாயம் சார்ந்தும் நாம் ஒவ்வோருவரும் சிந்தித்த செயலாற்ற வேண்டிய காலகட்டம் இதுவென்றும், அறநெறிப் பள்ளிகளை ஆரம்பித்து மாணவர்களுக்கு போதிய ஆன்மீக , சமுதாய அறிவைப் பெருக்க வேண்டும் என்ற பொரள்படப் பேசினார் . இதே வேளை அன்பேசிவம் .சிவனருட்சபை மலையகம் நோக்கி முன்வைக்கின்ற ஒவ்வொரு திட்டங்களுக்கும் நாம் ஒருமித்து ஆதரவு கொடுத்து நம்மை நாமே பலப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடந்து, சைவநெறி ஆசிரிய ஆலோசகரும்,அன்பேசிவம் சிவனருட்சபையின் ஹற்றன் வலய உதவி ஒருங்கிணைப்பாளருமான திருமதி. . தமையந்தி அவர்கள் மலையக சமுதாயம், பொருளாதாரம்,கல்வி ,ஆன்மீகம் ஆகியவற்றில் முன்னிலை வகிக்க அனைவரும் பாடுபடவேண்டுமெனவும், கோரோனா தொற்றுக்குப் பின்னரான இக்காலப்பகுதியில் நாம் முன்மாதிரியாச் செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்ட அவர், அன்பேசிவம்.சிவனருட்சபையின் திட்டங்களை நடைமுறைப்படுத்த நாம் அனைவரும் ஆதரவு கொடுத்து செயற்படுவது பற்றியும் தெரிவித்தார்.

கருத்தரங்கில் இறுதியாகப் பேசிய திரு லோகேஷ்வரி அவர்கள் , சுயதொழில் வேலை வாய்ப்புத் திட்டத்தின் அவசியத்தையும், மலையக சமூகத்தினருக்கு இன்று முக்கியம் தேவைப்படும் தேவைகள் குறித்தும் விரவாக விளக்கினார். மலையக மக்களைச் சூழவுள்ள வளங்களைப் பயன்படுத்தி நாம் நிறையத் திட்டங்களை மேலும் நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் அதற்கு தன்னால் இயன்றளவு முயற்சிகளை செய்து தொழிற்பயிற்சிகளை உருவாக்கிக் கொடுத்து இந்த சுயதொழில் வேலைவாய்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வருவதாகவும் தெரிவித்தார்.

இறுதியாக அறநெறி ஆசிரியர் திருமதி இந்திரா அவர்கள் அன்பேசிவம் .சிவனருடசபைக்கு நன்றி தெரிவித்து பேசியதைத் தொடர்ந்து, திரு.திவாகர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்தார்.

**அன்பேசிவம். சிவனருட்சபை**
**தென்கயிலை ஆதீனம்**



கலாநிதிபால.
சிவகடாட்சம்

# பதார்த்த சூடாமணி

இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருபாலை என்னும் இடத்தில் வாழ்ந்த ஆயுள்வேத மருத்துவ அறிஞர் ஒருவர் இருபாலைச் செட்டியார் என்று அறியப்பட்டார். இவர் ஆக்கிய தமிழ் மருத்துவ நூல்களுள் ஒன்றான 'பதார்த்த சூடாமணி' நாம் உணவாக உட்கொள்ளும் காய்கறிகள்கீரைகள் மற்றும் இறைச்சி வகைகளின் குணங்கள் பற்றிக் கூறுவதாகும். மேற்படி நூலில் கூறப்படும் உணவுகள் சிலவற்றின் விளக்கங்கள் இக்கட்டுரைத்தொடரில் தரப்படுகின்றன.

## பொன்னாங்காணி

அதிகமாம் பொன்னாங்காணிக்
கரோசிநீர்க் கடுப்புப் பித்தம்
முதிர் சலரோகங் கண்ணோய்
மூலம்பீ நிசங்க யம்போம்
குதியினில் வாதமோடு கொடியபீ
லிகையும் போகும்
மதுரமா முண்ணக் காந்தன் மாறிடுங்
குளிர்ச்சிகண்டாய்

**இதன் பொருள்:** நீர்க்கடுப்பு பித்தம் சலரோகம் கண்ணோய் மூலவியாதி பீனிசம்கபம் குதிவாதம் என்பனதீரும். உண்பதற்கு சுவையானது. இதனை உணவிற் சேர்த்துக்கொண்டால் உடற்சூடு தணிந்து குளிர்ச்சி உண்டாகும்.

**மேலதிக விபரம்:** பொன்னாங்காணியைத் தொடர்ந்து உணவில் சேர்த்து வந்தால் கண்பார்வை நலமாகும். இந்தக்கீரையை நீராவியில் அவித்து சிறிதளவு நெய்யுடன் தொடர்ந்து 45நாட்கள் சாப் பிட்டுவந்தால் பல்வேறு கண்வியாதிகள் குணமாகும்.

ஒரு லீட்டர் பொன்னாங்காணிச் சாற்றுடன் கால் லீட்டர் நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச் சவேண்டும். இந்தக்கலவை கால் லீட்டராக வற்றியவுடன் அந்தத்தைலத்தை எடுத்துத் தலையில் தேய்த்துவரகண்பார்வை கூர்மை அடையும். ஞாபக சக்தியும் அதிகரிக்கும்.



பொன்னாங்காணி மூலவியாதி உடையோருக்கும் மருந்தாகப் பயன்படும். பொன்னாங்காணி இலைக ளுடன் உள்ளி மிளகு சேர்த்துத் தயாரிக்கப்படும் சூப் மூலவியாதிக்காரருக்கு நல்லது. அல்லது பொன்னாங் காணிச் சாற்றுடன் சம அளவு கரட்சாறும் சிறிதளவு இந்துப்பும்(rock salt)சேர்த்துக் குடித்துவரலாம்.

நீரிழிவு நோயாளர்க்கும் பொன்னாங்காணி சிறந்த உணவாகும். உணவு உண்டபின் இரத்தத்தில் அதிகரிக் கும்குளுக்கோசின் அளவை(post prandial glucose level)பொன்னாங்காணி குறைப்பதாக சமீபத்தைய ஆய்வுகள் சில தெரிவிக்கின்றன.

- Water amaranth, Sessile joyweed என்பன பொன்னாங்காணியின் ஆங்கிலப் பெயர்கள்
- Mukunawanna என்பதுஇதன் சிங்களமொழிப் பெயர்
- Alternanthera sessilis (L.) R.BR.EX DC.என் பது இதன் தாவரவியல் பெயர்.



## வல்லாரை

**வல்லாரை இலையை உண்ண**
**மடிந்திடும் பயித்தியங்கள்**
**அல்லாத கறைக்கி ராணி அனல்**
**உடம்பெரிப்பு மேகம்**
**பொல்லாத மற்று நோய்கள் போமென**
**நந்திக்கு அன்னாள்**
**எல்லார்க்கு முதல்வனாய**
**இறைபகர்ந்திட்ட வாறே.**

**இதன் பொருள்:** வல்லாரை உணவை உண்ண பைத்திய வியாதிகள் தீரும். வயிற்றோட்டம்மேக நோய் மற்றும் பொல்லாத நோய்கள் பலவும் போகு மெனஎல்லோர்க்கும் முதல்வனாகிய இறைவன் நந் திக்கு உரைத்தனன்.

**மேலதிகவிபரம்:** சொறி அரிப்பு போன்ற தோல் வியாதிகளால் அவதிப்படுவோருக்கு வல்லாரை மருந் தாகப் பயன்படுகிறது. சிறு வெட்டுக்காயங்கள் எரிகா யங்கள் போன்றவற்றுக்கு வெளிப்பிரயோகமாக வல் லாரை பயன்படுகிறது.

நரம்புத்தளர்ச்சியைப் போக்கி மனதுக்குப் புத்து ணர்வு தரக்கூடியது. பதட்டத்தைகுறைக்கவும் மனதில் அமைதியை ஏற்படுத்தவும் வல்லாரை உதவுகிறது. ஞாபகசக்தியை ஊக்குவிக்கும் குணம் வல்லாரைக்கு இருப்பதாக நம்பப்படுகிறது. இதன் காரணமாக அல்சைமர் (Alzheimer) போன்ற மறதி வியாதியால் பாதிக்கப்படுவோருக்கும் பயன்தரக்கூடியது.

இரத்தக்குழாய்களின் ஒடுங்கிவிரியும் சக்தியை (elasticity) ஊக்குவிப்பதால் இரத்தச் சுற்றொட் டத்தை சீராக்குவதன்மூலம் தளர்ந்து சுருண்டு கிடக்கும் வெரிக்கோஸ் (varicose) நாளங்களின் வீக்கத்தைக் குறைக்க உதவும்.

பீனிசம்மூக்குநீர்ப்பாய்ச்சல்(sinusitis)உள்ளவர் கள் முழுத்தாவரத்துடன் சிறிதளவு மிளகும் சீனியும் சேர்த்து கொதிக்கவைத்து எடுத்த குடிநீரை சில வாரங் கள் குடித்துவரலாம்.

தோல்வியாதி உடையவர்கள் உலர்த்தி எடுக்கப் பட்ட வல்லாரைத்தூள் அரை தேக்கரண்டியை ஒரு கப் தண்ணீருடன் சேர்த்துக் கொதிக்கவைத்துக்குடித்து வரலாம்.

வல்லாரையும் சிவப்பு வெங்காயமும் சேர்த்துத் தயா ரிக்கப்பட்ட சலாட்டை (salad)தொடர்ந்து சாப்பிட்டு வருவது இருமல் தடுமல் போன்றவற்றால் அவதிப்படு வோருக்கு நிவாரணம் கொடுக்கும்.

**வல்லாரைக் குடி நீர்:** வல்லாரை இலைகள் பன்னி ரண்டை ஒரு கோப்பைகொதிநீரில் போட்டுப் பத்துநிமி டங்கள் ஊறவிடவும். பின்னர் இக்குடினீரை வடித்தெ டுத்து தேவையான அளவு தேன் சேர்த்து குடிக்கவும். படுக்கைக்குப்போகுமுன் இதை அருந்தினால் சுகமான நித்திரை கிடைக்கும்.

இந்தக்கீரையை காக்கைவலிப்பால் அவதிப்படுவர்க ளுக்குக் குறிப்பாகச் சிறுவர்களுக்குக் கொடுக்கூடாது. வல்லாரையைத் தொடர்ந்து ஆறுவாரத்துக்குமேல் எடுக்கக்கூடாது என்றும் இரண்டு வார இடைவெளி விட்டு பின்னர் மீண்டும் எடுக்கலாம் என்றும் கூறப் படுகிறது.அளவுக்குமிஞ்சி வல்லாரை சாப்பிட்டால் தலைவலி தலைச்சுற்று என்பன ஏற்படலாம்.பதி னெட்டு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு வல்லா

ரையை கொடுக்கவேண்டாம் என்று அறிவுறுத்தப்படு கிறது.

- GotuKola என்ற வல்லரையின் சிங்களமொழிப் பெயரே இன்று உலகம் அறிந்த வர்த்தகப் பெய ராக உள்ளது.
- Centellaasiatica (L.) URBAN என்பது இதன் தாவரவியல் பெயர்.

## முருங்கை இலை பூ காய்

**உண்டிடு முருங்கை தன்னில் உறும்**
**இலை வாயு மந்தம்**
**அண்டிடா மயக்கம் தீரும்**
**அணுகிடும்பித்தம் பூவால்**
**கண்டகண் பசாட்டினோடு**
**கருங்கண்ணோய்ப்படலம் போகும்**
**மண்டுகாய் பெலன் உண்டாக்கும்**
**மறுவில் பத்தியத்திற்காமே.**



**இதன் பொருள்:** முருங்கை இலையை உண்பதால் வாய்வு மந்தம் என்பன சேராது. மயக்கம் தீரும். பித் தம் சேரும். முருங்கைப்பூ கண்படலம் போன்ற கண் ணோய்களுக்கு மருந்தாகும். முருங்கை உடலுக்குப் பலத்தைக்கொடுக்கும். இது ஒரு குற்றமும் இல்லாத பத்தியக்கறியாகும்.

**மேலதிக விபரம்:** உணவுப்பற்றாக்குறை காணப் படும் ஆபிரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் மாற்றுணவாக முருங்கை இலை காய் என்பன பயன்ப டுகின்றன. முருங்கை இலையில் புரதச்சத்துகல்சியம் இரும்பு என்பவற்றுடன் உடலில் வைட்டமின் அயாக மாற்றம்பெறும் betacarotene வைட்டமின் இ வைட் டமின்உஎன்பனவும் நிறைந்து காணப்படுகின்றன.

ஒரு முட்டை அல்லது ஒரு கப் பாலில் கிடைக்கும் கல் சியம் சத்து 100 கிராம் முருங்கை இலையில் கிடைக் கிறது.200கிராம் மாட்டிறைச்சியில் கிடைக்கும் இரும் புச்சத்தும் ஒரு கரட்டில் கிடைக்கும் வைட்டமின்அயும் ஒரு தோடம்பழத்தில் கிடைக்கும் வைட்டமின்இ யும்100கிராம் முருங்கை இலையில் கிடைகின்றது. ஆனால் இதிலுள்ள வைட்டமின் இ சமைக்கும்போது இழக்கப்பட்டுவிடுகிறது. இலைகளைச் சிலநிமிடங்க ளுக்குள் சமைத்து முடிப்பது நல்லது.

பிஞ்சு முருங்கைக்காயும் இவ்வாறே சத்துணவு நிரம்பப்பெற்றது. ஆபிரிக்காவில் முற்றிய முருங்கைக் காயின் விதைகளைப் பிரித்தெடுத்து வறுத்து உண் பார்கள். முருங்கை விதையில் இருந்து ஒரு வித எண்ணெய் பெறப்படுகிறது. எண்ணெய் எடுத்தபின் பெறப்படும் பிண்ணாக்கு பசளையாகவும் நீரைச் சுத்தப்படுத்தவும் கடல் நீரில் இருந்து உப்பை அகற் றவும் பயன்படுகிறது.

முருங்கையில் புற்றுநோய் எதிர்ப்புக்குணம் இருப் பதாகவும் அறியப்படுகிறது. இந்தவிடயத்தில் இதில் உள்ள பென்சைல் ஐசோ தையோசயனேற் (benzyl isothiocyanate) என்னும் இரசாயனம் உதவுகிறது. புற்றுநோய்க்கான இரசாயன சிகிச்சை பெறுபவர்க ளின் உயிர்க்கலங்களுக்கு இந்த இரசாயனம் வலுவ ளிக்கிறது. புறொஸ்ரேற் கான்சர்(prostate cancer) தோல் கான்சர் (skin cancer) உடையவர்களுக்கும் பலனளிக்கின்றது.

வாதம் முடக்குவாதம் மூட்டுவலி என்பவற்றுடன் வரும்வலி வீக்கம் பயன் தருகிறது.

முருங்கைக்காய்க்கு பாலுறவில் விருப்பத்தை ஏற் படுத்தும் குணமும் உள்ளது என்பது பாரம்பரிய நம்பிக்கையாகும்.

பாலூட்டும் தாய்மாருக்கு பாற்சுரப்பை அதிகரிக்கவும் முருங்கை இலை உதவுகிறது.

முருங்கை பாதுகாப்பானஉணவுநல்ல பத்தியக் கறிஎன்பது பொதுவான அபிப்பிராயம்.எனினும் கர்ப்பிணிப் பெண்கள்இதனைத்தவிர்ப்பது நல்லது. இந்தியாவின் உத்தரப்பிரதேசமாநிலத்தின் சில மாவட்டங்களில் இது கருக்கலைப்புக்குப் பயன்படுவ தாக அறியப்படுகிறது.

- Drumsticks, Indian horseradishஎன்பன முருங்கையின் ஆங்கிலப் பெயர்கள்
- Moringa oleifera LAM.என்பது இதன் தாவ ரவியல் பெயர்.



## கறிவேப்பிலை

**கருவேம்பின் இலை பூ நெய்யில்**
**கதித்த பொன்னிறமதாக**
**விரைவதாய் வறுத்துப் பின்னர்**
**மிளகு சீரகமோடு உப்பும்**
**உரைசெயும் கடுகு நல்ல வெந்தயம்**
**உறைப்புமிக்க**
**வர மிளகாய் மற்றெல்லாம்**
**வரிசையாய்ச் சேர்த்துக் கூட்டே**
**கூட்டியே சம்பீரத்தின் கொழுங்கனிச் சாறேயாதல்**
**நாட்டிய எகினில் உற்ற நற் பழப்புளியே யாதல்**
**ஆட்டிவிட்டு அரைத்துப் பாக்கின்**
**அளவதாய் அந்தி சந்தி**
**ஊட்டியே பசுமோர் உண்ண**
**ஒழிந்திடும் வாதம் வாயு**
**நற்சுவையாகும் உண்ண நன்மணம்**
**கொள்ளும் கொண்டால்**
**பின் சமித்திடவும் செய்யும் பின்னிய**
**மந்தம் போக்கும்**
**சொற்றிடு தேகத்திற்குச் சுகமதாம்**
**நாளும் உண்பாய்**
**அற்றம் இல்லாத வீதே அறைந்தனர்**
**பெரியோர்தாமே**

**பதார்த்த சூடாமணி**

**இதன் பொருள்:** *கறிவேம்பின் இலை மற்றும் பூ என்பவற்றை எண்ணெய்விட்டு சற்று வறுத்து எடுத்து அதனுடன் மிளகு சீரகம் உப்பு கடுகு வெந்தயம் உறைப்புக்கூடிய செத்தல் மிளகாய் என்பவற்றை ஒவ்வொன்றாக அளவுடன் சேர்த்துக் கூட்டி அரைத்துப் பின்னர் எலுமிச்சம் பழச்சாறு அல்லது பழப்புளிச்சாறு விட்டு அரைத்து எடுத்து இந்தப் பச்சடியில் ஒருபாக்களவு காலையும் மாலையும் சாப்பிட்டு பசுமோரும் குடித்துவர வாதம் வாய்வு என்பன ஒழிந்துவிடும். நல்ல மணமும் சுவையும் கொண்ட இந்த உணவு சமிபாட்டை ஊக்குவிக்கும். மந்தம் போக்கும். உடலுக்குச் சுகம்தரும். ஒவ்வொரு நாளும் சாப்பிடலாம். ஒரு கெடுதியும் இல்லாதது இது என்று பெரியோர்கள் கூறிவைத்துள்ளனர்.*

**மேலதிக விபரம்:** *கறிவேப்பிலையைத் தனியாகவோ உணவுடனோசேர்த்துச் சாப்பிட்டுவர இளவயதில் தலைமுடி நரைப்பதைத் தவிர்க்கலாம் என்பது பலரது நம்பிக்கை. வைட்டமின் அ செறிந்து காணப்படும் கறிவேப்பிலை கண்பார்வையை மேம்படுத்தவும் உதவுகின்றது.நூறு கிராம் வேப்பிலையை அரைத்து சாறு எடுக்கவும். இதனுடன் நூறு கிராம் தேங்காய் எண்ணெய் சேர்த்து இளஞ்சூட்டில் ஈரப்பதம் நீங்கும் வரை காய்ச்சி எடுக்கவும். இந்த எண்ணெயை தினசரி தலைக்குத் தேய்த்துவந்தால் இளவயதில் தலைநரை ஏற்படுவதைத் தவிர்க்கலாம். கண்பார்வைக்குறைவும் ஏற்படாது.*

*கறிவேப்பிலை நீரிழிவு நோய்க்குச் சிறந்த மருந்தாகும் என்பது மலேசியநாட்டுப் பாரம்பரிய மருத்துவர்களின் நம்பிக்கை. நீரிழிவுநோயாளர்க்கு ஏற்படக்கூடிய சிறுநீரகப்பாதிப்பைத் தவிர்ப்பதற்குக் கறிவேப்பிலை உதவும் என்பதும் இவர்களது நம்பிக்கை.*

*தினமும் காலையில் வெறும் வயிற்றில் பத்து கறிவேப்பிலைகள மென்று சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு கட்டுப்படும் என்கிறார்கள்.கறிவேப்பிலையை நிழலில் உலர்த்திக் காயவைத்துப் பொடியாக்கி வைத்துக்கொண்டு அதில் குடிநீர் தயாரித்துக் காலை மாலை குடித்துவந்தாலும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக்கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும் என்று கூறப்படுகிறது.*

*முயல்களில் செய்யப்பட்ட சமீபத்தைய ஆய்வு ஒன்று நீரிழிவின் காரணமாக ஏற்படும் சிறுநீரக் கோளாறுகளுக்குக் கறிவேப்பிலை மருந்தாகப் பயன்படக்கூடும் என்னும் நம்பிக்கைக்கு வலு ஊட்டுவதாக உள்ளது. (*Kesari AN1, Gupta RK, Watal G. Hypoglycemic effects of Murrayakoenigii on normal and alloxan&diabetic rabbits. J Ethnopharmacol. 2011 Apr 26;135(1):88&94.)

*கீமொதெரபி* (chemotherapy) *மற்றும் ரேடியோதெரப்பி* (radiotherapy) *ஆகிய புற்றுநோய்க்கான சிகிச்சைகளினால் ஏற்படக்கூடிய பக்கவிளைவுகளைக் குறைக்கும் குணம் கறிவேப்பிலைக்கு இருப்பதாகக் கூறப்படுகிறது.*

*ஈரலுக்குப் பாதுகாப்பு வழங்கக்கூடிய ஒட்சி எதிரிகள் கொண்டது இந்தக்கறிவேப்பிலை.*

## கறிவேப்பிலைப் பச்சடி செய்யும் முறை:

1. ஒரு பாத்திரத்தில் சிறிதளவு எண்ணெய் விட்டு கடுகு, அரைத்தக்கரண்டி கடலப்பருப்பு, ஒரு தேக்கரண்டி உழுத்தம்பருப்பு போட்டு தாளிக்கவும். இதனுடன் கறிவேப்பிலை இரண்டு கைப்பிடி, செத்தல் மிளகாய் 5 சேர்த்து வறுக்கவும். இவற்றுடன் இரண்டு மேசைக்கரண்டி தேங்காய்ப்பூ சேர்த்து வறுத்து எடுக்கவும். சூடு குறைத்ததும் உப்பும் புளியும் அளவுடன் சேர்த்து அரைத்து எடுக்கவும்.

இந்தப்பச்சடியை இட்டலி, தோசை, சோறு என்பவற்றுடன் சேர்த்து உண்ணலாம்.

2. பச்சைமிளகாயுடன் உப்புசேர்த்து அரைக்கவும். இதனுடன்கறிவேப்பிலை, வெங்காயம், உள்ளி சேர்த்து அரைக்கவும். பின்னர் தேங்காய்ப்பூ சேர்த்து அரைக்கவும். பின்னர் எலுமிச்சம்பழச்சாறு சேர்க்கவும்.

கவனத்துக்கு:சமீபத்தில் இந்தியாவில் இருந்து கறிவேப்பிலை இறக்குமதிசெய்யப்படுவதை இங்கிலாந்தும் ஐக்கிய அமெரிக்காவும் தடைசெய்திருப்பதாக இணையத்தளங்களில் செய்திகள் வெளியாகி இருந்தன. இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கறிவேப்பிலைகளில் அளவுக்கு மீறிய பூச்சிநாசினி மருந்துகள் காணப்பட்டதாகவும் சில இலைகளில் எலுமிச்சை தோடை போன்ற பிற தாவரங்களுக்குத் தொற்றக்கூடிய பூச்சிஇனம் ஒன்று காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.கடைகளில் இருந்து பெற்றுக்கொள்ளும் இலைகளை மிக நன்றாகக் கழுவிச் சுத்தப்படுத்திய பின்னரேயே அவற்றைக் கறிகளில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது இதன்மூலம் உணரப்படும். எலுமிச்சை, தோடை, லெமன் என்பனவும் கறிவேம்பும் கீக்கூஅஇஉஅஉ என்னும்ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த மரங்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையையும் இந்தியாவையும் தாயகமாகக் கொண்ட கறிவேப்பிலை மரம் இன்று தெற்காசியா முழுவதும் பரவிவிட்டது.

Curry leafஎன்பது கறிவேப்பிலையின் ஆங்கிலப்பெயர்.

Murraya koenigii (L.) Spreng.என்பது கறிவேப்பிலையின் தாவரவியல் பெயர்..

## முசுமுசுக்கை

தேடுதன் முசுமுசுக்கை
சேடமே வரட்சி தாகம்
ஓடரும் இருமல் பித்தம் உழலையே
சுரத்தை மாற்றும்
பதார்த்த சூடாமணி

**இதன் பொருள்:** சளி. வரட்சி, இருமல், பித்தம் காய்ச்சல் என்பவற்றுக்கு முசுமுசுக்கை மருந்தாகப் பயன்படுகிறது

இருமலுடன் ஈளை இரைப்பு புகைச்சல்
மருவுகின்ற நீர்த்தோஷ மாறும்– திருவுடைய
மானே முசுமுசுக்கை மாமூலி அவ்விலையைத்
தானே யருந்துவர்க்குத் தான்
பதார்த்தகுண சிந்தாமணி



**இதன் பொருள்:** இருமலுடன் கூடிய ஆஸ்த்மா, இரைப்பு, நீர்த்தோஷம் என்பன முசுமுசுக்கையால் தீரும்.

**மேலதிகவிபரம்:** இலங்கையின் வரண்ட பிரதேசங்களில் வீட்டுச்சுவரின் வெளிப்புறத்திலும் சுற்றுமதிற் சுவர்களிலும் இந்தக்கொடி சுயமாக வளர்ந்து படர்ந்திருப்பதைஅவதானிக்கமுடியும்.

நுரையீரல் மற்றும் சுவாசக்குழாய் சம்பந்தப்பட்ட இருமல், இரைப்பு, சளிக்கட்டு போன்ற வியாதிகளுக்கு முசுமுசுக்கை மருந்தாகப்பயன் படுகிறது. ஆஸ்த்மா நோயாளர் முசுமுசுக்கை இலையை அரிந்து வெங்காயத்த்யடன் சேர்த்து நெய்விட்டுவதக்கி பகல் உணவுடன் சேர்த்துச் ச



எப்பிட்டுவர ஆஸ்த்மா குணங்கள் குறையும் என்று கூறப்படுகிறது.

'இருகுரங்கின்கை' என்பது முசுமுசுக்கையின் மற்றுமொரு பெயர். முசு என்பது குரங்கைக் குறிக்கும் ஒரு சொல்.

Mukia maderaspatana (L.) M.ROEMERஎன்பது முசுமுசுக்கையின் தாவரவியல் பெயர்.

## குறிஞ்சா

குறிஞ்சாவின் இலைநோய்
புண்ணே கோரமாம் வாயுவாதம்
குறுகிட வொட்டா தென்று கூறும்
வாகடங்கள் எல்லாம்

பதார்த்த சூடாமணி



Wattakaka volubilis

**இதன்பொருள்:** குறிஞ்சா இலைக்குப் புண், வாய்வு, வாதம் என்பன வராமல் தடுக்கும் குணம் இருப்பதாக வைத்திய நூல்கள் எல்லாம் கூறுகின்றன.

கரப்பான் கிரந்தி கடியவிரும் புண்காச
முரப்பாம் விஷபாக மோட்டு- நிரைப்பான
அக்கரத்தை மாற்றிவிடு மாயிழையே
பித்தமுமாந்
தக்குறிஞ் சாவினிலை தான்.

பதார்த்தகுணசிந்தாமணி

**இதன்பொருள்:** பெண்ணே! குறிஞ்சா இலை பித்தத்தை ஏற்படுத்தும். கரப்பான், கிரந்தி, புண், விஷங்கள் என்பவற்றைத் துரத்திவிடும். அக்கரம் எனப்படும் ஒருவகை பேதிக்கு மருந்தாகும்.

## குறிஞ்சா சிறு குறிஞ்சா



Gymnemasylvestre

**மேலதிகவிபரம்:** சமையலுக்கு உதவும் இலைக்கறி வகைகளுள் குறிஞ்சா இலையும் ஒன்று. நீரிழிவு நோயாளர் இந்தக்கீரையை அடிக்கடி தமது உணவில் சேர்த்துக்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். நீரிழிவுக்கு மருந்தாகப் பயன்படும் சிறுகுறிஞ்சா வேறு இந்தக்குறிஞ்சா வேறு என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். கனடா போன்ற வெளிநாடுகளில் கடைகளில் பச்சை இலையாக விற்பனைக்கு வருவது குறிஞ்சா மட்டுமே. சிறுகுறிஞ்சா இல்லை. இரண்டும் இருவேறு தாவரங்கள்.

பெண்களுக்கு மாதவிலக்கின் போது ஏற்படக் கூடிய அதிக அளவிலான இரத்தப்போக்கைக் கட்டுப்படுத்த குறிஞ்சா இலைசேர்த்துத் தயாரிக்கப்பட்ட குறிஞ்சாயிலைப் பிட்டு உணவாகப் பயன்படுத்தப் பெறுகிறது. தென்மராட்சிப்பகுதியில் குறிஞ்சாயிலைக்குப்பதிலாகப் பொருத்துமான்கொடி என்னும்



மூலிகை பயன்படுவதாக அறியமுடிகிறது. இந்த மூலிகையை இன்னமும் இனங்காணமுடியவில்லை. விபரம் அறிந்தவர்கள் இந்த மூலிகைபற்றி அறியத் தந்தால் நல்லது.

குறிஞ்சாய் வறை செய்முறை: குறிஞ்சாயிலைக ளைக் கழுவாமல் ஈரத்துணி ஒன்றினால் துடைக்க வேண்டும். கழுவினால் கசப்புச்சுவை அதிகமாகும் என்று அனுபவம் உள்ளவர்கள் கூறுகிறார்கள். இவ்வாறு துடைத்து எடுத்தஇலைகளை (250-300 கிராம்)ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி உருட்டி வைத்துக்கொண்டு மிகமெல்லிய துண்டுகளாக அரி யவும். இதனுள் தேங்காய்ப்பூ (3 மேசைக்கரண்டி), மஞ்சள்தூள் (1/4 தேக்கரண்டி) உப்பு (தேவை யான அளவு) போட்டுப் பிரட்டிவைக்கவும்.அடுப் பில் சட்டியை வைத்து சட்டியில் நல்லெண்ணெய் (3 மேசைக்கரண்டி) விட்டு அதில் மூன்று செத்தல் மிளகாயும் சின்னவெங்காயமும் (2 மேசைக்க ரண்டி) அரிந்துபோட்டுத் தாளிக்கவும் வதங்கியதும் பிரட்டிவைத்துள்ள குறிஞ்சாயிலையைக் கொட்டிப் பிரட்டிஎடுக்கவும். கூடிய நேரம் வறுக்கத்தேவை யில்லை.

குறிஞ்சாய்ப் பிட்டு செய்முறை:குறிஞ்சாயிலை ஒருகட்டு எடுத்து வெய்யிலில் உலர்த்தவேண்டும். நன்கு காய்ந்ததும் உரலில்போட்டு மாவாக இடித்து அரிதட்டில்போட்டு அரித்து எடுக்கவும். குறிஞ்சா மாவை அரைக்கிலோ சிவப்புப் பச்சைஅரிசி மாவு டன் கலந்து சிறிதளவு உப்புடன்சுடுதண்ணீர்விட்டுப் பதமாகக் குழைத்து சின்னச்சின்னக் குறுணியாய் உலுத்திஅடுத்து அதனுடன் தேங்காய்ப்பூ தேவை யான அளவு சேர்த்துப் புட்டாக அவித்து எடுக்கவும். அவிந்தைபின் விரும்பினால் சிறிதளவு பட்டர் சேர்த் துக்கிளறிவிடலாம்.

Wattakakavolubillis (L.f.)Stapf. என்பது குறிஞ்சாவின் தாவர இயல் பெயர்.



# கதிர்காம பாதயாத்திரை

